ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம ௵ ஆவணி ௴ கதிர் 2

செப்டம்பர்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றுட உலகம்	—		19
கலீலியோ	—	"வான சாஸ்திரி"	21
சப்பாத்துக் கள்ளி உபயோகம்	—	"சங்கரகுமாரன்"	22
சமுதாய ஒப்பந்தம்	—	வெ. சா.	25
தேடி யெடுத்த திரவியங்கள்	—	"பால போதகர்"	34
போலிச் சீர்திருத்தம்	—	நா. லக்ஷ்மி நரசிம்மம்	35
மீராபாயின் சரித்திரமும் பாடல்களும்		"நிர்வேத சைதன்யர்"	36

தேசத் தொண்டு —கே. ஜி. கிருஷ்ணன்'' B. Sc. (Hons.) 42
சிலப்பதிகாரம் அந்திச்சிறப்பு — மா. சர்மா, B. A. (Hons.) 46
பூமிக்கு அடியில் ஓடும் ரயில்பாதை ''நாராயண சிவன்'' 51
உலக அரசியல் அமைப்புகள் — கே. சாமிநாதன். 54
மோஹன தாஸ் கரம் சந்த் காந்தி ''ஒரு காங்கிரஸ் வாதி'' 58

"ஜோதி" கிடைக்குமிடங்கள்

1 என். மாணிக்கம் பிள்ளை
நியூஸ் ஏஜெண்ட்,
தென்பாதி, சீகாழி.

2 கே. மகாதேவ ஐயர்.
நியூஸ் ஏஜெண்ட்,
பேரளம், தஞ்சை ஜில்லா.

3 பாரதி பிக்சர் பாலேஸ்,
கல்லுக் கட்டி, காரைக்குடி.

4 'சக்தி'' காரியாலயம்,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

5 ஆர். வி. பதிராவ்
நியூஸ் ஏஜெண்ட்,
திருநெல்வேலி ஜங்க்ஷன்

6 தி. ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ்,
48, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை.

ஜோதி

சுடர் 4 | செப்டம்பர்-1940 | கதிர் 2

தலைமையும் தகுதியும்

இந்தியாவின் அரசியல் லட்சியம் இன்னதுதான் என்று கண்டிப்பாக நிர்ணயித்து, அந்த லட்சியத்திற்கு அதனை ஒழுங்கு பட அழைத்துச் செல்லும் ஆற்றலுடைய தலைவர்கள் இப்பொழுது இல்லை; அப்படிப்பட்ட தலைவர்கள் இன்னும் தோன்றவில்லை; இந்த அபிப்பிராயத்தை நாம் பல முறை தெரிவித்திருக்கிறோம். இதனைச் சிறிது விளக்கிக் காட்ட வேண்டுமென்பதற்காகவே, நமது எழுதுகோலை இன்று எடுக்கிறோம்.

ஒருவன் மகா டக்திசாலியா யிருக்கலாம்; பலசாலியா யிருக்கலாம்; வாசாலகமுடையவனா யிருக்கலாம்; குணவந்தனாகவும் இருக்கலாம்; ஆனால் தலைவனாக இருக்க முடியாது. முதல் தரத்து மனிதர்கள்தான் முதல் தரத்துத் தலைவர்களாக வருகிறார்கள் என்பது நியதியில்லை அநேகமாக, இரண்டாந் தரத்து மனிதர்கள்தான் முதல் தரத்துத் தலைவர்களாக வருகிறார்கள்; முதல் தரத்து மனிதர்கள், இரண்டாந் தரத்துத் தலைவர்களா யிருக்கிறார்கள். உலக அரசியல் சரித்திரத்தில் இந்த நியதியைத்தான் நாம் கண்டு வருகிறோம்.

நமது தாய் நாடு—புண்ணியம் நிறைந்த பாரதபூமி—முதல் தரத்து மனிதர்களைச் ஸிருஷ்டித்துக் கொடுப்பதில் தலை சிறந்து நிற்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவர்களெல்லாரும் இரண்டாந் தரத்துத் தலைவர்களாகவே ஆகிவிடுகிறார்கள். புத்தர் காலத்திலிருந்து நாளது வரையில், பாரத தேசத்து இதிகாசத்தை நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் பிணக்குகளும், ஏற்றந் தாழ்வுகளும் நிறைந்திருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் என்ன? சரியான தலைமையில்லாததுதான். இந்த நிழல் இன்னும் நம்மை விடவில்லை. நமது இன்றைய தலைவர்கள், எதற்கு முக்

கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடாமல், வெறும் விவகாரப் பேச்சுக்களைப் பேசி, அதன் மூலமாக ஜனங்களுடைய அன்பையும் மதிப்பையும் பெற்று விட விரும்புகிறார்கள் என்று சொன்னால், அஃது அவர்களுடைய குற்றமல்ல; பரம்பரை வாசனை. இந்தப் பரம்பரைதான் யாது?

வாழ்க்கை யென்னும் வண்டிக்கு, லௌகிகம், பாரமார்த்திகம் என்னும் இரண்டு மாடுகளையும் ஜதையாகப் பூட்டி ஓட்ட வேண்டியதே நியதி. அப்படித்தான் நாம் இரண்டாயிர வருஷ கால முன்னர் வரை செய்து வந்தோம். ஆனால் புத்தர் தோன்றிய காலத்திற்குப் பிறகு, பாரமார்த்திகம் என்னும் ஒற்றை மாட்டை மட்டும் பூட்டி வாழ்க்கை வண்டியை ஓட்ட ஆரம்பித்தோம். விளைவு என்ன? ஒற்றைப் பார்வை; ஒடிந்த வாழ்க்கை; அடிமை மனப்பான்மை. அந்நிய ஆதிக்கம் ஏற்படுவதற்கு இவற்றை விட வேறென்ன சௌகரியங்கள் வேண்டும்?

சோமநாதபுரத்துக் கோயிலை, கஜினி முகம்மது வந்து தாக்கிய போது, அந்தக் கோயிலின் பாது காப்பாளர்களும், கடவுளின் தூதர்களுமான பிராமணர்கள் என்ன செய்தார்கள்? எதிரியோடு எதிர்த்துப் போராடவில்லை; கோயிலைப் பாது காக்கும் முயற்சியும் செய்யவில்லை; விக்கிரகத்தைப் போய்க் கட்டிக் கொண்டார்கள். கல்லான அந்தக் கடவுள் கண் திறந்து பார்க்கவில்லை. அந்தப் பிராமணர்கள் காப்பாற்றப் படவுமில்லை. தஞ்சாவூரிலே ஓர் அரசன் ஆண்டு கொண்டிருந்தானாம். சத்துருக்கள் திரண்டு வருகிறார்களென்று படைத் தலைவன் தெரிவித்தான். 'கடவுளின் கட்டளையை மீற முடியுமா?' வென்று சொல்லி, அவ்வரசன், துளசி தளங்களை எடுத்துக் கோட்டை வாயிலில் போட்டு வரும்படி உத்திர விட்டானாம். இவைகளெல்லாம் கட்டுக் கதைகளோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் இந்த மாதிரியான மனப்பான்மை—அதாவது நம்முடைய பொறுப்பை, கண்ணுக்குத் தெரியாத கடவுள் மீது சுமத்தி விட்டு நாம் ஒதுங்கி விடுகிற மனப்பான்மை—இன்றும் நம்மிடத்திலே நிலவியிருக்கிறதென்று, சொன்னால், அதற்கு—இந்த மனப்பான்மைக்கு—ஏதோ ஒரு பூர்வ பரம்பரை இருக்கத்தானே வேண்டும். அந்தப் பரம்பரைதான், மேலே எடுத்துக் காட்டிய சம்பவங்களோ என்னவோ? நமது இன்றைய தலைவர்கள் நம்மிடம் வந்து என்ன உபதேசம் செய்கிறார்கள்? 'பிரிட்டன் தன்னுடைய தற்போதைய சங்கடமான நிலைமையில் கூட இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்க மாட்டேனென்கிறதே' என்றுதான் கூறுகிறார்களே தவிர, அந்தச் சுயராஜ்யத்தைப் பெற நாம் எவ்வளவு தூரம் தகுதிப் பட்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதேயில்லை; தலைவர்கள், 'பாமரர்'களாகிய நம்மைத் தகுதிப் படுத்தவுமில்லை. ஆம்; தகுதியுள்ளவர்கள் தானே பிறரைத் தகுதிப்படுத்த முடியும்? இந்த மாதிரி நமது தலைவர்கள் சொல்வது எதைக் காட்டுகிறது? பொறுப்பைக் கழித்துவிடுகிற மனப்பான்மையைத் தான் காட்டுகிறது.

புத்தர்பிரான், அரசாயிருந்து துறந்தார். இருந்து, அநுபவித்து, பிறகு, துறப்பதுதான் பெருமை; அதில்தான் அர்த்தமுமிருக்கிறது. ஆனால், புத்தர்பிரான் துறவு பூண்டார் என்பதை மட்டும் குறியாகக் கொண்டு, அவருடைய பிற்காலத்தில், இல்லாதவர்களும் துறக்க ஆரம்பித்து விட்டார்கள். துறவுக்கு ஒரு பெருமை அளிக்கப்பட்டது. தரித்திரத்திற்கு ஒரு மகிமை ஏற்பட்டது. 'எளிய வாழ்க்கை; எளிய வாழ்க்கை' யென்று சொல்லி மனிதத் தன்மையை இழந்து விட்டோம். இந்தப் பரம்பரை வாசனை நம்மை இன்னும் விடவில்லை. நாமும் அதை விடாப்பிடியாகக் கொண்டிருக்கிறோம். நமது தலைவர்களும், 'தரித்திர நாராயணனை'த்தான் ஸ்துதி பாடுகிறார்களே தவிர, போர்க்களத்திலே பார்த்தனைப் பார்த்து 'போர் புரி' என்று கட்டளையிட்ட வீர நாராயணனை, தன்னைக் கொல்ல வந்த பூதகியைக் கொன்ற புருஷோத்தமனைப் போற்றுகிறார்களில்லை.

ஒருகாலத்தில் நமக்கு எல்லாம் இருந்தன. அப்பொழுது, புத்தர் பிரான் போன்றவர்கள் தோன்றி, 'இருப்பதை இருத்தி வைத்துக் கொண்டிருப்பதிலே பயனில்லை; பிறருடைய நன்மைக்கு வழங்க வேண்டும்' என்ற உண்மையை ஜனங்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு, துறவைப் பற்றி வலியுறுத்த ஆரம்பித்தார்கள். நமக்குத் துறவு மனப்பான்மை ஏற்பட்டது. எல்லாவற்றையும் துறந்தோம். ஆம்; செல்வம், செல்வாக்கு, சுதந்திரம் எல்லாவற்றையும் துறந்தோம். துறப்பதற்கு இன்னும் ஒன்றுமில்லை. இன்னமும் துறவைப்பற்றி உபதேசிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது? இருக்கிறவர்கள்தான் துறக்க முடியும். இல்லாதவர்கள் எதைத் துறப்பது? அஜீர்ணக்காரன், உபவாசம் இருப்பதிலே அர்த்தமிருக்கிறது; பட்டினி கிடந்து சாகும் நிலையிலிருக்கிறவன் உபவாசம் இருக்கிறானென்று சொன்னால், அந்த உபவாசத்திற்கே ஒரு பரிகாசமல்லவா? சகல கலா வல்லவனான ஒரு புலவன், சபைதனில் வந்து 'நான் ஒன்றுந் தெரியாதவன்' என்று அவையடக்கம் சொன்னால், அதற்கு அர்த்தமுண்டு. நிரட்சர குட்சி ஒருவன், பல பேர் முன்னிலையில் பல்லிளித்துக் கொண்டு வந்து நின்று 'வெந்தறு கண் வேழத்தை வேரிக் கமலத் தந்துவினால் கட்டச் சமைவதொக்கும்' என்று அவையடக்கம் சொன்னால் அதற்கு ஏதேனும் அர்த்தமிருக்கிறதா? ஒரு பணக்காரன், ஓர் ஏழைக்கு அனுதாபம் செலுத்துவதற்குப் பொருள் உண்டு. நித்திய தரித்திரனான ஒருவன், மாஜி பணக்காரனைப் பார்த்து, அனுதாபப் படுவதில் என்ன பொருள் இருக்கிறது? சுதந்திரமுள்ள ஒரு நாட்டார், சுதந்திரமிழந்த நாட்டினருக்கு அனுதாபம் செலுத்தினால், அந்த அனுதாபத்திற்கு ஏதேனும் பெருமையுண்டு; பலனும் இருக்கலாம். அடிமையிலே உழன்று கிடக்கிற ஒரு நாட்டார், சமீப காலத்திலேயே சுதந்திரத்தை இழந்து விட்ட ஒரு நாட்டாரைப் பார்த்து அனுதாபஞ் செலுத்தினால் அதற்கு என்ன பொருள்? 'ஐயோ, என் கதிக்கு நீயும் வந்து விட்டாயா!' என்று வேண்டுமானால் தோழமை காட்டலாம். ஆக, ஏற்கனவே சுதந்

திரத்தைத் துறந்து விட்டிருக்கிற நமக்கு, இன்னும் துறவைப் பற்றியும் எளிய வாழ்க்கையைப் பற்றியும் நமது தலைவர்கள் உபதேசம் செய்து வருகிறார்களென்று சொன்னால் அது பரம்பரை வாசனையில்லாது வேறென்ன?

எளிய வாழ்க்கை யென்று சொன்னாலே நமக்கு வெறுப்பாயிருக்கிறது. இயற்கை வாழ்வு என்று சொல்லுங்கள். அது வேறு விஷயம். அதற்கு அர்த்த மிருக்கிறது. வறுமைக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்? பரிபூரணமாயுள்ளதுதான் வாழ்க்கை. அஃதில்லாத நிலைமை—அதாவது நிரம்பியில்லாதது—வாழ்க்கை எப்படியாகும்? எளிமை யென்று சொன்னாலே குறைபாடு என்றுதானே அர்த்தம். அந்தக் குறைபாடு இருக்கிற போது, அது வாழ்க்கை எப்படியாகும்? சுதந்திர மில்லாத வாழ்க்கை பூரண வாழ்க்கை யாகாதே.

புத்தர் காலந் தொடங்கி நாம் மேலிருந்து கீழிறங்கி வந்தவர்களுக்குத்தான் மரியாதை செலுத்தி வந்திருக்கிறோம். கீழிருந்து மேலே செல்ல முயன்றவர்கள் மதிப்புப் பெறாமலே மறைந்து விட்டிருக்கிறார்கள். அநேக சங்கடங்களும் பட்டிருக்கிறார்கள். நந்தனும் திருப்பாணாழ்வாரும் பட்ட துன்பங்களை யார்தான் அறியார்? "புத்தர் காலத்திற்குப் பிறகு, மன்னாதி மன்னர் பலர் முடி துறந்து வனஞ் சென்றார்கள். பிட்சை யெடுத்து வாழ்க்கை நடத்தினார்கள். சமுதாயத்தில் இவர்கள் கௌரவிக்கப் பட்டார்கள். ஏன்! வில் ஏந்திய கையில் புல் ஏந்தியதற்காக. 'எவ்வளவோ சுகபோகங்களை அநுபவித்து வந்த இவர், இப்படி கஷ்ட வாழ்க்கையை நடத்துகிறாரே' என்பதற்காக ஜனங்கள் இவர்களிடத்தில் மரியாதை செலுத்தினார்கள். அதாவது, கஷ்டப் படக் கூடாதவர்கள், கஷ்டப் பட்டால், அவர்களைப் பார்த்து யாருக்குமே ஓர் அநுதாபம் உண்டாகும். அந்த அநுதாபத்தைத்தான், நாம் பக்தி யென்றும், மரியாதை யென்றும் மெருகிட்டு அழைக்கிறோம். ஆனால் வாழ்க்கையின் கீழ் அந்தஸ்திலேயிருந்தவன், தன் முயற்சியாலும், திறமையாலும் மேல் நிலைக்கு வர முயன்றால் அதை நாம் ஆதரித்திருக்கிறோமா? இல்லவே இல்லை. பாரதக் கதையை நாம் நம்புவோமானால், வேடுவனாகிய ஏகலைவன், வில் வித்தையில் நிபுணனாவதை, உயர் குலத்தவனாகிய துரோணன் விரும்பவே யில்லை. அதற்காக, ஏகலைவனுடைய கட்டை விரலைக் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டு விட்டான். இது எதைக் காட்டுகின்றது? கீழிருந்து மேலே போனவர்களுக்கு நாம் மதிப்புக் கொடுக்கவில்லை. அவர்களை ஆதரித்து ஊக்கங் காட்டவுமில்லை. இந்தப் பரம்பரை வாசனை, இன்றைய நமது தேசிய அரசியல் வாழ்க்கையிலும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் வட்டாரத்திற்குள் சென்று சிறிது நேரம் அங்கு வீசுகிற காற்றைச் சுவாசித்துப் பாருங்கள். 'காந்தியா? நேருவா? பட்டேலா? ஹா! ஹா! ஆயிரக் கணக்காகச் சம்பாதித்து இப்பொழுது எல்லாவற்றையும் துறந்து விட்டு, கதருடுத்து, மூன்றாவது வகுப்பு ரெயில் வண்டியில் பிரயாணஞ் செய்கிறார்களே. என்ன தியாகம்! என்ன தியாகம்!' இப்படி யெல்லாம் ஜனங்கள் பேசுவதை நீங்

கள் கேட்கலாம். தலைவர்களுடைய தியாகத்திற்குத்தான் மதிப்புக் கொடுக்கப்படுகிறதே தவிர, அவர்களுடைய திறமையைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. காந்தியோ, நேருவோ, பட்டேலோ அல்லது வேறு தலைவர்களோ, ஆயிரக் கணக்காகச் சம்பாதித் திராவிட்டால், அவர்களுக்கு இப்பொழுது இந்த மதிப்பு ஏற்பட்டிருக்குமா? அவர்களை நாம் எந்த நோக்கோடு பார்க்கிறோம். மாஜி பணக்காரர்கள் என்ற நோக்கோடுதான். அப்படி யிருந்தவர்கள் இப்படியாகி விட்டார்களே என்பதற்காக அவர்களைப் பாராட்டுகிறோமே தவிர, எப்படி யிருந்தவர்கள் இப்படி யாகி யிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களைப் பாராட்டுகிறோமில்லை. காங்கிரஸ் கூட்டங்களிலே கூட நீங்கள் பார்க்கலாம். பணக்காரர்கள், தற்காலிகமாகக் கதருடுத்துக்கொண்டு வந்தால் கூட அவர்களுக்குத்தான் முக்கியத்துவம்; அவர்களுக்குத்தான் பதவி. பணமில்லாத திறமைசாலிகளுக்குப் பின் பக்கத்தில் எப்பொழுதும் இடம் காலியா யிருக்கும். எளிய வாழ்க்கை யென்று சொல்லிக் கொண்டே, பணக்கார மனப்பான்மை காங்கிரசில் ஊர்ஜித மடைந்து வருகிறது.

இந்தத் துறவு மனப்பான்மையானது அளவுக்கு மீறி நம்மிடத்தில் ஊறிப் போய் விட்டதனால்தான், நாம் ஆழமான அடிமைத் தனத்தில் விழுந்து விட்டோம். அதாவது, நமக்குச் சொந்தமே யில்லாத ஒரு பொருளைக் கூட நாம் துறந்து விட்டு, அதற்கு ஒரு தத்துவமும் பெருமையும் கற்பிக்கத் தொடங்கி விட்டோம். இந்த விஷயத்தில் நமது முன்னோர்கள் நன்றாக வழிகாட்டி யிருக்கிறார்கள்! சத்தியத்தைக் காப்பாற்றுவதாகிற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு, அரிச்சந்திரன், விசுவாமித்திரனுக்குத் தன் ராஜ்யத்தை ஒப்புக் கொடுத்து விட்டு, நாட்டினின்று வெளியேறி விட்டான். அது மட்டுமா? தன் மனைவியையும் மகனையும் விற்று விட்டான். ஆனால் அஃது அவனுடைய சொந்த விஷயம்; குடும்ப விஷயம். ராஜ்யத்தை, ஜனங்களுடைய ராஜ்யத்தை, அவர்களுடைய சம்மதி யில்லாமல், வேறொருவனிடம் ஒப்படைக்க அவனுக்கு என்ன அதிகாரமிருக்கிறது? யார் சொத்தை யார் துறப்பது? ராஜ்யம் என்பது, ஒரு தனிப்பட்ட மனிதனுடைய சொத்தல்ல. ஜனங்களுடைய சொத்து. அந்த ஜனங்களின் பிரதிநிதியாக இருந்து ராஜ்ய விவகாரங்களைக் கவனிக்கிறவன் அரசன். அப்படிக் கவனித்துப் பரிபாலித்து வருவது அவனுடைய கடமை. அந்தக் கடமையைத் தவிர அவனுக்கு வேறெவ்விதமான உரிமையும் கிடையாது. இப்படி யிருக்க, அரிச்சந்திரன், சத்தியத்திற்காக ராஜ்யத்தைத் துறந்து விட்டானென்று சொன்னால், அவன் கடமையினின்று பிறழ்ந்தவன் என்று அர்த்தப் படாதா? நள மகாராஜன், தன் சகோதரன் புஷ்கரனோடு, ராஜ்யத்தையே பந்தயமாக வைத்துச் சூதாடித் தோற்று விட்டான். காரிருளில் கானகத்தே காதலியைக் கைவிட்டு விட்டான். அப்படி விட்டுப் போனது அவன் சொந்த விவகாரம். ராஜ்யத்தைப் பணயமாக வைத்துச் சூதாட அவனுக்கு என்ன உரிமை யிருக்கிறது? இப்படி நமது புராண இதிகா

சங்களிலிருந்து எத்தனையோ உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். கடவுளின் காம இச்சையைப் பூர்த்தி செய்வதற்காகத் தங்கள் மனைவிமாரை அந்தக் கடவுளிடம் ஒப்படைத்த பக்தர்களையும் சிரங்கவித்து, கரங்குவித்து நாம் இப்பொழுது வணங்குகிறோமில்லையா? நாம் இப்பொழுது எதற்காக இவைகளை எடுத்துக் காட்டுகிறோ மென்றால், துறவு என்பது உரிமை யல்லாதனவற்றுள் கூடப் புகுந்து, நமது எண்ணங்களை எப்படி அழுக வைத்து விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத் தான்.

நம்முடைய தேசிய வாழ்க்கையில் கூட இப்பொழுது பார்க்கலாமே. இந்தியதேசியப் பிரதிநிதித்துவ சபை காங்கிரஸ் என்று சொல்கிறோம். அந்தக் காங்கிரசில் மகாத்மா காந்தி ஓர் அங்கத்தினர் இல்லை. ஆனால் அதன் தலைவர் என்ற தோரணையில், அவர் ராஜப் பிரதிநிதியால் அழைக்கப்படுகிறார். எதற்காக? சொந்த விஷயங்களைப் பற்றி இருவரும் பேசிக் கொள்வதற்காகவா? இல்லை; இல்லை. இந்தியாவின் எதிர்கால 'தேசீய வாழ்வை நிர்ணயிக்கும் விஷயமாகவே இருவரும் கலந்து பேசுகிறார்கள். பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்துப் பேசுகிற போதும், தம் சொந்த தோரணையிலேயே ராஜப் பிரதிநிதியைக் கண்டு பேசியதாகக் காந்தியடிகள் கூறுகிறார். இதைப் பற்றி நமக்கு ஆட்சேபமே கிடையாது. ஆனால் காங்கிரஸின் உரிமை, கடமை, பிரதிநிதித்துவத் தன்மை இவை யெல்லாம் என்னவாயின? துறந்தவர்கள் உரிமையாளர்களாகிறார்கள்; உரிமையாளர்கள், தங்கள் உரிமையைத் துறக்கிறார்கள். இது நமக்குப் புதிராகவே இருக்கிறது. இதே மாதிரிதான், காங்கிரஸ் பக்தர்கள் பலர், சுயமாகச் சிந்தனை செய்யும் உரிமையைச் சாதாரண அங்கத்தினர்கள் துறந்து விட வேண்டுமென்றும், அந்த உரிமை தலைவர்களுக்குத்தான் உண்டென்றும் கூறுகிறார்கள். சமீபத்தில் கூட தமிழ் நாட்டில் ஒரு தலைவர் பொதுக் கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருந்த பொழுது அவர் சொன்ன கருத்துக்கு மாறாகக் கூட்டத்திலிருந்த நண்பர் ஒருவர் ஏதோ கேள்வி கேட்டாராம். 'மகாத்மா கர்ந்தியை விட நீங்கள் புத்திசாலி யல்ல' என்று அந்த நண்பருக்கு அந்தத் தலைவர் 'ஆணித்தரமாக'ப் பதில் சொன்னாராம். அந்த நண்பர், புத்திசாலியோ இல்லையோ நமக்குத் தெரியாது. மகாத்மா காந்தி புத்திசாலி என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். எல்லோரையும் விட அதி தீட்சண்ய புத்தி அவருக்குண்டு என்பதையும் நாம் ஒப்புக் கொள்கிறோம். அந்தத் தீட்சண்ய அறிவுக்கு நாம் ஒரு முறையல்ல மூன்று முறை வலம் வருகிறோம்; சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறோம். ஆனால் தீட்சண்ய அறிவு என்பது அவருக்கு மட்டும் உரிமைப் பொருளல்லவென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அஃது எல்லாருக்கும் பொர்துவான சொத்து. இந்த மாதிரி, அறிவு உரிமையை ஒருவரிடமே ஒப்புவித்து விடுவதை மகாத்மா காந்தியே விரும்பவில்லை யென்பதை நாம் அறிவோம்.

சுமார் பதினாறு வருஷங்களுக்கு முந்தி (17-4-1924ல்) மகாத்மா காந்தி

'யங் இந்தியா' பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"பள்ளிக்கூட ஆசிரியர்களும் லாயர்களும் தேசத்திற்காகச் செய்திருக்கும் தியாகங்களை நான் குறைத்துப் பேசவில்லை. தாதாபாயும் கோகலேயும் பள்ளிக்கூட ஆசிரியர்கள்; பிரோஸிஷா மேத்தாவும் பத்ருத்தீன் தயாப்ஜியும் லாயர்கள். ஆனால் இந்தப் பிரபலஸ்தர்களுக்குத்தான் அறிவும், தலைமை வகிக்கும் திறமையும் சொந்த உரிமை என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்."

எதற்காக இந்த உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறோமென்றால், ஜனங்களின் சுய எண்ணத்தை, சுயமாகச் சிந்திக்கிற சக்தியை எப்படி நமது தலைவர்கள் அழுத்தி வைக்க முயற்சி செய்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்.

இவ்வளவு தூரம் நமது பரம்பரையை இழுத்துக் கொண்டு வந்து பேசுவானேன் என்று நண்பர்கள் கேட்கலாம். நமது தற்போதைய தேசியத் தலைமையின், தகுதியின்மையை விளக்கிக் காட்டுவதற்குத்தான். காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்ட நடவடிக்கைகளை நாம்படித்துப் பார்க்கிறபோது நாட்கள் கணக்காகக் கூடிப் பேசுகிறார்கள்; மணிக்கணக்காக ஆலோசனை செய்கிறார்கள்; நூற்றுக் கணக்கான வார்த்தைகள் நிரம்பிய தீர்மானங்களையும் நிறைவேற்றுகிறார்கள். எதற்காக இந்த ஆலோசனை, இவ்வளவு பெரிய தீர்மானம் என்று பார்த்தால், அதுதான் நமக்குப் புரிய மாட்டேனென்கிறது. ராஜப் பிரதிநிதி ஏதோ ஒரு வார்த்தை சொல்லி விட்டார் என்றால், உடனே காரியக் கமிட்டி கூடி விடுகிறது. பத்திரிகைகளில் பத்தி பத்தியாய்ச் செய்திகள் வெளியாகின்றன. 'அந்தத் தலைவர் இப்படிப் புன்சிரிப்புச் செய்தார்; இந்தத் தலைவருடைய முகபாவனையிலிருந்து, தலைவர்களிடத்தில் கருத்து வேற்றுமையே கிடையா தென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது' என்பன போன்ற செய்திகள் ஜரூராக ஜனங்களுக்குத் தெரிவிக்கப் படுகின்றன. தீர்மானமும் நிறைவேறி கூட்டமும் கலைந்தவுடன், அந்தத் தீர்மானத்தைப் பற்றித்தான் எத்தனை வியாக்கியானங்கள்! எத்தனை கூட்டங்கள்! ஒவ்வொரு தடவையும் நிறைவேற்றப் படுகிற தீர்மானமும் முன்னேற்றத்தின் அறிகுறிதான்! நமது தேசிய சக்திகளை ஒன்று படுத்தும் முயற்சிதான்! திறந்திருக்கிற சமாதானக் கதவு மூடப்படுவதே கிடையாது! சென்ற ஒரு வருஷ காலமாக, காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றி யிருக்கிற தீர்மானங்களைப் படித்து, யாருடைய மனதேனும் சலித்துப் போகவில்லையென்றால், அந்த உள்ளத்தை, மனோதத்துவ சாஸ்திரிகளின் ஆராய்ச்சிக்கு அனுப்ப வேண்டியதுதான். யாரோ ஓர் ஆங்கில அறிஞன் கூறிய மாதிரி, நமது தலைவர்கள் ஆடம்பரமானதும், சொல்லடுக்குகள் நிறைந்ததுமான பிரசங்கங்களைச் செய்வதில் சமர்த்தர்கள் என்பதை நாம் சந்தோஷத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டும். நமது தலைவர்கள் முன்னும் பார்ப்பதில்லை; பின்னும் பார்ப்பதில்லை; தங்களைச் சுற்றித்தான் பார்க்கிறார்கள். இதனாலேயே, இவர்கள் பல பிரச்னைகளைக் கிளப்பி, சில பிரச்னை

களைத் தீர்த்து வைக்கிறார்கள். ஒரு திட்டத்தைப் பற்றி அல்லது ஒரு பிரச்னையைப் பற்றி இவர்கள் எவ்வளவு உற்சாகத்துடன் பேசுகிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அந்தத் திட்டம் அல்லது பிரச்னை பழைய தஸ்தாவேஜுகளில் போய்ச் சேர்ந்து விடுகிறது. உதாரணமாக, முதல் காங்கிரசிலிருந்து, இந்திய அரசாங்கத்தின் ராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமென்றும், இரண்டாவது காங்கிரசிலிருந்து நீதி இலாகாவையும் நிருவாக இலாகாவையும் பிரிக்க வேண்டுமென்றும் பிரதி வருஷமும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. ஆனால் இந்தச் சில்லரைச் சீர்திருத்தங்கள் இன்னும் செய்யப் படவேயில்லை. செய்யப் படுவதற்குக் காங்கிரஸ் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், சிலர் கூறலாம், 'இவை யெல்லாம் பழைய காங்கிரஸ்களில்; இப்பொழுதைய காங்கிரஸ்களில்—அதாவது காந்தியடிகளின் தலைமைக்குப் பிறகு—இப்படி யெல்லாம் இல்லை; நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம்; எவ்வளவு விழிப் படைந் திருக்கிறோம்.' என்று. முன்னேற்ற மடைந்திருக்கிறோ மென்பதற்கு அறிகுறியாக, முதலாவது மைல்கல் கூட நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. விழிப்படைந்திருக்கிறோ மென்பதற் கறிகுறியாக, சுதந்திர ரேகை கூட நமது கண்ணில் படவில்லை. 'பாமர ஜனங்களோடு காங்கிரஸ் நேரான தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்று லட்சுமணபுரி காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் என்னவாயிற்று? ஹரிபுரா காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட தேசியக் கல்வித் திட்டத் தீர்மானம் என்னவாயிற்று? திரிபுரி காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட சுதேச சமஸ்தானங்கள் சம்பந்தமான தீர்மானம் என்னவாயிற்று? இவை யெல்லாம் போகட்டும். அ. இ. கா. கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, எந்தெந்த மாகாணங்களில் தொண்டர் படைகள் ஏற்பட்டு எவ்வளவு தூரம் வளர்ச்சி யடைந்திருக்கின்றன?

நமது தலைவர்களுக்கு உழைப்புச் சக்தி நிறைய இருக்கிறது. ஆனால் அந்தச் சக்தியை, ஒழுங்கான பாதையில் செலுத்தக் கூடிய ஆற்றல் மட்டும் இல்லை. காங்கிரஸ் கட்சியினர், மாகாண அரசாங்க நிருவாகத்தை ஏற்று நடத்தி வந்தபோது, ஓய்வில்லாமல்தான் வேலை செய்தார்கள்; ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணஞ் செய்தார்கள். ஆனால் கண்ட பலன் என்ன? ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு ஒரு ஜீவகளை ஏற்படக் கூடியமாதிரி ஒரு காரியங்கூட நடைபெற வில்லை. மதுவிலக்குத் திட்டத்தை இதற்குப் பதிலாகச் சுட்டிக் காட்டுவார்கள் என்பதை நாம் அறிவோம். சென்னை மாகாணத்திலுள்ள ஒரு சில ஜில்லாவாசிகளின் பொருளாதார அந்தஸ்து, இந்தத் திட்டத்தின் பயனாக உயர்ந் திருக்கலாமோ என்னவோ? ஆனால் இந்தியாவில் மொத்தம் நூற்றுக்கு எத்தனை பேருடைய பொருளாதார அந்தஸ்து உயர்ந்திருக்கிறது காங்கிரஸ் கட்சியினரின் நிருவாகத்தின் கீழ்?

ஒரு விவகாரத்தை எடுத்துக் கொண்டால் அதை உடனே பைசல் செய்து விட்டு வேறொரு விவகாரத்திற்குப் போவோம் என்பதே நமது

தலைவர்களுக்குக் கிடையாது. எந்தப் பிரச்னையையும் தள்ளிக் கொடுப்பதிலே நமது தலைவர்களுக்குத் தனிப் பெருமை. வார்தா கல்வித் திட்டம் என்று சொன்னார்கள். அதைப் பற்றிச் சிறிது காலம் வரை, வாதப் பிரதி வாதங்கள் பலமாக நடைபெற்றன. சில இடங்களில் உற்சாகம் காட்டப்பட்டது. ஆனால் இப்பொழுது—ஏன்? ஒரு வருஷகாலத்துக்கு முந்தி யிருந்தே—எல்லாம் கிணற்றில் கல் விழுந்த மாதிரி அடங்கி விட்டன. பண்டித ஜவஹர்லால்நேரு தலைமையில் தேசியத் தொழில் திட்டக் கமிட்டி என்று அடிக்கடி கூட்டங்கள் நடைபெறுகின்றன. எந்தெந்தத் தொழில்களை எங்கெங்கு ஆரம்பிக்கலாம், எப்படி ஆரம்பிக்கலாம் என்பன போன்ற ஆராய்ச்சிகள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது வரை, ஒரு தொழில் முயற்சியாவது ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தவிர, அந்நிய அரசியல் ஆதிக்கத்தின் கீழ் இந்தத் தொழில் திட்டங்கள் எப்படி வெற்றிகரமாக நடைபெற முடியும்? அரசியல் சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் நெருங்கிய தொடர்புடையன. ஒன்றின்றி, மற்றொன்று கிட்டாது. அப்படியிருக்க, அந்நிய அரசியலைத் தாங்கிக் கொண்டிருக்கிற முதலாளி ஸ்தம்பங்களின் ஆதரவு பெற்று, தேசியத் தொழில் திட்டங்களை நிறைவேற்ற நமது தேசியத் தலைவர்கள் முயல்வது ஆச்சரியமாகவே இருக்கிறது

நமது தேசிய இயக்கத்தின் தலைமை ஸ்தானம் ஏன் இப்படி தடுமாற்றத்திலேயே இருக்கிறது? ஏன் எப்பொழுதும் சமரசப் பான்மை கொண்டே வாழ்கிறது? இதனின்று இது மீள முடியாதா? இதற்கு மேல் செல்ல முடியாதா? துரதிருஷ்டவசமாக, நமது தற்போதைய தலைமை ஸ்தானம், இப்பொழுதுள்ள நிலைமையினின்று மீளவும் முடியாது; இதற்கு மேல் செல்லவும் முடியாது. இதுவே நமது ஊர்ஜிதமான அபிப்பிராயம். யாராருக்கு எவ்வளவு சக்தியுண்டோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் காரியங்களைச் செய்ய முடியும். கட்டை வண்டியிலேறிக் கொண்டு, மணிக்குக் காத வழி தூரம் போக வேண்டுமென்று சொன்னால், அது நடக்கிற காரியமா? முதுகு வளைந்து, நரம்பு தளர்ந்து, கண்பார்வை மங்கி யிருக்கும் ஒருவனிடம், நூறு பவுண்ட் கனமுள்ள ஓர் இரும்புத் துண்டைத் தூக்கு என்று சொன்னால் அவன் என்ன செய்வான் பாவம்! கனகாம்பரம் என்கிற புஷ்பம், பார்வைக்கென்னவோ அழகாகத்தானிருக்கிறது. ஆனால் அதில் வாசனையில்லையே. ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குப் பெயர்ந்து செல்கிற போது ஏற்படுகிற இடைக்காலம் இருக்கிறதே அந்தக் காலத்தில் சில வேதனைகள் ஏற்படுவதுண்டு. இதற்கு பிரசவத் திராவஸ்தை என்று பெயர். ஒரு நாட்டின் அரசியல் வளர்ச்சியில், இந்த மாதிரியான இடைக்காலங்களும், அந்தக் காலங்களில் சில அவஸ்தைகளும் ஏற்படுவது சகஜந்தான். இந்த மாதிரியான வேதனைக் காலங்களில் வாழும் அரசியல்தலைவர்கள், எப்பொழுதுமே தர்ம சங்கடமான நிலைமையில் வைக்கப்படுவார்கள். இவர்கள், பழமையினால் விரட்டியடிக்கப்பட்டவர்கள். இவர்களுக்குப் பழமையின் மீது வெறுப்பில்லையாயினும், பழமை, இவர்

களின் மீது வெறுப்புக் கொண்டுதான் இவர்களைப் புறக்கணித்து விட்டது. இங்ஙனம் புறக்கணிக்கப்பட்டதையே வியாஜமாக வைத்துக் கொண்டு இவர்கள், புதுமையுடன் கைகோத்து முன்னேறிச் செல்லலாம். ஆனால் இவர்களால் அப்படி முன்னேறிச் செல்ல முடியாது. ஏனென்றால், பழமையின் மீது தாங்கள் கொண்டிருக்கும் மோகத்தை இவர்கள் இன்னும் விட்டு விடவில்லை. இதனால்தான் இவர்கள் அவஸ்தைப்படும் நிலையிலிருக்கிறார்கள். இவர்களால் யுக ஸந்தி ஏற்படாது. அந்த யுக ஸந்தி ஏற்படுவதற்கு முன்னர் உண்டாகும் வேதனைகளை எப்படியாவது சமாளித்துக் கொண்டு போக வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இவர்கள் காரியங்களைச் செய்வார்கள். ஒவ்வொரு நாட்டின் அரசியல் சரித்திரத்திலும் இந்தமாதிரியான அவஸ்தைகளையும் தலைவர்களையும் நாம் சந்திக்கிறோம். இத்தலியில், முஸோலினி 1923ம் வருஷம் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டான். கண்டிப்பான தோரணையில் விவகாரங்களை நடத்தத் தொடங்கினான். இத்தலியில் நவயுகம் பிறந்தது. அந்த நவயுகம், வெளியுலகத்திற்கு ஒரு தூமகேது மாதிரி இருக்கலாம். அது வேறு விஷயம். இத்தலியைப் பொறுத்த மட்டில் புதிய சகாப்தம் பிறந்தது. அவ்வளவுதான் நமக்குத் தேவை. இந்தப் புதிய சகாப்தம் பிறப்பதற்கு முன்னர், இத்தலி எவ்வளவோ வேதனைப் பட்டது. இந்த வேதனைக் காலத்திலிருந்த அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் மகா மேதாவிகள். செஞ்ஞோர் நிட்டி என்ன, செஞ்ஞோர் ஆர்லாண்டோ என்ன, (இந்த ஆர்லாண்டோதான் வார்சேல் சமாதான மகாநாட்டில் இத்தலியின் பிரதிநிதியாக ஆஜராயிருந்தவன்; பிரபலமான வக்கீல்.) இவர்களுக்கு முன்னேயிருந்த ஸான்னினோ என்ன, ஸாலண்ட்ரா என்ன எல்லாரும் லேசான பேர்வழிகளா? எல்லோரும் முதல் தரத்து மனிதர்கள்; ஆனால் இரண்டாந் தரத்துத் தலைவர்களாயிருந்தார்கள்; இதனால்தான் கால வெள்ளத்திலே அடித்துக் கொண்டு போகப் பட்டு விட்டார்கள். ஜெர்மனியில், 1918ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் முடிந்தது முதல் 1933ம் வருஷம் ஹிட்லர் பதவிக்கு வருகிற வரையில்—அந்த இடைக் காலத்தில் இருந்த அரசியல் தலைவர்கள் சாமர்த்திய சாலிகள். வய்மார் குடியரசுத் திட்டத்தின் கீழ், முதல் பிரசிடெண்டாக நியமனம் பெற்ற ஈபர்ட் முதல் ப்ருனிங் வரையில் இருந்த அத்தனை பேரும் சிறந்த ராஜ தந்திரிகள். ஆனால் தலைமையைப் பொறுத்த மட்டில் தீண்டப் படாதவர்களாகவே இருந்தார்கள். ருஷ்யாவில் 1918ம் வருஷம் புரட்சி உண்டாகி சோவியத் ஆட்சி முறை ஏற்படுவதற்கு முன்னர், அரசியல் தலைவர்களாயிருந்த கெரென்ஸ்கி முதலாயினோர் பேரறிஞர்கள்; எதையும் சுலபமாக வியாக்கியானஞ் செய்து விடக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள். ஆனால், தேசம் இவர்களை, தலைமை ஸ்தானத்தினின்று அப்புறப்படுத்தி விட்டது. இந்த மாதிரி சரித்திர உதாரணங்களை நாம் எடுத்துக் காட்டலாம். ஆக, ஒரு தேசத்தினுடைய பிரயத்திராவஸ்தையின் ஆரம்ப தசையில் முதல் தரத்து மனிதர்களும் இரண்டாந் தரத்துத் தலைவர்களுந்தான் தோன்றுவார்கள். பெரிய எண்ணங்களும் சிறிய மனிதர்

களும் பொருத்தமில்லாமல் உதயமாவார்கள். இ. டி. ரேமண்ட் என்ற ஓர் ஆங்கில அறிஞன் 'தணிக்கை செய்யப் படாத பிரபலஸ்தர்கள்' என்ற ஒரு நூல் எழுதி அதில், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளிற் சிலரைப் பற்றி குணதோஷ ஆராய்ச்சி செய்திருக்கிறான். அதில் ஓரிடத்தில் கூறுகிறான்:—

> பதினெட்டாவது நூற்றாண்டு பிரான்சில், மனிதர்கள் சிறியவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் பெரியவைகளாயிருந்தன. 1918ம் வருஷத்து இங்கிலாந்தில், மனிதர்கள் பெரியவர்கள்; ஆனால் அவர்களுடைய எண்ணங்களும் வார்த்தைகளும் சிறியவை.

இந்த மேற்கோளின் பிந்திய பாகம், நமது தலைவர்களுக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது? நமது தேசம் ஏறக்குறைய ஐம்பது வருஷ காலமாக பிரபத்திராவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் தான் நமது தலைவர்களும் இப்படியிருக்கிறார்கள்.

நமது காங்கிரஸ் வட்டாரத்தில் வக்கீல் மனப்பான்மை குடி கொண்டிருக்கிறதென்று நாம் கூறிக் கொண்டு வந்திருக்கிறோம். இதைக் கண்டு சிலருக்கு வருத்தங் கூட ஏற்பட்டிருக்கலாமோ என்னவோ? ஆயினும் நாம் என் செய்வோம்? உண்மையை ஒளிக்க முடியாதல்லவா? வேண்டுமானால் எந்த நாட்டு அரசியல் சரித்திரத்தையேனும் நீங்கள் எடுத்து ஆராய்ந்து பாருங்கள். சட்ட புத்தகத்தைப் புரட்டிப்பார்த்து, ஒவ்வொன்றுக்கும் பலவித வியாக்கியானங்கள் செய்து கொண்டிருக்கிற நியாயவாதிகளால் எந்த நாடேனும் விமோசனம் அடைந்திருக்கிறதா? கிடையவே கிடையாது. இத்தாலியைப் புனர் ஜீவனஸ்திதிக்குக் கொண்டுவந்த முஸோலினி ஒரு வக்கீலல்ல; ஜெர்மனியின் அதி நாயகனான ஹிட்லர் ஒரு வக்கீலல்ல; துருக்கியின் தந்தையான கமால் அத்தாதுர்க் ஒரு வக்கீலல்ல; ருஷ்யாவை, ஜார் ஆட்சியினின்று விடுவித்த லெனினோ, லெனின் அரசியல் வாரிசான ஸ்டாலினோ வக்கீல்களல்ல; சீனாவில் மஞ்சு ஏகாதிபத்தியத்தை அகற்றி 1912ம் வருஷம் குடியரசை ஸ்தாபித்த ஸன்-யாட்-ஸென் ஒரு வக்கீலல்ல; ஜப்பான், உலக வல்லரசுகளின் மத்தியில் சம அந்தஸ்துடன் வாழ்ந்து நிற்பதற்கு ஆதிகாரணர்களாயிருந்தவர்கள் இரண்டு பேர். அவர்கள் யமகாடா, ஈட்டோ என்ற இருவர். ஒருவன், ஜப்பானின் அரசியல் வாழ்வை நிர்ணயித்தவன்; மற்றொருவன், ராணுவ பலத்தைத் தூக்கிக் கொடுத்தவன். இருவரும் வக்கீல்களல்ல. அமெரிக்கப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி, அங்குக் குடியரசு ஏற்பட்டதும் அதற்கு முதல் பிரசிடென்டாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கௌரவத்தைப் பெற்ற ஜார்ஜ் வாஷிங்டன் ஒரு வக்கீலல்ல. போலந்து, இன்று சுதந்திரத்தை இழந்து விட்டு நின்றாலும் அதன் சுதந்திரத்திற்காக அநேக தியாகங்களைச் செய்து அதற்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த பில்ஸுட்ஸ்கி ஒரு வக்கீலல்ல. இன்று பட்டுப் போன மரம் போல ஜெக்கோஸ்லோவேகியா இருந்தாலும், இதன் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தாமஸ் மஸாரிக் ஒரு வக்கீலல்ல.

ஐர்லாந்தில் சுதந்திர விருட்சத்தை வளர்த்த ஆர்தர் கிரிப்பித்ஸ், மைக்கேல் காலின்ஸ், டிவேலரா முதலிய அத்தனை பேரும் வக்கீல்களல்ல. இப்படியாகத்தான் உலகசரித்திரம் சாட்சி கூறுகிறது. இஃதொரு பக்கத்துக் காட்சி. இன்னொரு பக்கத்துக் காட்சியையும் பார்க்க வேண்டாமா?

கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி வெற்றிகரமாக முடியவில்லை. மீண்டும் பிரான்சில் முடியாட்சி ஏற்பட்ட விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. இந்தப் புரட்சிக் காலத்தில் அதிக செல்வாக்குடன் விளங்கினவர்கள் இரண்டுபேர். அவர்கள் முறையே டாண்டன் என்பவனும் ரோபெஸ்பியர் என்பவனும். புரட்சிவிளக்குக்குத் தூண்டுகோல் போல் இருந்தவர்கள் இந்த இருவரும். ஆனால், பின்னர் அந்த விளக்கே இவர்களைத் தன்னிடத்தில் ஐக்கியப் படுத்திக் கொண்டுவிட்டது. இவர்கள் இரண்டு பேரும் யார் தெரியுமா? பிரபல வக்கீல்கள்! மேற்படி புரட்சியின் போது, பிரான்சில், குடியரசு என்ற பெயரால் ஓர் அரசாங்க ஸ்தாபனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. இந்த அரசாங்கம், மன்னராட்சியை வீழ்த்தி விட்டோம் என்ற பெருமிதத்தில், ஹாலந்து, ஆஸ்திரியா முதலிய முடியாட்சி நாடுகளின் மீது படையெடுத்தது. தோல்வி மேல் தோல்விதான் கிடைத்தது. உள் நாட்டிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. இவைகளையெல்லாம் சமாளித்து, பிரான்சில் அசைக்க முடியாத ஒரு குடியரசை ஸ்தாபித்துவிட வேண்டுமென்று சொல்லி, (1793ம் வருஷம்) பன்னிரண்டு பேரடங்கிய பொது ஜனப் பாதுகாப்புக் கமிட்டியொன்று ஏற்படுத்தினார்கள். இந்தப் பன்னிரண்டு பேரில் எட்டு பேர் வக்கீல்கள். விளைவு என்ன? கட்சிச் சண்டைகள்; முடியாட்சி ஸ்தாபிதம். ருஷ்யாவில் ஜார் ஆட்சிக்குப் பிறகு தற்காலிக அரசாங்கம் ஒன்று ஏற்பட்டது. இதனைத் தலைமை பூண்டு நடத்தியவன் கெரென்ஸ்கி என்பவன். இவன் ஒரு வக்கீல். இவன் நிருவாகத்தினால் உண்டான பலன்? உள்நாட்டுச் சண்டை. நிருவாகத்தைக் கண்டிப்பான தோரணையில் நடத்தத் தெரியாமல், நாட்டை அல்லலுக்குட்படுத்திய இந்த கெரென்ஸ்கி, ருஷ்யாவில் சோவியத் அரசாங்கம் ஏற்பட்டவுடன் வெளிநாடுகளுக்கு ஓடிப் போய்விட்டான். ஓடித்தான் போனானே; அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருக்கக் கூடாதா? இல்லை. அறிஞனல்லவா? வக்கீலல்லவா? சும்மாயிருக்க முடியுமா? 'சுதந்திரம்' என்பதைப் பற்றிப் பல பிரசங்கங்கள் செய்தான். 'சுதந்திரத்தின் சிதைவு' என்னும் பெயரால் ஒரு நூலும் எழுதியிருக்கிறான். நல்ல தருணத்தில் தலைமைப் பதவியை ராஜீநாமா செய்து ஜெக்கோஸ்லோவேகியாவினின்று வெளியேறிவிட்ட டாக்டர் பெனேஷ் 'ஜனநாயக'த்தைப் பற்றி அமெரிக்காவில் சரமாரியாகப் பிரசங்கங்கள் செய்யவில்லையா? ஜனநாயகத்தைப்பற்றி ஒரு நூலும் எழுதவில்லையா? இதுதான், இவர்களுடைய வாழ்க்கையில் நகைச்சுவை தரத்தக்க விஷயங்கள். உட்ரோ வில்ஸன் சர்வதேச சங்கக் குழந்தையைப் பெற்றெடுத்தான்; உலக சமாதானத்திற்காக பதினான்கு 'பாயிண்டுகளை'க்கிளத்தினான். பாவம்,

அந்தச் சர்வதேச சங்கக்குழந்தை இப்பொழுது எந்த மூலையில் அழுது கொண்டிருக்கிறதோ தெரியவில்லை. பதினைந்து பாயிண்டுகளும், திசைக்கு மூன்றரை விகிதம் பங்கு பிரித்துக் கொண்டு நான்குதிசைகளிலும்பறந்து விட்டன. அந்த பதினைந்து பாயிண்டுகளின் பேரில்தான் இப்பொழுது உலக சமாதானம் நிலவுகிறது!! இந்த வில்ஸன் யார் தெரியுமா? வக்கீலாக வளர்ந்து அரசியல் வாதியாகப் புஷ்பித்தவன்தான். ஸ்பெயின் குடியரசு, இருப்பதா, இறப்பதா என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டு தளபதி பிராங்கோ படையுடன் போராடிக் கொண்டிருந்த கடைசி தருணத்தில் அந்தக் குடியரசு அரசாங்கத்தின் பிரசிடெண்டு பதவியை ராஜீநாமா செய்து விட்டு, பிரான்சுக்கு ஓடிப் போய் விட்ட மானுயுவல் அஜானு ஒரு பிரபல வக்கீல். எகிப்தில், சுதந்திர இயக்கத்திற்கு அடிகோலிய 'வாப்து கட்சி' இப்பொழுது உருத் தெரியாமல் இருக்கிறது. எகிப்தின் இன்றைய அரசியல் அந்தஸ்தை பிரிட்டிஷ் ஆதிக்க நிழல்தான் பாதுகாத்து வருகிறது. இந்த 'வாப்து' கட்சியின் ஸ்தாபகனை ஜாக்லுல் பாஷா ஒரு வக்கீல்; இந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களில் பெரும்பாலோர் வக்கீல்கள்.

இனி, பாரத நாட்டின் தலைமைத் திரையைத் தூக்கிப் பார்ப்போம். இந்திய தேசிய காங்கிரஸின் ஐம்பத்து மூன்றாவது கூட்டம் இந்த வருஷம் மார்ச் மாதம் ராம்காரில் மௌலானா அபுல் கலாம் அஸாத்தின் தலைமையில் நடைபெற்றது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கும். இந்த ஐம்பத்து மூன்று காங்கிரஸ்களுக்கு, நாற்பத்தாறு பேர் தலைமை வகித்திருக்கிறார்கள். (ஒருவரே, இரண்டு முறை மூன்று முறை தலைமை வகித்திருக்கிறார்களல்லவா? அதனால்தான், நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கைக்கும் தலைவர்களின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் வருகிறது) இந்த நாற்பத்தாறு பேரில் மூன்று பேர் ஸ்திரீகள். எஞ்சியுள்ள நாற்பத்து மூன்று பேரில் இருபத்தேழு பேர் வக்கீல்கள்; மூன்று பேர், அரசாங்கத்தில் உயர்தர உத்தியோகம் வகித்து உபகாரச் சம்பளம் பெற்றவர்கள்; நான்கு பேர் பெரிய வியாபாரிகள். இப்படிப் பட்டவர்களடங்கிய தலைமைக் கோஷ்டியிலிருந்து எந்த விதமான வேகத்தை எதிர்பார்க்க முடியும்? 'இந்தியாவும் இங்கிலாந்தும் தெய்வ சங்கல்பத்தினால் தான் இணைக்கப் பட்டிருக்கிறது'— 'படிப்படியாகத்தான் நாம் முன்னேற வேண்டும்'—'ஒரு தேசத்தின் அரசியல் வாழ்வில் ஐம்பது வருஷ காலம் எம்மாத்திரம்!'—என்பன போன்ற, காலவேகத்திற் கொவ்வாத வாதங்கள்தான் இந்தக் கோஷ்டியிடமிருந்து கிளம்பும். இப்பொழுதுள்ள காரியக் கமிட்டியின் அமைப்பையே பார்க்கலாமே. பதினைந்து அங்கத்தினரில் ஏறக்குறைய பாதி பேர் வக்கீல்கள். அதனால்தான், காரியக்கமிட்டி தீர்மானங்களில் நீண்ட நீண்ட வாக்கியங்களும், ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்கிற சுபாவமும் காணப்படுகின்றன. ஆனால் இதற்காக இவர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. இவர்களால் இவ்வளவுதான் செய்ய முடியும். இதைவிட அதிகமாக

இவர்களிட மிருந்து எதிர்பார்ப்பது நமது பிரமையே தவிர அவர்களுடைய குற்றமல்ல.

வக்கீல்களின் சுபாவமென்ன வென்பதைப்பற்றி ஓர் ஆங்கில ஆசிரியன் பின் வருமாறு கூறுகிறான்:—

ஒரு பிரச்னை கிளம்புகிற வரையில், அந்தப் பிரச்னையை அப்படியே விட்டு வைப்பதுதான் வக்கீல்களின் சுபாவம். அதிக வருமான முள்ள வக்கீல் களுக்கு இதுதான் வழி. வாழ்க்கை பூராவும் இந்த மாதிரியான சுபாவத்திலேயே இருந்து விட்டவர்கள், ராஜ தந்திரிகளாக வருகிறபோது, இந்தச் சுபாவமே இவர்களைப் பின் தொடர்கிறது. இதனால் அரசியல் விவகாரங்களில் ஏதேனும் ஒரு பிரச்னை வந்தால், அதை உடனே சரிகட்டிக் கொண்டுவிட முடியும் என்ற நம்பிக்கையினால், பிரச்னைகள் கிளம்புகிற வரையில் சும்மா இருந்து விடுகிறார்கள். ஏற்கனவே இந்த மாதிரியான பிரச்னைகள் கிளம்பும் என்று, தாங்கள் எதிர்பார்க்கவில்லை யென்றும், அப்படி எதிர்பார்க்க வில்லையாதலினால், அதற்கான முன்னேற்பாடுகள் ஒன்றும் செய்து வைக்கவில்லையென்றும் மன்னிப்புக் கோரி விடுகிறார்கள். ஆனால் கர்ம க்ஷேத்திரத்தில், எந்த விஷயத்தையும் நாம் முன் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிராமல் இருக்க முடியாதல்லவா?

இந்த மேற்கோளைப் படித்துவிட்டு, பின்னர், சென்ற ஒரு வருஷ காலமாகக் காரியக் கமிட்டி நிறைவேற்றியிருக்கிற தீர்மானங்களை மீண்டுமொரு முறை படித்துப் பார்க்குமாறு அன்பர்களுக்குச் சிபார்சு செய்கிறோம். தவிர, ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்ற காலத்திற்கு, வாசகர்களின் மனதை அழைத்துக் கொண்டு போக விரும்புகிறோம். ஒத்துழையாமைத் திட்டங்களில் ஒன்று பள்ளிக் கூட பகிஷ்காரம். தலைவர்களின் கட்டளைக் கிணங்கி, ஆயிரக் கணக்கான இளைஞர்கள், பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரித்து வெளியே வந்து விட்டார்கள். இங்ஙனம் வெளிவந்து விட்டவர்களுக்கு, வேறு விதமான ஏற்பாடுகளைத் தலைவர்கள் செய்யவில்லை; இவர்களுடைய உற்சாகம் உருப்படியாக்கப் படவில்லை. இளைஞர்கள் சோர்ந்து போய், மீண்டும் பள்ளிக்கூடங்களில் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். கோர்ட் பகிஷ்காரமும் சட்டசபை பகிஷ்காரமும் இப்படித்தான் ஆயின. இதற்குக் காரணம் என்ன? வருங்காலத்தைப் பற்றிய கவனக் குறைவு; அவ்வப்பொழுது எழுந்திருக்கிற பிரச்னைகளைச் சமாளித்துக் கொண்டு போக வேண்டுமென்ற மனப்பான்மை. இந்தத் திட்டங்கள் வெற்றி பெறாமற் போனதற்குக் காரணம் தலைவர்களின் 'ஹிமாலயத் தவறு' என்பதைத் தவிர, நாம் வேறென்ன சொல்ல முடியும்?

நமது தலைவர்களிற் பெரும்பாலோர், வக்கீல்களாயிருப்பதனால்தான் ஒவ்வொரு பிரச்னையின் உபய கட்சியையும் ஆராய்ச்சி செய்து பார்க்கிறார்கள்; ஒவ்வொரு கட்சிப் பிரச்னைக்கும் வியாக்கியானம் செய்கிறார்கள். உலகத்திலுள்ள மற்ற எந்த அரசியல் கட்சித் தலைவர்களிடத்திலும் இந்த மாதிரியான சாமர்த்தியத்தை

நாம் பார்க்க முடியாது. ஆனால், கார்ல் மார்க்ஸ் சொல்லுகிறபடி, 'இப்பொழுது வியாக்கியான கர்த்தர்கள் தேவையில்லை; சிருஷ்டி கர்த்தர்கள் தான் தேவை.' ஆனால் நமது தலைவர்களிடத்தில் நாம் முறையிட்டுக் கொள்வது என்ன வென்றால் 'நீங்கள் சிருஷ்டி செய்யாமற் போனாலும் போகிறது; ஏனென்றால் அஃது உங்களால் முடியாது. ஜீரணித்துக் கொள்ளவாவது முயற்சி செய்யக் கூடாதா?' என்பதுதான். துரதிருஷ்டவசமாக, நமது தலைவர்களுக்கு ருசி பார்க்கிற நாக்கு இருக்கிறது; ஜீரணித்துக் கொள்ளும் வயிறுதான் இல்லை. இல்லா விட்டால், உலக அரசியல் அரங்கத்தில், சுருளை சுருளையாக எத்தனையோ காட்சிகள் இவர்கள் கண் முன் ஓடிக் கொண்டிருக்க, அவற்றை இவர்கள் பார்த்துக் கொண்டுமிருக்க, அவற்றினின்று ஒன்றையும் கிரகித்துக் கொள்ள மாட்டோம் என்று கண்டிப்பாக மறுப்பது போல் நடந்து கொள்வார்களா?

பிளாட்டோமுதல் பெர்னார்ட்ஷா வரையில், கம்பன் முதல் சுப்பிரமணிய பாரதியார் வரையில் யாரை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு பாருங்கள். ஒருவர் கூட வக்கீல் இல்லை. கவிகளாகட்டும், கர்ம வீரர்களாகட்டும், வக்கீல் கோஷ்டியினின்று உதிக்கவேயில்லை. உலகத்தில் பல படித்தான அரசியல் தத்துவங்களை வகுத்துக் கொடுத்து அவை மூலமாகச் சட்டங்களையும் நிர்மாணித்துக் கொடுத்த அத்தனை பேரும் வக்கீல்களல்ல. சட்டத்தின் வியாக்கியான கர்த்தர்களாகத்தான் வக்கீல்கள் இருந்திருக்கிறார்களே தவிர, சட்டத்தின் சிருஷ்டி கர்த்தர்கள் வக்கீல்களாயிருந்திருக்கவில்லை. பிளாட்டோ (கி. மு. 427) ஒரு தத்துவ ஞானி; அரிஸ்டாடல் (கி. மு. 3?4-322) வைத்தியம் பயின்றவன்; தாமஸ் மோர் (1478-1535) ஓர் உத்தியோகஸ்தன்; மாக்கியவெல்லி (1469-1527) ஒரு சரித்திராசிரியன்; ஹாப்ஸ் (1588-167?) ஒரு கணித சாஸ்திரி; ஜான் லாக்கே (1632–1704) ஒரு போதகாசிரியன்; ரூஸோ (1712–1778) சித்திரம் செதுக்கும் தொழிலாளி; மாண்டிஸ்கியு (1689-1755) ஒரு தத்துவ ஞானி; ஜான் ஸ்டூவர்ட் மில் (1?06-1873) ஒரு இஞ்சினீர்; இந்தியாவில் அரசியல் நீதிகளை வகுத்த பிரகஸ்பதியும், சுக்ராச்சாரியனும், சாணக்கியனும், திருவள்ளுவரும் வக்கீல்களல்ல.

நமது தலைவர்கள் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள்? வக்கீல் மனப்பான்மை மட்டுந்தான் காரணமா? இல்லை; இஃதொன்று மட்டும் காரணமில்லை; இன்னொரு காரணமும் உண்டு. அதுதான் பணக்கார மனப்பான்மை. நமது தலைவர்களுடைய ஜீவிய சரிதங்களை நீங்கள் படித்துப் பார்ப்பீர்களானால் பெரும்பான்மையோர் செல்வத்திலே பிறந்து, சுக போக வாழ்க்கையை நடத்தியவர்களாக இருப்பதைக் காண்பீர்கள்; சிறுபான்மையோர் மத்திய தர வகுப்பினர். இவர்களத்தனை பேருக்கும், இவர்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னமே, சமுதாயத்தில் ஓர் அந்தஸ்து ஏற்பட்டிருந்தது. அந்த அந்தஸ்தின் செல்வாக்கையே, இவர்கள் தங்கள் அரசியல் வாழ்க்கையில் உபயோகித்திருக்கிறார்கள். சமுதாய அந்தஸ்து இருந்திரா விட்டால்

அரசியலில் இவர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டிருக்குமா? இருக்கவே இராது. அரசியல் செல்வாக்குக்காகச் சமுதாய அந்தஸ்தைத் துறந்துவிட்டவர்கள் இவர்கள். இதனால்தான், இவர்கள், பாமர ஜனங்கள் வேறாகவும் தாங்கள் வேறாகவும் பிரித்தே பேசுகிறார்கள். இவர்கள், ஜனங்களுக்குத் தலைவர்களாகத்தான் இருக்க முடியும்; ஜனத்தலைவர்களாயிருக்க முடியாது. ஜனங்களுக்கான ஓர் அரசியல் திட்டத்தை இவர்களால் வகுக்க முடியுமோ என்னவோ! ஜனங்களுடைய அரசியல் திட்டத்தை இவர்களால் வகுக்கவே முடியாது. இவர்களுடைய ஆட்சி, ஜனங்களுக்கான ஆட்சியாக இருக்குமே தவிர, ஜனங்களுடைய ஆட்சியாயிராது.

ஐம்பத்து மூன்று காங்கிரஸ்களில் தலைமை வகித்த நாற்பத்தாறு பேரில் நாற்பத்தொரு பேர் பணக்கார குடும்பத்திலே பிறந்தவர்கள்; ஐந்து பேர் மத்திய தர குடும்பத்திலே பிறந்தவர்கள். எல்லோரும் ஆங்கில உயர்தரக் கல்வி பயின்றவர்; பெரும்பாலோர் மேனாட்டிற்குச் சென்று பயின்றவர்கள்; மேனாட்டு நாகரிக வாழ்க்கையை மேற் கொண்டவர்கள். இந்த நாற்பத்தாறு பேரில் பதினாறு பேர், காங்கிரஸில் சேர்ந்த பிறகு அரசாங்க நிழலில் பதவி, பட்டம் முதலியன பெற்றவர்கள்; அரசியல் வேலையைப் பொழுது போக்காகக் கொண்டவர்கள். இவர்களெல்லாரும், ஏறக்குறைய காங்கிரஸில் காந்தியுகம் ஏற்படுவதற்கு முன்னர் இருந்தவர்கள். காந்தியுகம் ஏற்பட்டதற்குப் பின்னர்—அதாவது சென்ற இருபது வருஷகாலமாக—காங்கிரஸில் தலைமை வகிக்கிறவர்கள், ஏற்கனவே அரசாங்க நிழலில் பதவி பட்டம் முதலியன பெற்றிருந்தவர்கள்; ஒன்றுந் தெரியாத பாமர ஜனங்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற கருணையால், தங்கள் பதவி, பட்டம் முதலியவற்றைத் துறந்தவர்கள்; பாமர ஜனங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை, அறிவு வாயிலாக அறிந்து அநுதாபங் காட்டுகிறவர்கள்; மேலேயிருந்து கொண்டு, கீழே இருக்கப்பட்டவர்களுடன் கைலாகு கொடுத்துப் பேசுகிறவர்கள்; தரித்திரச் சேற்றிலே நெளிந்து கொண்டிருக்கப் பட்டவர்களுக்கு அந்தத் தரித்திரத்தின் பெருமையைப் பற்றியும் புனிதத் தன்மையைப் பற்றியும் உபதேசித்து அதனோடு தங்கள் சேவைக்கு முற்றுப் புள்ளி இட்டுக் கொள்வதில் திருப்தி யடைகிறவர்கள்; எல்லோரையும் கட்டியணைத்துக் கொண்டு போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டே, எல்லோரையும் இழந்து விடும் நிலையிலிருப்பவர்கள். எல்லாரையும் இவர்கள் இழந்து விடுவது ஒருபுறமிருக்கட்டும்; எல்லாவற்றையும் இழந்து விட்டால்?—

சென்ற அரை நூற்றாண்டின் இந்திய தேசிய அரசியல் வாழ்வை நாம் மேற் போக்காகப் பார்த்தால் கூட ஆங்காங்கு சமரஸமைல் கற்கள் காட்சியளிக்கின்றன. இவற்றைக் கண்டு எந்த அந்நிய நாட்டு அரசியல் நிபுணனும் 'அட, இவ்வளவு சுருங்கிய காலத்தில் இத்தனை சமரஸக் கற்களா?' என்று ஆச்சரியமே படுவான். ஆனால் அவன் ஆச்சரியப் படத் தேவையேயில்லை. வக்கீல் மனப்பான்மையும் பணக்கார மனப்பான்மையும் ஒன்று கூடினால், பிறப்பது சமரஸ

மனப்பான்மை தானே? எந்த நாட்டிலும், மேல் வகுப்பிலிருந்தும் மத்திய வகுப்பிலிருந்தும் தோன்றுகிற தலைவர்களின் மனப்பான்மை இப்படித்தான் இருக்கும். கான்னேல்லி (Connolly) என்ற ஓர் ஐரிஷ் அரசியல் அறிஞன், ஓரிடத்தில் பின் வருமாறு கூறுகிறான்:—

தலைவர்களிடத்தில், பலஹீனம் தடுமாற்றம், முன்னேக்கிச் செல்ல மனமில்லாமை முதலியன காணப்படுவதன் காரணம் என்ன? தனிப்பட்டவர்களுடைய பலஹீனம் இதற்குக் காரணம் அல்ல. எங்கே தாங்கள் தோற்றுவித்த இயக்கமானது, தங்களைப் மீறிப் போய், சமுதாயத்தின் கீழ் அந்தஸ்திலுள்ள ஜனங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து விடுமோ வென்ற பயந்தான் காரணம். 1848ம் வருஷம் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் இயக்கம் தோல்வி யடைந்து போனதற்கு இந்தப் பயந்தான் காரணம். எந்த இயக்கத்திலும் மத்திய தர வகுப்புத் தலைமையானது சந்தேகாஸ்பதமான விஷயந்தான். இந்த மத்திய தர வகுப்புத் தலைவர்கள், தங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் போராடிக் கொண்டு முன்னேறிச் செல்கிறார்கள். ஆனால் பயந்து பயந்து திரும்பிப் பார்த்துக் கொண்டு செல்கிறார்கள். ஏன்? இவர்களைப் பாமர ஜனங்கள் பின் தொடர்ந்து வருகிறார்களல்லவா? அவர்கள் எங்கே, தங்களுடைய சமுதாய அந்தஸ்து சம்பந்தமான சலுகைகளைப் பறித்துக் கொண்டு விடப் போகிறார்களோ வென்ற பயமே, இப்படித் திரும்பித் திரும்பிப் பார்ப்பதன் காரணம். இதனால், நெருக்கடியான சந்தர்ப்பங்களில், சமயோசிதமாக நடந்து கொள்ளுதல், நம்பிக்கைத் துரோகங்கள் முதலியன வெல்லாம் நடைபெற்று விடுகின்றன. இந்தத் தலைவர்கள் அடிக்கடி என்ன சிந்திக்கிறார்களென்றால், நமக்கு மேலே யிருக்கப்பட்டவர்களுக்கும் நமக்கும், அல்லது கீழே இருக்கப்பட்டவர்களுக்கும் நமக்கும் என்னென்ன ஒற்றுமை அம்சங்கள் இருக்கின்றன வென்பதுதான். மேலே யிருக்கப் பட்டவர்கள் கொஞ்சம் அசைந்து கொடுத்து, தாங்கள் வகிக்கும் அதிகாரத்தில் பங்கு கொடுப்பதாக இவர்களை அழைத்தால், உடனே சமரஸங்கள், ஒப்பந்தங்கள், கட்சி மாற்றங்கள் முதலியன உண்டாவதற்குரிய ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எதிர்க் கட்சியை இரண்டு படுத்தி, கடைசிபட்சமாக ஒரு பிரிவினரைத் திருப்தி செய்வதுதான் அரசாங்க முறை. இதனால்தான், பணக்கார வகுப்பிலிருந்து தோன்றுகிற தலைவர்கள்—இவர்கள் சுலபமாகத் திருப்தி யடையக் கூடியவர்கள்—ஒரு நிலைமையைச் சமாளிக்கக் கூடிய விதமாக உறுதியுடன் நிற்க முடியாது.

நம்மைப் பொறுத்தமட்டில், துறவு, முதுமை, வறுமை, மரணம், ஆகியவற்றிற்கு மதிப்புக் கொடுக்கிறோ மில்லை. நாம் இவற்றைத் துச்சமாகக் கருதுகிறோம். இவற்றைத் தூர ஒதுக்கித் தள்ளுகிறோம். ஒரு ஜாதி, தன் மதிப்

போடுவாழ வேண்டுமானால், அந்த வாழ்வானது பிறருக்கு வழிகாட்டியா யிருக்க வேண்டுமானால் இந்த நான்கு அம்சங்களையும் அஃது அலட்சிய மாகப் புறக்கணித்து விட வேண்டும். ஆனால் துர்ப்பாக்கிய வசமாக, இந்திய தேசிய தலைமை ஸ்தானம், இந்த நான்குக்கும் ஒரு மதிப்பு வைத்துப் பேசுகிறது. ஒரு லட்சியத்திற்காக இறப்பது பெரிதல்ல; அதில் பெருமையுமில்லை. ஒரு லட்சியத்திற்காக உயிர் வாழ்வதுதான் சிறப்பு. அதுதான் கஷ்டம். உயிரை விட்டு விடுவது சுலபமான காரியமல்லவா? முதுமைக் கோயிலில் சிரம் வணங்குவோரை நாம் பக்தர்களாகக் கொள்ள மாட்டோம். பழமைக்காக மட்டும் நாம் பெருமை கொடுக்க மாட்டோம். வாழ்வு ஆழ்ந்திருக்க வேண்டும்; அகன்று மட்டும் இருந்தால் என்ன பயன்? ஆழமான ஆற்றிலேதான் ஸ்நானஞ் செய்ய முடியும்; அகன்ற ஆற்றிலே, சேற்றைத்தான் பூசிக் கொள்ள முடியும். நாம் சுதந்திர தேவியை, துறவு மடத்திலே வைத்து வணங்க விரும்பவில்லை. எளிமை, அநுபவத்திற் கொவ்வாத தத்துவம் முதலிய வாடிப்போன மலர்களைக் கொண்டு அவளை ஆராதிக்கவும் மாட்டோம். இளமைச் சோலையில், உற்சாகப்பந்தரிட்டு, அதன் கீழ் செல்வப் பலகை போட்டு, அதில் சுதந்திர லட்சுமியை இருத்தி, வாழ்க்கையாகிற செடியிலிருந்து பறித்த வீரம், தன் மதிப்பு, ஒழுங்கு, ஒழுக்கம், அபிமானம் ஆகிய மலர்களைக் கொண்டே அவளை அருச்சிக்க விரும்புகிறோம். ஏனென்றால், சுதந்திர தேவி, சந்நியாசினி அல்ல; அவள் லட்சுமி; செல்வச் சீமாட்டி.

லௌகிகம் என்ற கட்டிடத்தின் மீது பாரமார்த்திகம் என்னும் கூரை வேய்ந்து அதில் தான் வாழ வேண்டும்; அப்படி வாழ்வது தான் வாழ்க்கை யென்பது நமது அபிப்பிராயம். ஆனால் நமது தேசிய தலைமை ஸ்தானம் பாரமார்த்திகம் என்னும் வீட்டின் மீது லௌகிகம் என்னும் கூரை வேய்ந்து அதில்தான் வாழ வேண்டுமென்று கட்டளையிடுகிறது. இஃது அடக்கத்தின் அறிகுறியா யிருக்கலாம்; ஆனால் வாழ்க்கையின் அலங்காரமாகாது. 'அரசியலில் ஞானிகளுக்கு வேலையில்லை' என்று ஒரு சமயம் திலகர் கூறினார். இதுவே நம்முடைய கருத்தும்.

நமது தலைமை ஸ்தானம், இறந்த காலத்திலிருந்து நிகழ்கால வாழ்க்கையை நிதானிக்கப் பார்க்கிறது; ஆனால் நாம், நிகழ்கால வாழ்விலிருந்து எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கப் பார்க்கிறோம்.

நமது தலைமை ஸ்தானம், நைந்து போன கந்தல்களுக்கு ஒட்டுப் போட்டு அவற்றை உடுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறது. ஆனால் தேசம், புதிய துணிகளை உடுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆசைப் படுகிறது.

ஆக, தகுதியுடைய தலைமை இனியே நமக்கு ஏற்படவேண்டுமென்பது நமது உறுதியான அபிப்பிராயம்.



1940

ஜூலை

30 ஜெர்மானியத் துருப்புகள், பிரெஞ்சுத் துறைமுகப் பிரதேசத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கின்றன வென்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

31 இங்கிலாந்தின் தெற்குத் துறைமுகப் பிரதேசங்களில் செய்யப் பட்டிருக்கும் பந்தோபஸ்து ஏற்பாடுகளை ஸ்ரீ சர்ச்சில் இன்று மேற்பார்வை செய்தார்.

ஆகஸ்ட்

1 ருஷ்யாவின் அந்நிய நாட்டுக் கொள்கை யென்ன வென்பதைப் பற்றி, எம். மோலோடோவ் விளக்கிக் கூறினார்.

2 லார்ட் பெவர் ப்ரூக் என்பவர், பிரிட்டிஷ் யுத்த மந்திரிச் சபையில் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றார்.

3 இங்கிலாந்தில், ஜெர்மானியர்கள் ஆகாய விமானங்கள் மூலம் விநியோகித்த துண்டுப் பிரசுரங்களுக்கு டப் கூப்பர் பதிலளித்தார்.

4 இத்தாலியப் படை, சோமாலிலாந்தின் மீது படை யெடுத்தது.

6 பர்மா சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராயிருந்த டாக்டர் பா-மா கைது செய்யப் பட்டார்.

7 இத்தாலியர்கள், பிரிட்டிஷ் சோமாலிலாந்திலுள்ள ஜைலா என்ற ஊரைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

8 லிபியாவில் நடைபெற்ற யுத்தத்தில் பதினைந்து இத்தாலிய ஆகாய விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன.

9 இந்தியா அரசாங்க நிருவாக சபையில், உத்தியோகஸ்தரல்லாதார் சிலருக்கு ஸ்தானங்கள் அளிப்பதாக ராஜப் பிரதிநிதி ஓர் அறிக்கை விடுத்தார்.

10 சீனாவுக்கு எந்த விதமான பொருள்களும் செல்லக் கூடாதென்று ஜப்பானியர்கள் போட்டிருந்த தடை, இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டும் இறுக்கப் பட்டும் விட்டது.

11 ஜெர்மன் ஆகாய விமானங்கள், பிரிட்டிஷ் துறைமுகப் பிரதேசங்களைத் தாக்கி பலத்தசேத மடைந்தன.

13 இந்தோ-சைனா வழியாக ஜப்பானியப் படைகள் செல்வதன் சம்பந்தமாக, பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் ஜப்பானிய அரசாங்கத்திற்கும் ஒரு சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப் பட்டது.

14 பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில், இந்தியாவைப் பற்றி வாதம் நடைபெற்றது.

16 அமெரிக்காவும் கானடாவும் சேர்ந்து ஒரு பாதுகாப்புக் கமிட்டி ஏற்படுத்திக் கொள்வதென்று இரண்டு நாடுகளும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன.

17 சையாமில், தான் சில சலுகைகளைப் பெற வேண்டுமென்று," ஜப்பான் மேற்படி நாட்டு அரசாங்கத்திற்கு தாக்கீது விடுத்திருக்கிறது.

18 இங்கிலாந்தில் 144 ஜெர்மானிய ஆகாய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

19 பிரிட்டிஷ் துருப்புகள், இத்தாலிய சோமாலிலாந்தைக் காலி செய்து விட்டன.

20 ஸ்ரீ சர்ச்சில், பார்லிமெண்டில் பேசுகையில் பிரிட்டனுடைய வெற்றியில் தனக்குப் பூரண நம்பிக்கையிருப்பதாகத் தெரிவித்தார்.

22 பிரெஞ்சுத் துறைமுகங்களிலிருந்து, ஜெர்மானியர்கள், நீண்ட தூர பீரங்கிகளை வைத்து, பிரிட்டிஷ் துறைமுகப் பிரதேசங்களைத் தாக்கினர்.

எகிப்தை, இத்தலி தாக்குமானால், இத்தலியின் மீது எகிப்து யுத்தந்தொடுக்குமென்று எகிப்திய பிரதம மந்திரி கூறினார்.

ஸர் ஆலிவர் லாட்ஜ் என்ற பிரபல தத்துவ சாஸ்திரி இறந்து போனார்.

டிரோட்ஸ்கி, மெக்ஸிகோவில் இறந்து போனார்.

24 ஜெர்மானியர்கள் லண்டன்மீது ஆகாய விமானக் குண்டுகளைப் போடத் தொடங்கியிருக்கின்றனர்.

இத்தாலியத் துருப்புகள் இத்தாலிய எல்லைக்குச் செல்வதாக வதந்தி.

27 இத்தாலிக்கும் கிரீஸுக்கும் ஏற்பட்டிருந்த பிணக்கு நீங்கிவிட்டதாகச் சொல்லப் படுகிறது.

29 வியன்னா நகரத்தில் பால்கன் பிரதேசப் பிரதிநிதிகளும், இத்தலி ஜெர்மன் பிரதிநிதிகளும் கலந்து பேசினார்கள்.

டாக்டர் பா-மா, மாந்தலேயில் ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டார்.

30 ருமேனியாவைச் சேர்ந்த ஒரு பிரதேசம் ஹங்கேரிக்குப் போய்ச் சேர்ந்தது.

பிரிட்டிஷ் ஆகாயப்படை, தென்னாப் பிரிக்காவிலுள்ள இத்தாலிய ஸ்தலங்களைத் தாக்கியது.

31 ஜெர்மானிய அரசாங்கம் விடுத்திருக்கிற ஓர் அறிக்கைப்படி, ஜெர்மனிக்கு சென்ற வருஷம் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து நாளது வரை, 39.000 பேர் இறந்துபோயிருக்கின்றனர் என்றும், 430,000 பேர் காயமடைந்திருக்கின்றனர் என்றும், 24,000 பேர் காணமற் போயிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

கலீலியோ

—,,வான சாஸ்திரி''

கி. பி. பதினாறுவது நூற்றாண்டில் இத்தலியிலுள்ள ப்ளாரென்ஸ் நகரத்தில் கௌரவமான பரம்பரையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் இருந்தனர். இவர்கள் விதிவசத்தால் கஷ்டதசைக்கு வந்துவிட்டனர். இந்தக் குடும்பத்தில், 1564ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18ந் தேதி ஓர் ஆண் மகன் பிறந்தான். இவன் பெயர் கலீலியோ. இவன் கணித சாஸ்திரத்தில் திறமை படைத்தவனா யிருந்தான். இதனால் இவன், பைஸா நகரத்துச் சர்வ கலாசாலையில் ஒரு கணித போதகாசிரியனாக நியமிக்கப் பட்டான். இந்த பைஸா நகரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற சாய்வுக் கோபுரம் ஒன்றுண்டு. இப்படிச் சாய்ந்திருந்தாலும் இதுகீழே விழாமலே பல வருஷகாலம் இருந்தது. ஒரு நாள், கலீலியோ, பத்து பவுண்ட் கனமுள்ள ஒரு கல்லையும் ஒரு பவுண்ட் கனமுள்ள ஒரு கல்லையும் எடுத்துக் கொண்டு மேற்படி கோபுரத்தின் மீதேறினான். ஏறி இரண்டு கற்களையும் ஒரே சமயத்தில் கீழே போட்டான். இரண்டும் ஒன்றாகவே கீழே விழுந்தன. இஃது அங்கே கூடி யிருந்த ஜனங்களுக்கு ஆச்சரியமா யிருந்தது. இதற்கு முன்னர் ஜனங்களுடைய நம்பிக்கை என்னவாயிருந்த தென்றால், கனமான பதார்த்தங்கள் சீக்கிரமாகக் கீழே விழும்; லேசான பதார்த்தங்கள் மெதுவாக விழும் என்பது. கிரேக்க தத்துவ ஞானியாகிய அரிஸ்டாட்டல் இப்படித்தான் சொல்லிப்போயிருந்தான். இவன் சொன்னதுதான் சரியென்று ஜனங்கள் நம்பி யிருந்தார்கள். இந்த நம்பிக்கை தவறு என்றும், எல்லா பதார்த்தங்களும் ஒரே சமயத்தில் தான் கீழே விழும் என்றும் கலீலியோ சித்தாந்தப் படுத்தினான். இது ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. இதனால் இவன் பைஸா நகரத்தில் இருக்க முடியாமல், படுவா என்ற நகரத்திற்குச் சென்று அங்குள்ள சர்வ கலாசாலையில் கணித போதகாசிரியனாக வேலை பார்த்து வந்தான்.

இந்தக் காலத்தில் இவன், தூரத்திலுள்ள பொருள்களை அருகாமையிலிருக்கிற மாதிரி காண்பிக்கக் கூடிய தூர திருஷ்டிக் கண்ணாடி யொன்றைத் தயார் செய்தான். இதைக் கொண்டு நட்சத்திரங்களை ஆராய்ந்தான். சந்திரனிடத்தில் காணப்படும் கறைகள், அங்குள்ள மலைகளும் கணவாய்களுமென்றும், சந்திரனைப் போல் மற்ற கிரகங்களும் சூரியனை வலம் வருகின்றன வென்றும் சித்தாந்தப் படுத்தினான். ஆனால் இதற்கு முன்னர், பூமியைச் சுற்றித்தான் எல்லாக் கிரகங்களும் வலம் வருகின்றன வென்று அறிஞர்கள் கூறி யிருந்தார்கள். ஆனால் கலீலியோ இது தவறு என்று நிரூபித்தான். இவனுடைய நிரூபணம், பிற்காலத்தில் விஞ்ஞானி

——"சங்கர குமாரன்"

சப்பாத்துக் கள்ளி உபயோகம்

தன்னுரு முழுமையு முள்ளே யமைந்து ஒன்றும் விளையாத வெறுந்தரைகளிலும், மற்றும் பயிர் செய்தற்குப் பிரயோசனமாயுள்ள புலங்களிலும், அடர்த்தியாய் மனிதருள்ளே புகாதபடியானதாயும், அவற்றின் வேரைக் களையக் களைய மாளாததாயுமிருந்து, பாம்பு, நரி முதலிய துஷ்ட ஜெந்துக்கள் வசிக்க ஆஸ்பதமாயுள்ள சப்பாத்துக் கள்ளியினால் மனிதரடையும் பயன் சிறிதேனுமில்லையென்பதே பொது ஜன சமூகத்தின் அபிப்பிராயமாக இன்றும் இருந்து வருகிறது. இச்சப்பாத்துக்கள்ளிகளில் நூற்றைம்பது வெவ்வேறு ஜாதிகளுள்ளன. இச் சப்பாத்துக் கள்ளிகளை நட்டு விசேஷமாய்ப் பயிராக்குவதற்குச் சிரமம் எவரும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இச் சப்பாத்துக் கள்ளிகளைப் பூர்வ காலத்தார் சத்துருக்கள் தம்மிடம் வாராமலிருத்தற் பொருட்டு காவல் காக்கும் எல்லைகளாகத் தம் கிராமங்களின் எல்லைகளாகவோ, அரசர்கள் தம்மதிலின் புறக்கடைப் பாதுகாப்புகளாகவோ பயிரிட்டு வந்திருக்கிறார்கள்.

இச் சப்பாத்துக் கள்ளிகள் விருதாவாகக்கிடந் தழியட்டும் என்று போடப்பட்ட சிறிது நாட்களுள்ளேயே பார்க்கப்படின் அங்கு சப்பாத்துத் தோப்பாக விளங்கித் தன்னுள் அநேக ஜீவராசிகளையும், பழந்தரு விருக்ஷங்கள் முதலாயினவற்றையும் கொண்டிலங்குவதாகும். இப்பேர்ப் பட்ட சப்பாத்துக் கள்ளியின் முள்ளுகள் நச்சுத் தன்மை பொருந்தியன வாதலினாலும், அவற்றைத் தொட்டாலும் மனிதரின் தேகத்தில் அவற்றின் மெல்லிய முள்ளுகள் புகுந்து மிக்க வருத்தத்தை விளைக்குமாதலாலும், கொடியவரெவரும் தம் சத்துருக்களையோ குழந்தைகளையோ கொல்ல நேரின், அவர்களைக் கொணர்ந்து தம் காரியத்தை முடித்துப் பின் யாவருமுணரா வண்ணமிருக்க அச்சப்பாத்துக் காடுகளில் போட்டுப் போவதனாலும், இச் சப்பாத்துக் கள்ளிகள் ஏராளமாய் விருத்தியாயுள்ள நாடுகளில்

களுக்கு அநேக நன்மையை யளித்தது. ஆனால் இவன் காலத்தில், இவனுடைய சித்தாந்தத்தை அறிஞர்கள் அங்கீகரிக்கவில்லை. இதனால் இவனைத் துவேஷிக்கத் தலைப்பட்டார்கள். இவன் கூறுவது மத விரோதமானதென்று சொல்லி, இவனை மன்னிப்புக் கேட்கும்படி கூறினார்கள். முதலில் மன்னிப்புக் கோரினான். மறுபடியும் தன் சித்தாந்தங்களை வலியுறுத்தினான். இதனால் இவன் புல இம்சைகளுக்குள்ளாகி கடைசியில் 1642ம் வருஷம் ஜனவரி மாதம் 8ந் தேதி ஏழையாக இறந்து போனான்.

துரைத்தனத்தார் மனித சமூகத்திற்குப் பெரிதும் விவசாயத்திற்கு நிலங்களாகக் கருதியும், ஜனங்கள் இச் சப்பாத்துக் காடுகளில் போடப்பட்டு அவதியுருவண்ணமும், இச் சப்பாத்துக் கள்ளிகளைச் சமூலத்தையும் ஒழித்து விடக் கட்டளை யிட்டு வருகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அநேக ஆயிர முறைகள் இச்சப்பாத்துக் கள்ளிகளை யழிக்க வென்று ஏற்படுத்திச் செய்து வருகிறார்கள். இச் சப்பாத்துக் கள்ளிகளை வேராறுத்து ஆழக் குழிதோண்டி அவற்றை அதிகத் தாழப் புதைத்து நெருப்பிட் டெரித்து விட்டபோதிலும், அவை சில நாட்களுக்குள் அங்கு தாராளமாய் முளைத்து வனமாய் அடர்ந்து விடுகிற தென்றால் அச் செடியின் வல்லமையைப் பற்றிப் பெரிதும் கூறலும் வேண்டுமோ!

இப்படி மனிதர்களுக்கு அல்லலுறுவித்து, அவர்களின் வெறுப்புக்குக் காரணமாயிருக்கும் சப்பாத்துக் கள்ளி ஈசுவர சிருஷ்டியி லொன்றாயிருத்தலென்? அச்சப்பாத்துக் கள்ளி நல்லுபயோகப் படுத்தப்படாத ஒரு வஸ்துவாய் ஈசுவரனால் ஏன் சிருஷ்டிக்கப்பட வேண்டும்? இது மனித சமூகத்தில் நல்ல காரியங்களில் உபயோகமுள்ளதா? இல்லதா? என்று கேள்விகள் பல பிறத்தலும் கூடும். இக்கேள்விகளுக்கு அழகான பதில்களு மிருக்கின்றன. ஈசுவர சிருஷ்டியில் ஒன்றும் பலமில்ல தில்லவேயில்லை. உபயோக மற்ற பொருளென்று கருதப்படுகிற குப்பை குளங்கள் கூட சாமான்களாக மாற்றப் பட்டு வருவதை இப்போது நம்மவர் ஒருவாறு விழித்துக் கொண்டு அறிந்திருக்கிறார்களாதலினால், இச்சப்பாத்துக் கள்ளியினின்றும் அருமையான பொருள்கள் மனுஷ சமூகத்திற் கென்று உண்டாக்கப்படலா மென்றும் ஊகிக்கக் கூட இடமில்லாமல், அவற்றின் அருமையான உபயோகங்களை நம் நேயர்களறிய இங்கே எழுதுகிறோம்.

முதலில் இச்சப்பாத்திப் பழம் கிளிகள் முதலான பறவைகளின் ஆகாரார்த்தமாக உபயோகப்படுகிறது. இச்சப்பாத்துக் கள்ளியின் குருத்துக்களை முள்ளி நீக்கி அக்கினியில் வதக்கிப் பிரமாதமான இரத்தக் கட்டிகளுக்குக் கட்ட அவைகள (Tincture Iodine) டின்க்சர் அயோடைன் போட்டாற் போல் படீரென உடைந்து கட்டிகள் தேகத்திலுண்டாவதை எளிதிற் சொஸ்தமாக்கும். இச்சப்பாத்துக் கள்ளிகளை ஜலம் நிரம்பிய குழிகளில் அழுகப் போட்டு மக்கின பிற்பாடு தென்னம் பிள்ளைகளுக்கும், மற்றும் காரம் வேண்டிய பல பயிர்களுக்கும் உரமாக்குகிறார்கள்.

இச் சப்பாத்துக் கள்ளிச் சக்கைகளினால் காகித அட்டைகளும் அழகிய நேர்த்தியான காகிதங்களும், விலை சரசத்தில் விசேஷமாய்ச் செய்யலாமாம். மரப்பட்டைகள், தென்னை பனை உறிமட்டைகள், கரும்புச் சக்கைகள், மூங்கில்கள் முதலியவற்றினால்தான் காகிதம் செய்வ தென்றிருந்தோம். இப்போது இச்சப்பாத்துக் கள்ளியினுப யோகம் காகிதம் செய்வதில் வந்து விட்டதும் ஆச்சரியம். இச்சப்பாத்துக் கள்ளிப்பாலை ஹைட்ராலிக் வலிமையில் (Hydraulic Pressure) கொடுத்து போஜனத்

தட்டுகள், நீர்த் தொட்டிகள், வீட்டிற்கு வேண்டிய பாத்திரங்கள் முதலியனவும் செய்து கொள்ளலாமென்றால், ஜன சமூகத்தில் இஃதோர் ஆச்சரியமாகவேயிருக்கும் என்பதில் ஆட்சேபனையில்லை. இச்சப்பாத்துக் கள்ளியினால், லினோலியம்(Linoleum) என்றுசொல்லும்படியான அழகான தரை விரிப்புப்பாயைக் காட்டிலும் அழகான தரைப்பாயொன்றினையும் அழகாய்ச் செய்து முடித்து உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்றால் இப்பேர்ப்பட்ட சப்பாத்துக் கள்ளியை வளர்த்து அதனை யுபயோகப் படுத்த மனம் வருமா? வேரோடறுத்துப் போட மனம் வருமா?

ஜப்பானின் கற்பக விருக்ஷமாகிய மூங்கிலினால், பெட்டிகள், சட்டிகள், தட்டிகள், குடைகள், வஸ்திரங்கள், உண்கலங்கள், கைக் குட்டைகள், பலவித காகிதங்கள், காகித கற்கள், காகிதச் செருப்புகள், தேத் தண்ணீரருந்தக் கிண்ணங்கள், வீடுகள் பாலங்களமைக்கக் காகிதக் கற்கள், குழாய்கள் போன்ற தண்ணீர் செலுத்தக் குழாய்கள் செய்கிறார்கள். அவர்கள் ஒரு மூங்கில் பயிரை வைத்துக் கொண்டு செய்வது போன்று இவ்வற்பமான உபயோக மற்றதென்று கருதப்படுகின்ற சப்பாத்துக் கள்ளியினால் சர்க்கரை கூடச் செய்யலாம். மூன்று டன் (3 Tons) கருப்பங்கழிகளை ஆலையிலிட்டு எடுத்துபயோகப் படுத்தும், அதே விதமான ருசியும் மணமும் குணமுங் கொண்ட சர்க்கரை, இரண்டு டன் (2 Tons) சப்பாத்துக் கள்ளியை உபயோகித்து எடுக்கலாமென்றால், வேறென்ன வேண்டும்? கரும்புக் கழிகளின் கிரயத்தையும் அளவையும் விட சப்பாத்துக் கள்ளியின் கிரயமும், அளவும் குறைவாயிருத்தலினால், இக்கைத் தொழில் நம்மவர் பலரால் அப்பியசிக்கப் பட்டு இலாபம் பெற முயற்சி செய்யப்படலாம்.

இச்சப்பாத்துக் கள்ளி இத்தியாதி காரணங்களால் எல்லாத் தோட்டப் பயிர்களிலும் சிறந்ததேயென்னலாம். இச்சப்பாத்துப் பழம் பயித்தியம் பிடித்தவனுக்காகக் குணங் கொடுக்கும் மருந்தாக அதன் குளிர்ச்சிதரும் மகிமையினால் விசேஷமாக வைத்திய நிபுணர்களால் உபயோகிக்கப் படுகிறது. சப்பாத்துக் காடுகள் நிறைந்த இந்தியாவிலாகட்டும், ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவிலாகட்டும் பரீக்ஷித்துப் பார்க்கப் பட்டுப் பிரயோசனப் படுத்தப்படின் நாட்டிற்கு நன்மை யுண்டாவது சித்தம். சப்பாத்துக் கள்ளியின் மகிமை மேற்கூறியவாறு இருக்க, அவை விளையும் நாடுகளில் கால மேற்படுமாயின் இச்சப்பாத்துக் கள்ளிகளை எங்கும் ஜாக்கிரதையாய்ப் பரிபாலிப்பதை விட்டு, எவர் அவற்றை ஆகாப் பொருள் என்று நீக்குவார்கள்?

அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, முதலான தேசங்கள் போன்று நம்மவர்களுக்கு உபயோகமற்ற சப்பாத்துக் கள்ளி போன்றவைகளையும் வியாபாரப் பொருளாக்க எண்ணம் வரப் போகிறதோ, எப்போது எவ்வற்பப் பொருள்களிலும் அலட்சியம் நம்மவர்களுக்கு ஏற்படாதிருக்கப் போகிறதோ, அப்போதே நம் நாடும் மேனாடுகள் போன்று முன்னுக்கு வருவதும் திண்ணமென்று உறுதியாய்ச் சொல்லாம்.

—வெ. சா.

சமுதாய ஒப்பந்தம்

(ரூஸ்ஸோ எழுதியது)

(முன்தொடர்ச்சி.)

3. ஒரு பலசாலியின் உரிமை

ஒரு மனிதன் பலசாலியாயிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன், தன்னுடைய பலத்தின் உதவியைக் கொண்டே எப்பொழுதும் எஜமானனாக இருந்து பிறர் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்க முடியுமா? முடியாது. அப்படி ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால், தன்னுடைய ஆதிக்கத்தை உரிமையாக்கிக் கொள்ள வேண்டும்; மற்றவர்கள் தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை அவர்களுடைய கடமையாகச் செய்து விடவேண்டும். அதாவது, பிறர் மீது ஆதிக்கஞ் செலுத்தத் தனக்கு உரிமை யுண்டு என்று எஜமானன் கருத வேண்டும். அதைப் போல், அந்த எஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது தங்கள் கடமையென்று மற்றவர்கள் கருத வேண்டும். அப்பொழுதுதான், பலசாலியான மனிதனுடைய பலத்துக்கு அர்த்த மிருக்கிறது. இப்படி பலசாலிகள், வலிந்து பெற்றுக்கொண்ட இந்த உரிமையே, பின்னர் ஒரு தத்துவமாகக் கொள்ளப் பட்டு விட்டது. ஆனால் இதனை நாம் விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டாமா? பலாத்கார மென்பது ஸ்தூல சக்தி. நான் ஒருவனை பலவந்தப் படுத்தி வேலை வாங்குகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் விஷயத்தில் நான் உபயோகிக்கிற பலாத்காரம் இருக்கிறதே அது, என்னுடைய தேகபலத்தைப் பொறுத்திருக்கிறது. அதாவது என் ஸ்தூல சக்தியைப் பொறுத்திருக்கிறது. அப்படியானால், அந்தப் பலாத்காரத்தின் விளைவுகளிலிருந்து என்ன விதமான தர்ம நியாயங்கள் உதிக்கும்? ஒரு பலாத்கார சக்திக்கு நான் தலைவணங்கிக் கொடுக்கிறேனென்றால், அஃது அவசியத்தை முன்னிட்டுத்தான். என் இருதய பூர்வமாக நான் அந்தச் சக்திக்கு வணங்கிக் கொடுக்கவில்லை. தெளிவாகச் சொல்லப் போனால், அப்படி நான் வணங்கிக் கொடுப்பதுதான் புத்திசாலித்தனம். அப்படியானால், அது—தலை வணங்கிக் கொடுப்பது—என் கடமையென்று எப்படிச் சொல்ல முடியும்?

பலாத்கார சக்தி கொண்டு பிறர் மீது ஆதிக்கஞ் செலுத்தத் தங்களுக்கு உரிமையுண்டு என்று சொல்லிக் கொள்கிறார்களே அவர்களுடைய உரிமைகளினின்று விளைவது தீமைதான். பலாத்காரமே உரிமையாகிவிடுமானால், அந்தப் பலாத்கார சக்தியை மற்றொரு

பலாத்கார சக்தி வந்து தாக்கி அடக்கி விடுகிற பொழுது அப்படி அடக்குவது, அந்த மற்றொரு பலாத்கார சக்தியின் உரிமைதானே.*

ஜனங்கள் ஒரு சட்டத்தை, பிறருக்கு எவ்வித நஷ்டத்தையும் கொடாத முறையில் மீறி நடப்பார்களானால் அப்படி அவர்கள் செய்வது நியாயமாகவும் இருக்க முடியுமல்லவா? பலசாலிகள் செய்யும் எந்தக் காரியமும் நியாயம் என்று கருதப்படுகிற போது, யாருமே, தாங்கள் பலசாலிகளாயிருக்கும் படிக்கே காரியங்களைச் செய்வர். ஆனால் அந்த நியாயமானது, பலாத்காரத்தின் துணையில்லாதபோது வலி விழுந்து போகிறது. அப்படிப்பட்ட நியாயம் என்ன நியாயம்? கட்டாயத்திற்காகக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமானால், கடமைக்காகக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமே இல்லாமல் போகிறது. மனிதர்கள், கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப்படுத்தப் படவில்லையானால், கடமைப்படுவது என்பது இல்லாமலே போய் விடுகிறது. ஆகையால், இந்த உரிமை அல்லது நியாயம் என்ற வார்த்தைக்கும் பலாத்காரம் என்ற வார்த்தைக்கும் சம்பந்தமேயில்லை. இங்கு இதற்கு அர்த்தமேயில்லை.

'அதிகார வர்க்கங்களுக்குக் கீழ்ப்படிந்து நட' என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்? 'பலாத்காரத்திற்குத் தலை வணங்கு' என்பதுதானே. இந்தத் தத்துவம் நல்லதுதான். ஆனால் இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியதும் அவசியமில்லை. இந்தத் தத்துவத்தை யாருமே மீறி நடக்க மாட்டார்கள் என்று சொல்கிறேன். எல்லா அதிகாரங்களும் கடவுளிடமிருந்தே வருகிறதென்று சொல்லுகிறார்கள். நிரம்ப சரி. ஆனால் எல்லா வியாதிகளுங் கூட கடவுளிடத்திலிருந்துதான் வருகின்றன. அதனால் நாம் ஒரு வைத்தியரைக் கூப்பிடுவதினின்று தடுக்கப்பட்டிருக்கிறோமா? ஒரு காட்டிலே நான் போய்க் கொண்டிருக்கிற போழ்து, ஒரு கொள்ளைக்காரன் வழி மறித்து என் பணப்பையைப் பறித்துக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய பலாத்கார சக்திக் கிணங்கி நான் அந்தப் பையைக் கொடுத்து விடுகிறேன். ஆனால் அந்தப் பையை நான் ஒளித்து வைத்துக் கொள்ள முடிகிற போதும், அவனுடைய பலாத்கார சக்திக்குப் பயந்து அதைக் கொடுத்து விட வேண்டுமா? எப்படியும் அந்தக் கொள்ளைக்காரன் வைத்துக் கொண்டிருக்கிற துப்பாக்கியானது, என்னை விட பலாத்கார சக்தியிருக்கிறது.

---

* பலஹீனனான கோபாலனை, பலசாலியான கிருஷ்ணன் தன் பலாத்காரத்தைக் கொண்டு தாக்குகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படித் தாக்கத் தனக்கு உரிமையுண்டு என்று கிருஷ்ணன் கருதுகிறான். கிருஷ்ணனை விட பலசாலியான கோவிந்தன், தன்னுடைய பலாத்கார சக்தி கொண்டு கிருஷ்ணனைத் தாக்கினால் அதுவும் அவனுடைய உரிமைதானே. கோபாலனைத் தாக்கத் தனக்கு உரிமையுண்டென்று எப்படி கிருஷ்ணன் நினைக்கிறானோ, அப்படியே, கிருஷ்ணனைத் தாக்கத் தனக்கு உரிமையுண்டென்று கோவிந்தனும் கருதலாமல்லவா? ஒருவனுக்குள்ள உரிமை மற்றொருவனுக்கும் உண்டல்லவா?

ஆகையால், பலாத்காரமே உரிமையும் நியாயமும் ஆகாது என்பதை நாம் ஒத்துக்கொள்வோமாக. சட்டரீதியான அதிகாரிகளைத் தவிர மற்றவர்களுக்கு நாம் கீழ்ப்படியக் கட்டுப்பட்டவர்களல்ல. ஆகையால் என்னுடைய முதற் பிரச்னை திரும்பவும் எழுகிறது.

4. அடிமைத்தனம்

எந்த மனிதனுக்கும் தன் சகோதர மனிதர்கள் மீது ஆதிக்கஞ் செலுத்த இயற்கையான அதிகாரம் கிடையாது. அதுபோல், பலாத்காரத்தினின்று உரிமை பிறப்பதில்லை. எனவே, மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அதிகாரஞ் செலுத்துகிறார்களென்றால் **எல்லாம் சம்பிரதாயத்தின் மீதுதான்.**

ஒரு தனிப்பட்ட மனிதன், தன்னுடைய சுதந்திரத்தை ஓர் எஜமானனுக்குப் பராதீனப் படுத்தி விட்டு, அவனுடைய அடிமையாகி விடுவது சாத்தியமானால், ஒரு ஜாதி, தன்னுடைய சுதந்திரத்தை ஓர் அரசனுக்குப் பராதீனப் படுத்தி விட்டு ஏன் அவனுடைய அடிமையாகக் கூடாது? க்ரோஷியஸ் இப்படித்தான் கேட்கிறான். இங்கே விளக்கிச் சொல்ல வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. ஆனால், பராதீனப் படுத்தி விடுவது என்ற ஒரு வார்த்தையை மட்டும் எடுத்துக் கொள்வோம். பராதீனப் படுத்தி விடுவது என்று சொன்னால் கொடுத்து விடுவது அல்லது விற்று விடுவது என்று அர்த்தம். ஒரு மனிதன், மற்றொருவனுக்கு அடிமையாகி விடுகிறானென்று சொன்னால், அவன் தன்னையே அவனுக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறானென்பது அர்த்தமில்லை. குறைந்த பட்சம் பார்த்தால், தன் ஜீவனத்திற்காக அவன் தன்னை விற்கிறான். ஆனால் ஒரு ஜாதி ஏன் தன்னை விற்க வேண்டும்? நியாயமாக ஓர் அரசன், தன் பிரஜைகளுக்கு, அவர்களுடைய ஜீவனத்திற்குத் தேவையான பொருள்களை உதவ வேண்டும், அதற்குப் பதிலாக, அரசன்தான், தன் ஜீவனத்திற்காக ஜனங்களிடமிருந்து பெறுகிறான். ராபெலெய்ஸ்‡ என்பவனுடைய கட்சிப்படி அரசன், சொற்பத் தேவைகளைக் கொண்டு வாழ்வதில்லை. அப்படியானால், பிரஜைகள், தங்கள் சொத்துக்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் மீதுதான், தங்களையும் அரசனுக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறார்களா? அப்படியானால் அவர்களிடத்தில் வாழ்க்கையை நடத்துவதற்காக மிஞ்சியிருப்பதுதான் என்ன?

இதற்குப் பதில் கூறலாம், சுயேச்சாதிகாரியாயுள்ள அரசன், தன் பிரஜைகளுக்குச் சமாதானத்தை வழங்குகிறானென்று.† அதாவது,

---

Rabelais—1483-1533. சமுதாயப் பழக்க வழக்கங்களை நகைச்சுவைபடக் கண்டித்து எழுதிய ஒரு பிரெஞ்சு நூலாசிரியன்.

பிரான்சில் பதினைந்தாவது லூயி மன்னன் (1710-1774) ஆண்ட காலத்தில், ராஜ்ஜியம் மிகவும் அலங்கோலமான நிலைமையில் கிடந்தது. இந்த லூயி மன்னனுடைய காலத்தில்தான், இந்தியாவில், பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் டைத்த வியாபாரப் போட்டி உண்டாயிற்று. பிரான்சில் ஜனங்கள் அதிகமான வரி விதிக்கப்பட்டுத் துன்புறுத்தப் பட்டார்கள். இந்தக் காலத்து ஆட்சி முறையைப் பற்றியே ருஸோ இங்குச் சுட்டிக் காட்டுகிறான்.

தன்னுடைய ஜனங்கள் சமாதானமாக வாழும்படி ஓர் அரசன் ஏற்பாடுகள் செய்து வைக்கிறானல்லவா? இருக்கலாம். ஆனால் இந்தச் சமாதானத்தினால் பிரஜைகள் அடைகிற லாபமென்ன? அரசனுடைய பேராசை காரணமாக ஏற்படுகிற யுத்தங்கள், ஜனங்களை வந்து தாக்குகின்றன. மற்றும், அவனுடைய தணிக்க முடியாத ஆசைகளும், நிருவாக ஊழலினால் ஏற்படுகிற சில்லரைத் தொந்திரவுகளும் சேர்ந்து ஜனங்களைப் பாதிக்கின்றன. ஜனங்களுக்குள்ளேயே எத்தனையோ மனமாற்சரியங்கள் இருக்கலாம். இவைகளினால் அவர்கள் அவதியும் படலாம். ஆனால், இந்த அவதிகளை விட, அரசனுடைய செயல்களினால் ஏற்படுகிற பாதகங்களின் விளைவுகள் அதிகமல்லவா? அரசன், தன் பிரஜைகளுக்காக ஏற்படுத்திக் கொடுக்கிற அமைதியே, அவர்களுடைய துன்பங்களில் ஒன்றாயிருந்தால், அந்தப் பிரஜைகள், இந்த அமைதியினால் அடைகிற லாபந்தானென்ன? மனிதர்கள், குகைகளில் அமைதியாகத்தான் வாழ்கிறார்கள். அப்படி வாழ்வதே அவர்களுக்குத் திருப்தியை யளித்து விட முடியுமா? கிரேக்கர்கள், சிக்ளோப்ஸ்¶ என்ற குகையில் அமைதியாகவே வாழ்ந்து வந்தார்கள். எதுவரையில்? கடைசி முறையாக அழிக்கப்படுகிற வரையில்.

ஒரு மனிதன், எவ்வித பிரதிப் பிரயோஜனமும் இல்லாமல் தன்னைப் பிறருக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறானென்று சொல்வது சுத்த அபத்தம். இப்படி நினைக்கக்கூட முடியவில்லை. அப்படி ஒப்புக் கொடுப்பது நியாயமற்றது கூட. அது செல்லுபடியும் ஆகாது. ஏனென்றால் அப்படி ஒப்புக் கொடுக்கிறவன், சித்த சுவாதீனமில்லாதவனாகத்தான் இருக்க வேண்டும். இதே பிரகாரம், ஒரு ஜாதியானது, எவ்வித பிரதிப் பிரயோஜனமுமில்லாமல் தன்னைப் பிறருக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறதென்று சொன்னால், அந்த ஜாதி முட்டாள்கள் நிறைந்த ஜாதியாகத்தான் இருக்க வேண்டும். பைத்தியக்காரத்தனம், உரிமையை அளிப்பதில்லை.

தன்னைப் பிறருக்குப் பராதீனப் படுத்திக் கொள்கிற ஒவ்வொரு மனிதனும், தன்னைத்தான் பராதீனப் படுத்திக் கொள்ளலாமே தவிர, தன் குழந்தைகளைப் பராதீனப் படுத்த முடியாது. அந்தக் குழந்தைகள் சுதந்திரத்துடனேயே பிறக்கின்றனர். அவர்களுடைய சுதந்திரம் அவர்களுக்கே சொந்தமானது. அவர்களைத் தவிர, வேறு யாரும் அவர்களுடைய சுதந்திரத்தை விலைவாரி செய்ய முடியாது. அவர்கள், தக்க வயதடைவதற்கு முன்னர் வரையில், அவர்களுடைய தகப்பனார், அவர்கள் பெயரால், அவர்களுடைய பாதுகாப்புக்கும் நன்மைக்கும் உகந்த நிபந்தனைகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால் அவர்களை, திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாதபடியும், எவ்வித நிபந்தனையின்றியும் பிறருக்கு ஒப்படைத்து விடக்

¶ Cyclops—கிரேக்க இதிகாசத்திலே காணப்படுகிற ஒரு ராட்சத ஜாதியார். ஹோமர் என்ற கிரேக்க ஆசிரியன், எழுதிய 'ஒடெஸ்ஸே' என்ற காவியத்தில் வருகிற ஒரு சம்பவத்தையே இங்கு ரூஸோ குறிப்பிடுகிறான்.

கூடாது. அப்படி ஒப்படைப்பது, இயற்கைக்கு விரோதம்; ஒரு தகப்பனுக்குரிய உரிமையினின்று மீறியதுமாகும். ஆதலின், ஒரு சுயேச்சாதிகார அரசாங்கமானது, தர்ம நியாயமான ஓர் அரசாங்கமாக இருக்க வேண்டுமானால், அந்த அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ ஒவ்வொரு தலைமுறையினருக்கும் உரிமை அளிக்க வேண்டும். இந்த உரிமை ஒவ்வொரு தலைமுறையினருக்கும் இருக்குமானால் அரசாங்கம் சுயேச்சாதிகார அரசாங்கமாயிருக்க முடியாது.

ஒரு மனிதன், தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்று சொன்னால், அவன், தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டானென்றுதான் அர்த்தம். அது மட்டுமல்ல; மானிட ஜாதியின் பொருட்டு அவனுக்கேற்பட்டிருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் துறந்து விட்டான். எல்லாவற்றையும் துறந்த ஒருவனுக்கு, எதைக் கொண்டும் நஷ்ட ஈடு செய்ய முடியாது. தவிர, அப்படித் துறப்பது மனித சுபாவத்திற்கு முரண்பட்டது. ஒரு மனிதனுடைய இச்சா சக்தியிலிருந்து—அதாவது ஒரு மனிதன் தன் இச்சைப்படி காரியங்களைச் செய்வதிலிருந்து—அவனுடைய சுதந்திரத்தை எடுத்து விடுவதென்று சொன்னால், அவன் செய்கிற செயல்களிலிருந்து எல்லா தருமங்களையும் எடுத்து விடுவது என்பதுதான் அர்த்தம்.† ஒரு பக்கம் பூர்ண சுயேச்சாதிகாரம்; மற்றொரு புறம் எல்லையில்லாத கீழ்ப்படியுந் தன்மை; இப்படி ஒரு சம்பிரதாயம் விதிக்குமானால் அது வியர்த்தமான சம்பிரதாயம்; முரண்பட்ட சம்பிரதாயம். ஒரு மனிதனிடமிருந்து, நமக்குத் தேவையானவற்றையெல்லாம் பெற்றுக் கொள்ள நமக்கு உரிமையிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால், அந்த மனிதனுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோமென்று சொல்வது எப்படிப் பொருந்தும்? * அப்படி நாம் கடமைப்பட்டிருக்கக் கட்டுப்பட்டவர்கள் என்று ஒரு நிபந்தனை விதிக்கப்படுமானால், கொடுப்பதும் பெற்றுக் கொள்வதுமாகிற செயலே, அர்த்தமற்ற செயலாக வல்லவோ ஆகி விடுகிறது? உதாரணமாக, என்னிடத்தில் ஓர் அடிமை இருக்கிறானென்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் உடைமையெல்லாம் என் உடைமை. அப்படியிருக்கிற போது, என்னிடத்திலிருந்து அவன் எந்த விதமான உரிமையை எதிர் பார்க்க முடியும்? அவனுடைய உரிமைகளெல்லாம் என்னுடைய உரிமைகள்.

---

† இதன் தாத்பரியம் என்னவென்றால், ஒரு மனிதன், தன்னிச்சையாகக் காரியங்களைச் செய்ய அனுமதிக்கப் படுகிற வரையில்தான், அவன் தர்ம நியாயமாக நடந்து கொள்வான் என்பதுதான்.

* கொடுக்க வேண்டியது அந்த மனிதனின் கடமை; பெற்றுக் கொள்ள வேண்டியது நமது உரிமை. அப்படியிருக்க, நாம் அந்த மனிதனுக்குக் கடமைப் பட்டிருக்கிறோமென்பது எங்கிருந்து வந்தது?

எனவே, என்னுடைய உரிமைகளிடமிருந்தே நான் உரிமைகளை எதிர் பார்க்கிறேனென்று சொல்வது அர்த்த மற்ற வார்த்தை.

ஒரு மனிதனை, மற்றொரு மனிதன் அடிமைப் படுத்தி வைத்துக் கொள்ள உரிமை யுண்டு என்ற கொள்கையானது, யுத்தத்தினின்று பிறந்தது என்று க்ரோஷியஸ் முதலாயினோர் சாதிக்கின்றனர். இவர்களுடைய கட்சிப்படி, யுத்தத்தில் ஜெயித்தவர்கள், தோற்றவர்களைக் கொல்லும் உரிமையுடையவர்கள். அந்த உரிமையை ஜெயித்தவர்கள் உபயோகியாமல், தோற்றவர்களுடைய சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து, உயிரைக் கொடுக்கிறார்கள். அதாவது தோற்றவர்கள், தங்கள் சுதந்திரத்தை விற்று உயிரை வாங்கிக் கொள்கிறார்கள். ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்கிக் கொள்வதென்கிற இந்த ஒப்பந்தமானது, நியாயமாகவும் ஆகிவிடுகிறது; உபய கட்சியினருக்கு நன்மையையும் அளிக்கிறது. இதுதான் க்ரோஷியஸ் முதலாயினோரின் வாதம்.

ஆனால் யுத்தத்தில் தோற்றவர்களைக் கொல்வதென்கிற இந்தப் போலி உரிமை இருக்கிறதே, இது, யுத்தத்தின் விளைவாகத் தோன்றின உரிமையல்லவே. மனிதர்கள் பரஸ்பரம் சத்துருக்களல்லர். மனிதர்களுடைய பரஸ்பர சம்பந்தமானது, ஒரு சமாதான நிலைமையையோ, அல்லது ஒரு யுத்த நிலைமையையோ ஏற்படுத்தி வைக்கக் கூடிய அவ்வளவு பலம் பொருந்தியதாயில்லை.* யுத்தம் ஏற்படுவதற்குக் காரணம், மனிதர்களின் பரஸ்பர சம்பந்தமல்ல; விஷயங்களின் சம்பந்தந்தான் காரணம். மனிதர்களுடைய பரஸ்பர சம்பந்தத்தினால் யுத்தம் ஏற்படுவதில்லையென்ற முடிவுக்கு நாம் வந்து விட்டோமானால், மனிதனுக்கும் மனிதனுக்கும் இயற்கையாகவே யுத்தம் ஏற்படக் காரணமில்லை யென்ற முடிவுக்கும் வந்து விடுவோம். அதாவது தனிச் சொத்துரிமை இல்லாமலிருப்பதுதான் இயற்கை. எங்குத் தனிச் சொத்துரிமை யில்லையோ அங்கு யுத்தமில்லை. அல்லது எந்த ராஜ்யத்தில், சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்குட் பட்ட அரசாங்கம் நடைபெறுகிறதோ அந்த ராஜ்யத்திலும் சண்டைகள் ஏற்படக் காரணமில்லை. ஆகையால் மனிதனுக்கு மனிதன் சண்டை போட்டுக் கொள்கிறானென்று சொல்வது இயற்கைக்கு விரோதம். இயற்கைக்கு விரோதமான சக்திகள்தான், யுத்தத்திற்குக் காரணமாயிருக்க முடியும்.

தனிப்பட்ட மனிதர்கள் இரண்டு பேர் சண்டை போட்டுக் கொள்கிறார்களென்று சொன்னால், அது யுத்தமாகாது. பிரான்சின் மன்னனாகிய ஒன்

* அதாவது மானிட சுபாவம், எப்பொழுதும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிற சுபாவம் இல்லை; அப்படியே எப்பொழுதும் சமாதானமாக வாழுகிற சுபாவமும் இல்லை.

பதாவது லூயி*யினால் அங்கீகரிக்கப்பட்டு, அவனுடைய பிரபுக்களுக்குள்ளேயே நடை பெற்ற யுத்தங்கள், 'கடவுளின் சமாதான எச்சரிக்கை' யினால் தள்ளி வைக்கப்பட்டன. இந்த யுத்தங்களெல்லாம், பிரெஞ்சு பாளையக்காரர்களுடைய ஆட்சி முறையின் துஷ்பிரயோகங்கள். இந்தப் பாளையக்கார ஆட்சி முறையே, இயற்கை உரிமைகளுக்கும், நல்ல அரசாங்கத்திற்கும் நேர்முரணானது.

எனவே, யுத்தம் என்பது மனிதனும் மனிதனும் சம்பந்தப் படுகிற ஒரு பிரச்னையல்ல; ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் உள்ள சம்பந்தத்தை யொட்டிய பிரச்னை. இந்த யுத்தத்தில், தனிப்பட்ட மனிதர்கள் சத்துருக்களாகச் சந்திக்கிறார்களென்று சொன்னால் அஃது அகஸ்மாத்தான சந்திப்புத்தான். இங்ஙனம் இவர்கள் மனிதர்களுக்கு மனிதர்கள் என்ற முறையிலோ, பிரஜைகளுக்குப் பிரஜைகள் என்ற முறையிலோ சந்திக்கிறார்களில்லை. போர் வீரர்களாகத்தான் சந்திக்கிறார்கள். தங்கள் தங்கள் தாய் நாட்டின் பிரஜைகளாக இவர்கள் சந்திக்கிறதில்லை; தங்கள் தங்கள் தாய் நாட்டைக் காப்பாற்றும் முறையிலேதான் சந்திக்கிறார்கள். சுருக்கமாகக் கூறப்போனால், ஒரு ராஜ்யம், மற்றொரு ராஜ்யத்தைத்தான் சத்துருவாகக் கொள்ள முடியுமே தவிர, தனிப்பட்ட மனிதர்களைச் சத்துருக்களாகக் கொள்ள முடியாது. வித்தியாசப்பட்ட இரண்டு வஸ்துக்களின் சம்பந்தா சம்பந்தத்தை நாம் எவ்விதமாகவும் வரையறுத்து நிர்ணயிக்க முடியாதல்லவா?

இந்தச் சித்தாந்தம், எல்லா யுகங்களிலும் அநுசரிக்கப்படுகிற கோட்பாடுகளுக்கும், எல்லா நாகரிக நாடுகளின் அநுஷ்டானத்திற்கும் ஒத்ததாகவே இருக்கிறது. ஓர் அரசாங்கம், மற்றோர் அரசாங்கத்தின் மீது யுத்தந் தொடுக்கப் போவதாக அறிக்கை வெளியிடுமானால், எந்த அரசாங்கத்தை நோக்கி இந்த அறிக்கை வெளியிடப்பட்டதோ அந்த அரசாங்கத்திற்குத்தான் எச்சரிக்கையே தவிர, அந்த அரசாங்கத்தின் பிரஜைகளுக்கல்ல. ஒரு ராஜ்யத்தின் மீது யுத்தந் தொடுக்கப் போவதாக முன்னெச்சரிக்கை செய்யாமல், அந்த ராஜ்யத்தின் பிரஜைகளை மற்றோர் அரசன் அல்லது அரசாங்கம் கொள்ளையடிக்கவோ, கொல்லவோ,

---

Louis IX—இவன் 1226ம் வருஷத்திலிருந்து 1270ம் வருஷம் வரை ஆண்டான். இவனுடைய ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த பிரபுக்கள், பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இவர்கள் சண்டை போட்டுக் கொள்வதாயிருந்தால், நாற்பது நாட்கள் இடைவிட்டு இடை விட்டுத்தான் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும் என்று மேற்படி லூயி மன்னன் உத்திர விட்டான். அப்படி இவன் உத்திரவிட்டது, இவனே அந்த யுத்தங்களை ஆதரித்த மாதிரி யில்லையா? இதைத்தான் இங்கு ரூஸ்ஸோ குறிப்பிடுகிறான். கி. பி. பதினோராவது நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்த பாதிரிமார்கள் ஒன்று சேர்ந்து, பிரபுக்களில் ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாதென்று ஒரு திருமுகம் விடுத்தார்கள். இதற்குக் 'கடவுளின் சமாதான எச்சரிக்கை' என்று பெயர். இதைப் பற்றியும் ரூஸ்ஸோ இங்குக் குறிப்பிடுகிறான்.

சிறைவைக்கவோ செய்யுமாகில் அந்த அரசனை அல்லது அரசாங்கத்தை சத்துருவர்க்கத்தில் சேர்க்கக் கூடாது; கொள்ளைக்காரக் கூட்டத்திலேயே சேர்க்க வேண்டும். பகிரங்கமான ஒரு யுத்தத்தில் கூட நியாயமான ஓர் அரசன் என்ன செய்கிறானென்றால், சத்துரு ராஜ்யத்திலுள்ள அரசாங்கச் சொத்துக்களை யெல்லாந் தான் சுவாதீனப் படுத்திக் கொள்கிறானே தவிர, தனிப்பட்டவர்களின் சொத்து சுதந்திரங்களைப் பராமரிக்கவே செய்கிறான். எந்த உரிமைகளின் மீது தன்னுடைய உரிமை நிறுவப் படுகிறதோ அந்த உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கிறான்.* யுத்தத்தின் நோக்க மென்ன? சத்துரு நாட்டை அழிப்பது. அப்படியானால் அந்தச் சத்துரு நாட்டைப் பாதுகாக்கிறவர்கள், ஆயுதபாணிகளா யிருந்தால் அவர்களைக் கொலை செய்ய உரிமை யுண்டென்று சொல்லலாம். ஆனால் அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுச் சரணாகதி யடைந்து விடுவார்களானால் அவர்கள் சத்துருக்களாகவோ, சத்துருக்களின் கருவிகளாகவோ கருதப்படக் கூடாது. அவர்கள் சாதாரண மனிதர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய உயிரின் மீது யாருக்கும் எந்த விதமான உரிமையுமில்லை. சில சந்தர்ப்பங்களில், ஒரு ராஜ்யத்தின் பிரஜைகளில் ஒருவரைக் கூடக் கொல்லாமல் அந்த ராஜ்யத்தை அழித்து விட முடிவதுண்டு. யுத்தமானது, எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்குத்தான் உரிமையைக் கொடுக்கிறது. இவை யெல்லாம் க்ரோஷியஸின் தத்துவங்களல்ல. கவிகளின் திருவாக்கை ஆதாரமாகக் கொண்டு இவை நிர்ணயிக்கப் படவில்லை. இவை இயற்கையினின் றெழுந்தவை. தர்க்க நியாயத்தை அஸ்திவாரமாகக் கொண்டவை.

ஒரு பலசாலிக்குத்தான் எல்லா உரிமைகளும் உண்டு என்று சொல்வது எப்படி நியாயமில்லையோ, அப்படியே ஒரு நாட்டை மற்றொரு நாடு வெற்றி கொள்வதும் நியாயமில்லைதான். யுத்தமானது, வெற்றி பெற்றவர்களுக்கு, தோல்வி யடைந்தவர்களைக் கொலை செய்யலா மென்ற உரிமையை அளிக்கவில்லை. வெற்றி பெற்றவர்களுக்கு இந்த உரிமையில்லையானால், அவர்களுக்குத் தோல்வி யடைந்தவர்களை அடிமை கொள்ளவும் உரிமையில்லை. ஒரு சத்துருவை நம்மால் அடிமை கொள்ள முடியாத பொழுது அவனைக் கொலை செய்ய நமக்கு உரிமை யுண்டு என்று சொன்னால், அந்த உரிமையினின்று அவனை அடிமை கொள்ளும் உரிமையும் பிறக்கவில்லை.* ஆகையால், ஒருவனுடைய சுதந்திரத்தை வாங்கிக் கொண்டு அவனுடைய உயிரைக் கொடுப்ப

* அதாவது பிரஜைகளின் உரிமைகளை அஸ்திவாரமாகக் கொண்டுதான் அரசனுடைய உரிமை நிறுவப் படுகிறது.

* அதாவது ஒருவனை அடிமை கொள்ள நமக்கு உரிமையில்லையானால் அவனைக் கொலை செய்யவும் நமக்கு உரிமையில்லை. அப்படியே ஒருவனைக் கொலை செய்ய நமக்கு உரிமை யில்லையானால், அவனை அடிமை கொள்ளவும் நமக்கு உரிமை யில்லை.

தென்கிற இந்தப் பரிவர்த்தனையே அநியாயமானது. அடிமை கொள்கிற உரிமையின் மீது மரண தண்டனை விதிக்கும் உரிமையை ஸ்தாபிக்கப் பார்ப்பதும், மரண தண்டனை விதிக்கும் உரிமையின் மீது அடிமை கொள்ளும் வழக்கத்தை ஸ்தாபிக்கப் பார்ப்பதும், ஒரு துன்மார்க்கச் சூழலில் சுழன்று கொண்டிருப்பது போலில்லையா?

யுத்தத்தில் தோல்வி யடைந்தவர்களைக் கொலை செய்ய உரிமை யுண்டென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் யுத்தத்தில் கைதி செய்யப்பட்டவர்கள், அல்லது வெற்றி கொள்ளப் பட்ட நாடுகளிலுள்ளவர்கள் முதலியோர், தங்கள் எஜமானர்களுக்கு எந்த விதத்தில் கடமைப் பட்டிருக்கிறார்கள்? வேண்டுமானால் கட்டாயத்தின் மீது அந்த எஜமானர்களுக்குக் கீழ்ப்படியக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். அவர்களுடைய உயிரைக் கொடுத்து, அதற்குச் சமமான மற்றொன்றை (சுதந்திரத்தை) எடுத்துக் கொண்டு விடுவதனால், அந்த எஜமானர்கள், தங்களுடைய அடிமைகளுக்கு எந்த விதமான தயவையும் காட்ட வில்லையே. நஷ்டத்திற்காக அந்த அடிமைகளைக் கொலை செய்யாமல், தங்கள் சுய நன்மைக்காக அவர்களை அதாவது அவர்கள் சுதந்திரத்தை அழித்து விட்டார்கள். அவ்வளவுதான். ஆகையால், ஓர் எஜமானனுக்குத் தன் அடிமையின் மீது பலாத்காரத்தைத் தவிர வேறு அதிகாரமில்லை. எப்பொழுதும் போல் எஜமானனுக்கும் அடிமைக்கும் மத்தியில் யுத்த நிலைமை இருந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த இருவருக்கு முள்ள சம்பந்தம் கூட, இந்த யுத்த நிலைமையின் விளைவுதான். இந்த யுத்த உரிமைகளை, ஓர் எஜமானன், தன் அடிமையின் மீது செலுத்துவானாகில் இருவருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்படாதென்பது நிச்சயம். அப்படி யிருந்தும், இருவரும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே யென்று சொன்னால் அது சம்பிரதாயத்தின் மீதுதான். ஆனால் இந்தச் சம்பிரதாயமானது, யுத்த நிலைமைக்கு முடிவு காண்பதற்குப் பதிலாக, அதனை நீடிக்கச் செய்கிறது.

ஆகையால், இந்தப் பிரச்னையை நாம் எந்தவிதமாகப் பரிசீலனை செய்து பார்த்தாலும், அடிமை கொள்ளும் உரிமையானது, செல்லுபடியாகாது. ஏனென்றால் அது நியாயமற்றது. தவிர கேவலமானது; அர்த்தமில்லாதது. அடிமைத்தனம், உரிமை என்ற இந்த இரண்டு சொற்றொடர்களே ஒன்றுக் கொன்று முரண்பட்டவை; தனிப்பட்டு நிற்பவை. ஒரு மனிதன், மற்றொரு மனிதனைப் பார்த்தோ, அல்லது ஒரு ஜாதியைப் பார்த்தோ கீழ்க்கண்டபடி கூறுவானாகில், அது எவ்வளவு முட்டாள் தனமானது என்று பாருங்கள் :—

"உனக்குத் தீமையை விளைவிக்கக் கூடியதும் எனக்கு நன்மையைத் தரக் கூடியதுமான ஓர் ஒப்பந்தத்தை நாமிருவரும் செய்து கொள்வோம். அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை, நான் விரும்புகிற வரையில் அநுஷ்டிப்பேன்; நீயும் அப்படியே நான் விரும்புகிற வரையில் அநுஷ்டிக்க வேண்டும்."

—"பால போதகர்"

தேடி யெடுத்த திரவியங்கள்

(முன்தொடர்ச்சி)

கொடிப்புரை நுவலேல்
நோன்பு கொல்லாமை
பல கலை பயில்
பாடேதும் பார்த்துண்
பிறவிப் பயன் பெறு

பித்துதல் விலக்கு
புகழ் கண்டு மகிழேல்
பூரியர்க் கிலை சீர்
பெண்ணணி நடும்பம்
பேதை யெனப் பெயரெடேல்

பைந்தளி ரென மகிழ்
பொய் மெய் யாக்கேல்
போற்றுக தாய் மொழி
மனவலி பெருக்கு
மாதவம் பொறுமை

மின்னென விரைவுகொள்
மீப்பிலா தழிக்கேல்
முயல்வ தொழியேல்
மூதுரை அமிர்தம்
மெய் பொய் யாக்கேல்

மேலோர் புகழ வாழ்
மையல் வலைப்படேல்
மொழிக் கழ கினிமை
மோனம் விரும்பு
அயரா தறம் செய்

இரக்கமுத விருத்து
இலட்சிய முயர்த்து

வயிரம் போல் வாழ்ந்திரு
வாழைபோ லுதவு
வினை வீறு கொள்

விண்பொழு தோட்டேல்
உறுதிகொண் டோங்கு
ஊக்கமே ஆக்கம்
வெள்ளி முன் விழித்தெழு
வேளாண்மை விரும்பு

வையப் புகழ் பெறு
ஒழிப்பன ஒழி
ஓதிய வழி நில்
இழந்தவைக் கிரங்கேல்
அளவோ டழித்துண்

அற நெறி நில்
அனந்த நலஞ்செய்
உலகெலாம் வாழ்க!

போலிச் சீர்திருத்தம்

—நா. லக்ஷ்மீ நரசிம்மம்.

1. ஜாதி மதங்களையும் அழிப்போம்—பழஞ்
சாத்திரம் யாவையும் ஒழிப்போம்
பேதம்யாவு மிவற்றாலே—எனப்
பித்துப் பிடித்தவரைப் போலே

2. நாடெங்குமே தம்மைப் பகட்டி—பல
நச்சு நினைவுகளைப் புகட்டி
வேடம் புரிபவரை யாண்டும்—நாம்
வெருட்டித் துரத்திவிட வேண்டும்

3. மேடைதனில் நின்றிருகை வீசும்—மிக
விளங்கும் பொதுவுடமைப் பேச்சும்
நாடகம் முடிந்தவுடன் அரங்கம்—மறு
நாழிகை இருண்டதுபோல் உறங்கும்

4. அன்புமழை பொழிந்து விட்டால்—பின்னர்
ஆயிரம் ஜாதிகள் என்செய்யும்
இன்பம்மிகப் பெருகி வருமே—அது.
எல்லோருக்கும் நல்வாழ்வு தருமே

—"நிர்வேத சைதன்யர்"

மீராபாயின் சரித்திரமும் பாடல்களும்

இராஜ புத்தானம் என்னும் நாட்டிலுள்ள கட்கி என்னுஞ் சிறு கிராமத்தில் மீராபாய் 1499ம் ஆண்டில் பிறந்தாள். அவளுடைய தந்தையின் பெயர் ரதன்சிங் ராதோர். அவள் மோர்த்தா இராஜதானியின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். அக்குடும்பத்தவர்கள் விஷ்ணு பக்திக்கும், வீரத்துக்கும் பெயர் பெற்றவர்.

வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்தவளான படியால் மீராபாய் இளம் பிராயத்திலே பக்திச் சுவையில் ஈடுபட்டாள். அந்தப் பக்தி ரசமானது வளர்ந்து, அவள் வாழ்வு முழுமையும் பக்திமயமாகவே மாற்றி விட்டது.

ஒரு நாள் தெரு வழியாக ஒரு கலியாணப் பவனி நடந்து கொண்டிருந்தது. அத்தருணம் மீராவின் தாயைத் தவிர மற்றெல்லாப் பெண்களும் அப்பவனியைப் பார்க்கச் சென்றிருந்தனர். மீராபாய் தன் தாயைத் தேடிய போது, அவள் பூசையறையிலே தனது இஷ்ட தெய்வமாகிய கிரிதரனை (கிருஷ்ணன்) வழிபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். 'அம்மா, எனது மணவாளன் எங்கே?' என்று மீரா வினவினாள். உடனே தாயானவள் கிரதானின் விக்கிரகத்தைக் காட்டி, 'இதோ இருக்கிறான் உன் கணவன்' என்று கேலியாகப் பதிலளித்தாள். அன்று தொடக்கம் மீராபாய் தனது இஷ்ட தெய்வத்தைத் தன் கணவனாகக் கருதிப் பேரன்பு செலுத்தி வந்தாள்.

மீராபாய் வளர்ந்து பிராயமடைந்ததும், மேவார் அரச குமாரனாகிய கன்வர் போஜனை 1515ம் ஆண்டில் மணந்தாள். விவாகம் முடிந்தவுடன், குல தெய்வமாகிய கிரிதரனின் விக்கிரகமின்றித் தனது கணவன் வீட்டுக்குச் செல்ல மறுத்து விட்டாள். தாய் அந்த விக்கிரகத்தை மீராவுக்குக் கொடுத்துக் கணவன் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள். அவளுடைய கணவனின் இஷ்ட தேவதை, துர்க்கா மாதாவாகும். வீடு சென்றவுடன் மாமியார் அவளுடைய குல தெய்வமாகிய துர்க்கா தேவியை நமஸ்கரிக்கும்படி மீராவைக் கேட்டாள். அவள் அப்படிச் செய்ய மறுத்து விட்டாள். இதைக் கண்ட மாமன் (சங்காசன்) கோபித்து மீராவைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினான்.

இந்தச் சம்பவங்கள் உண்மையாக நடைபெற்றனவோ, அல்லவோ என்று திடமாகச் சொல்வதற்குத் தக்க ஆதாரங்களில்லை. ஆனால் அந்தக் காலத்து மக்களின் குறுகிய மனப்பான்மையை இச் செயல்கள் நிரூபிக்கின்றன. மீராபாயின் கணவன் 1528ம் ஆண்டில் இறந்தான். அவன் இறந்ததும் அவளுடைய மனை வாழ்க்கை முடிந்தது. அவளுக்குப் பிள்ளைகளிருந்ததாகச் சரித்திரங் கூறவில்லை.

மீராபாயின் மாமனாகிய சங்கன் இறந்த பின், அவனுடைய புதல்வரிலொருவனாகிய விக்கிரமஜித்து மேவார் புரிக்கு அரசனாயினன். இந்த அரசன்

மீராவுக்கு அதிக இன்னல்களை விளைத்ததாக அவளுடைய பாடல்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. கணவனிறந்த பின்னர் மீராபாய் தனது முழுநேரத்தையுங் கிரிதாரனின் வழிபாட்டில் செலவிட்டாள். மாளிகையைத் துறந்து, சன்னியாசிகள், பரதேசிகள் முதலியோர் கூட்டத்தைச் சேர்ந்தாள். இச் செயல்கள் விக்கிரமஜித்துக்குப் பிடிக்கவில்லை. அரச குடும்பத்திலே பிறந்து, வளர்ந்து, ராஜ போகங்களை அநுபவித்த மீராபாய் இந்தப் பரதேசிகளின் கூட்டத்தில் தெருவழிச் செல்லலாமா என்று மனம் வருந்தினான். அரசன், தனது சகோதரியாகிய யூதாபாயை அழைத்து மீராவுடன் பரிந்து பேசி அவளைக் அக் கூட்டத்திலிருந்து நீக்கும்படி கேட்டான். யூதாபாய் எவ்வளவு புத்திமதிகளை யெடுத்துக் கூறிய போதிலும் மீரா அவளுடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

பின்னர் மீராபாயின் கஷ்டங்கள் ஆரம்பமாயின. தனது மைத்துனன் விக்கிரமஜித் அவளைக் கொல்வதற்குப் பல உபாயங்கள் செய்தானென்றும், அவையனைத்தும் தெய்வாதீனமாகச் சித்திபெற வில்லையென்றும் பல வரலாறுகள் கூறுகின்றன. ஒரு முறை விக்கிரமஜித், அவளுக்குப் பாஷாணம் (நஞ்சு) கொடுத்தான். அவள் அதைவாங்கிச் சாணாமிர்தம் (தீர்த்தம்) எனக்கருதிக் குடித்த படியால் அந்த நஞ்சு அவளைக் கொல்ல வில்லை. மற்றொரு முறை மீராவைக் கடிக்கும்படி அவன் ஒரு நாகப்பாம்பை ஏவினான். பாம்பு கடித்த போதிலும் அவள் உயிர் தப்பினாள். மாளிகையில் மீரா அநுபவித்த துன்பங்களை இவை விளக்குகின்றன. இத்துயரங்கள் மாளிகை வாழ்க்கையை வெறுக்கச் செய்தன. தெய்வம் அவளை அறைகூவி யழைத்தது. தனது இகலோக நாயகன் இறந்ததும், பரலோக நாயகனாகிய கிரிதாரனைப் பற்றுக் கோடாகக் கொண்டாள்.

'நான் இப்பொழுது கிரிதாரனைப் புருஷனாக்கிக் கொண்டேன்; இளவரசே! இனிமேல் உனது ஆணைக்குச் செவி சாயேன்' என்று ஒரு பாட்டில் சிறப்பாகக் கூறுகின்றாள்.

மாளிகையை விட்டு நீங்கித் தன்னந்தனியாகத் தனது ஆத்மீக நாதனைத் தேடித் தேசமெலாம் அலைந்து திரிந்தாள். பரிவிராஜிக காலத்தில் ஏழை மக்களிடையே பெரும்பாலும் கலந்து கொள்வாள். தனது தாய் நாடாகிய மேர்த்தாவில் சில காலந் தங்கி யிருந்தாள். பின்னர் பாஞசி நதிக்கரையை யடைந்து சில காலம ஈசுவர தியானத்தில் அமர்ந்தாள். தெய்விக நாயகனை அடைவதற்குப் பல ஆண்டுகளாக ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். கடைசியாக அவளுடைய உள்ளத்தில் தனது ஆசை நாயகன் வருகையை உணர்ந்து 'ஹரியின் பாதச்சிலம்பொலியை நான் கேட்கின்றேன்' என்று ஆனந்த பரவசமாய்ப் பாடினாள்.

ஹரி தரிசனத்தின் பின் மீரா பிருந்தாவனஞ் சென்றாள். அங்கு கௌடீய வைஷ்ணவ மதத்தின் தலைவர்களு ளொருவராகிய ஜீவ கோஸ்வாமியை சந்தித்தா ளென்று சில வரலாறுகள் கூறுகின்றன. அவ

னுடைய குரு யாவர் என்பதைப் பற்றித் தக்க ஆதாரங்கள் கிடைக்க வில்லை. குஜராத் தேசத்தி லுள்ள சக்கிலிய ஞானியாகிய ராய்தாஸ் என்பவர் அவளுடைய குருவா யிருக்கலா மென்று சில சரித்திரக்காரர் சாதிக்கின்றனர். ஆனல் இது சந்தேகத்துக் கிடமா யிருக்கின்றது; ஏனெனில் ராய்தாசின் பாடல்களில் மீராபாயின் பெயர் கூறப்பட வில்லை. மீராவின் பாடல்களிலும் ராய்தாசைப் பற்றி ஒன்றுங் கூறப்பட வில்லை. மீராபாயின் பாடல்களும், ராய்தாசின் பாடல்களும் குஜராத் தேசமெங்கும் பரவி யிருப்பதால், ராய்தாசின் பிற்காலத்துச் சீடர்கள், தமது குருவைப் பெருமைப் படுத்துவதற்காக, மீராபாய், ராய்தாசின் சிஷ்யை யென்று கூறி யிருக்கலாம்.

மீராபாய், பிருந்தாவனத்தி லிருந்து துவாரகை என்னும் வைஷ்ணவ ஸ்தலஞ் சென்றாள். அவள் அங்கிருக்கும் போது அவளுடைய தேசமாகிய மேவார், அக்பர் அரசனல் தாக்கப்பட்டது. மீராவுக்குக் கொடுமை செய்து, அநியாயமாக நாட்டை விட்டு நீக்கியமையால், தெய்வம் கோபித்து, நாட்டுக்கு இக்கதியை விளைவித்தது என்று அவ்வூர்ச் சனங்கள் நம்பினர்கள். ஆதலினலே அவளை மீண்டுந் தங்கள் தேசத்துக்கு அழைத்து வரும்படி சில பிராமணர்களை அனுப்பினர்கள். பிராமணர்கள் துவாரகை சென்று மீராவைத் தாய் நாட்டுக்குத் திரும்பும்படி பரிந்து கேட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு என்ன செய்ய வேண்டுமென்பது புரியவில்லை. இச் சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காக கோயிலுக்குள் சென்று றஞ்சோட் (கிருஷ்ணர்) முன்னிலையில் ஆனந்த பரவசமாக ஆடிப் பாடினள். பின்னர் சடுதியாக மறைந்து கடவுளோடு இரண்டறக் கலந்து விட்டாள் என்பது சர்வசாதாரண நம்பிக்கையாகும்.

மீராபாயினுடைய பாடல்களிலிருந்து சில பொறுக்குமணிகளை ஈண்டுத் தருவாம்:—

கோயிலுக்குப் போய் வழிபடுவதற்கென்றால் அவர்கள் (மனிதர்) பாதங்கள் நடக்க மறுத்து விடுகின்றன; ஆனல் அயலார்களுக்கிடையே சண்டைச் சச்சரவு நடக்குமானல் தங்கள் வீட்டு வேலைகளையும் மறந்து ஓட்டமும் நடையுமாகப் போய்க் கூட்டத்தைச் சேருகின்றனர்.

கணிகை மாதரின் நடனத்தைப் பார்ப்பதில் பல இராக் காலங்களைக் கழிக்கின்றனர்; ஆனல் ஒருவர் பக்தர் கோஷ்டியைச் சேர்ந்து ஆனந்தக் கூத்தாடினல் அவரைப் பற்றி ஏளனம் பேசுகின்றனர்.

ஃ ஃ ஃ

ஏனையோர் என்ன கூறினும் பொன்னுக்கும் மண்ணுக்கும் உறுகதி யெதுவோ, அதுவே கற்பூரத்திற்கும் ஆபரணங்களுக்கும் உள்ளது.

செல்வனின் செல்வ! நானுன் அடைக்கலம். நான் உன்னையே தியானிக்கின்றேன்.

நான் சியாமனின் சிநேகிதையாகி விட்டேன்; அவனுடைய சிரசிலுள்ள ரத்தின முடியானது பிரகாசிக்கின்றது. மதிப்பற்ற மாலையானது மார்பில் தொங்குகின்றது; நான் அவனு

விக்கிரமன்

டைய பாத கிண்கிணியைக் கேட்கின்றேன்.

நாணம், மடமை, அச்சம், பயிர்ப்பு என்னும் ஸ்திரீ லட்சணங்களெல்லாவற்றையுந் துறந்து அவனுடைய பாதங்களில் சரணாகதி யடைந்தேன்; அன்பனாகிய கிரிதரனே! இந்த உலக பந்தங்களிலிருந்து என்னை நீக்குவாயாக.

ஃ ஃ ஃ

எனக்கு உனது புகழைப் பாடுவதற்குத்தான் தெரியும்; தீர்த்த யாத்திரை, தவம், தியானம் என்பனவொன்றும் எனக்குத் தெரியவே தெரியாது; உன்னை வழிபடுவதற்கு மந்திரமாவது, வழிபாட்டு முறையாவது கற்றறியேன்; வேதங்களை வாசிக்கவுமில்லை; காசி யாத்திரை போகவுமில்லை; நான் உன் அடித் தொண்டன்; உன் புகழைப் பாடுவதில் மட்டுந்தான் நம்பியிருக்கிறேன்.

ஃ ஃ ஃ

உடலெனுந் தீபந்தன்னில் உளமெனும் வர்த்தி நாட்டி அன்பெனும் வெண்ணெய் வார்த்து அல்லும் பகலும் தீபாராதனை செய்வேனாக!

சிராவண மாதங் கழிந்து பத்திர மாதம் பிறந்து விட்டது. மழை காலந் தொடங்குகின்றது; கார் மேகங்கள் வானத்தை இருள் மயமாக்கின; நீயோ இன்னும் வரவில்லை; உன்னை விட்டுப் பிரிந்த காதல் கண்ணீர் தாரை தாரையாக என் கண்களிலிருந்து அருவி போல் பாய்கின்றது.

எனது பெற்றோர் என்னை உனக்குக் கைப்பிடித்துக் கொடுத்தனர்; நீயோ என்னைக் கை விட்டனை; உன்னை விட எனக்கு அன்பு செய்வதற்கு யாருமில்லை யென்பதை நீ நன்கு உணர்வாய்; நீயே என்னுடைய ஏக காதலன்; நீ மட்டுமே எனக்கு உண்மையான இன்பத்தைக் கொடுக்க வல்லவன்; மீராவை உனக்குச் சொந்தமானவளாக்குவாயாக!

ஃ ஃ ஃ

சிநேகிதைகளே! நான் எனது நாதனின் (கிரிதரனின்) உண்மைக் காதலி; அதைப் பற்றி நான் வெட்கமடைய வேண்டியதில்லை; ஆகையினாலேதான் நான் வெளிப்படையாக அவனோடு ஆடிப்பாடித் திரிகின்றேன்.

இரவிலோ தூக்கமில்லை; பகலிலோ பசி தாகமில்லை; இப்பொழுது எனது இன்னல்களெல்லாவற்றையும் நீத்துப் பரலோகஞ் சென்று விடுவேன்; உண்மை யொளி என் உள்ளத்தில் எழுந்து விட்டது.

உற்றார், உறவினரெல்லாந் தேனீக் கூட்டங்கள் போல் வந்து என்னைச் சுற்றிக் கொண்டனர்; மீரா, கிரிதரனின் அடிமையான படியால், அவர்கள் அவளைக் கேலி பண்ணினும் அவள் அதைக் கவனிக்க மாட்டாள்.

ஃ ஃ ஃ

உலகமெல்லாந்தேடியும் ராம நாமத்தைத் தவிர ஒப்பற்ற பொக்கிஷத்தை நான் பெற்றிலேன்.

சகோதரர், சிநேகிதர், சுற்றத்தார் எல்லாரையும் கைவிட்டேன்; அவர்கள் அபிப்பிராயங்களைக் கவனியாது சாது சங்கத்தில் என் காலத்தைக் கழிக்கிறேன்; பக்தர் மகிழ்ந்தனர்; உலகம் சிரித்தது.

ஃ ஃ ஃ

பிருந்தாவனத்துக்கு யோகி யோகம் பயில வந்துள்ளான்; தபசி

தவஞ் செய்ய வருகின்றான்; பக்தர் ஹரி நாம சங்கீர்த்தனம் பாட வந்திருக்கின்றனர்.

ஆழமும், அமைதியு முள்ளவன் மீராவின் அன்பன் கிரிதரன்; என் மனமே! நீ அமைதியாயிரு; என்னுடைய நாதன் அர்த்த ராத்திரியில் அன்பாகிய நதிக்கரையில் உன்னைச் சந்திப்பான்.

கண்ணீராகிய நீரைப் பாய்ச்சி, அன்பாகிய பயிரை எப்படி வளர்த்தேனென்பதை யாவரு மறிவர்; கடைசியாக அப்பயிர் பூத்துக் காய்த்து அமிர்தமாகியபழங்களைக் கொடுத்தன.

ஃ ஃ ஃ

என் கண் முன்னே நில், என் கண்மணியே! நீ என்னை மறவாதே; சம்சார சாகரத்தின் அலைகள் என்னைக் கரைசேர விடாமல் இழுத்துச் செல்லுகின்றன; விரைந்து வந்து என்னை இழுத்துக் கரை சேர்ப்பாயாக; மீராவின் அன்பனாகிய கிரிதரனே! இந்த ஐக்கியமானது அறுதியற்று நிலைபெற்றிருப்பதாக.

ஃ ஃ ஃ

உலகெலாந் தூங்குகின்றது; நானொருத்தி என் நாயகனைப் பிரிந்து விழித்திருக்கின்றேன்.

ஆசை நாயகரைப் பிரிந்த விலைமாதர் முத்து மாலைகளைக் கோக்கின்றனர்; ஆனால் இங்கிருப்பவளாகிய நானோ கண்ணீர்த்துளி மாலைகளைத் தொடுக்கின்றேன்.

இரவெல்லாம் நட்சத்திரங்களை எண்ணிய வண்ணமாகக் கழிக்கின்றேனா; உன்னைக்கண்டு நான் இன்புறுவதெக்காலம்?

மீராவின் நாதனாகிய கிரிதரனே அன்று வந்த நீ இன்று வாராயோ.

ஃ ஃ ஃ

உனது பிரிவை என்னால் சகிக்க முடியவில்லை; நீயில்லாதபோது, தண்ணீரில்லாத தாமரைபோலும், சந்திரனில்லாத வானம்போலும் பிரபையை இழக்கின்றேன்; இராப்பகலாக உன்னை எதிர்பார்த்த வண்ணமாக அலைந்துதிரிகிறேன்; பிரிவாகிய அக்கினி என்னைப் பற்றி எரிக்கின்றது; பகலிலோ பசிதாகமில்லை; இரவிலோ உறக்கமில்லை; ஒருவார்த்தை கூடப் பேச முடியாமல் அமைதியா யிருக்கிறேன். என்னை வந்து சந்தித்து எனது அக்கினியை அணைத்து, குளிர்மையாக்குவாயாக! நீயோ அந்தர்யாமி. உனக்கு உள்ளத்திலுள்ள அந்தரங்கமெல்லாந் தெரியும்; நீ இன்னும் என்னை வருத்தலாமா? எனது ஆசை நாதனே! என் மீது தயை கூர்ந்து வருவாயாக; நான் எக்காலமும உனது அடித்தொண்டன்.

ஃ ஃ ஃ

அன்புப் பயித்தியம் பிடித்து நான் மிகவும் வருந்துகிறேன்; என் வருத்தத்தை ஒருவரும் அறியார்; வருத்தப் பட்டவன்தான் வருத்தம் எத்தகையதென்பதை அறிவான்; வருத்தப்படாதார் அறியார்; நஞ்சு குடித்தவனுக்குத்தான் அது எவ்வளவு கசப்பானது என்று தெரியும்; ஏனையோர் அறியார். துன்பத்தினால் ஏவப்பட்டு, வைத்தியனைத் தேடி நாடு நாடாக அலைகின்றேன்; ஆனால் வைத்தியனையோ காணமுடியவில்லை. மீரா

வின் அன்பனாகிய சியாமன் வைத்தியனாக வந்தால்தான் என் வருத்தந் தணியும்.

ஃ ஃ ஃ

எனது சகியே! ஹரி எனது இருதயத்தை எவ்வாறு பிளந்து விட்டானென்று பார்; அவன் திரும்பவும் வருவதாக வாக்களித்தும் இன்னும் வருவதற்கு அறிகுறியைக் காணவில்லை; பசி, தாகமொன்றுமில்லை; இந்திரியங்களை இழந்தேன்; நான் ஜீவிப்பதெங்ஙனம்?

என் இருதயத்தைக் கவர்ந்த கள்வா! உனது வாக்குத்தத்தத்தை மறந்தனையோ? ஓ கிரிதர! எனது அன்பனே! உனது பிரிவாற்றாமையால் என் மன முடைந்து போகின்றது.

ஃ ஃ ஃ

எனது நாதனே! அன்பாகிய முடிச்சைக் கட்டிவிட்டு நீ இப்பொழுது எங்கு சென்றனை? அன்பாகிய தீபத்தை ஏற்றிவிட்டு, உன்னைவிட வேறொருவரையும் அறியாதவளைக் கைவிட்டு எங்கு ஓடி ஒளித்தனை? அன்பாகிய கப்பலைக் கடலில் மிதக்கவிட்டு பிறவியாகிய சமுத்திரத்தில் அடைந்து போகும்படி கைவிடலாமா? ஆ! மீராவின் அன்பனே! நீ என்று திரும்ப வருவாய்? உன்னைப் பிரிந்து இனிமேல் உயிர்வாழ என்னால் முடியாது.

ஃ ஃ ஃ

மோஹனனின் அழகு என்னைக் கவர்ந்தது. தெருவிலும், வழியிலும் அவன் என்னைக் கேலி பண்ணுகின்றான்; எனது அன்பனின் இனிய விருப்பத்தை நான் உணரவில்லை; அவன் அழகிய தோற்றத்தை யுடையவன்; அவனுடைய கண்கள் தாமரை மலர் போன்றவை; அவனது பார்வையும், புன் முறுவலும் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன; அவன் யமுனா நதிக்கரையில் பசுக்களை மேய்க்கின்றான்; அங்கு புல்லாங்குழலை வாசித்து இனிய சங்கீதம் பாடுகின்றான்; கிரிதரனுக்கு எனது உடலையும் உயிரையும் அர்ப்பணஞ் செய்கின்றேன்; மீரா அவனுடைய கமல பாதங்களையும் நமஸ்கரிக்கின்றாள்.

ஃ ஃ ஃ

எனது சகியே! நான் உறக்கத்தை இழந்தேன்; இரவும் பகலும் எனது அன்பன் வரும் வழியைப் பார்த்த வண்ணமா யிருக்கின்றேன். எனது சிநேகிதைகள் எனக்கு ஆறுதலளிக்க முயலுகின்றனர்; ஆனால் என் மனமோ ஆறுதலடையவில்லை; அவனில்லா விடத்து ஒரு நிமிஷங் கழிவது ஒரு ஆண்டு கழிவது போலிருக்கின்றது; எனது உடம்பு நாளுக்கு நாள் மெலிகின்றது; எனது அன்பனின் நாமம் மட்டும் எப்பொழுதும் எனது நாவில் தொனிக்கின்றது. நான் படும் அவஸ்தையை எனது அன்பன் அறியான்; வானம்பாடி மேகத்தை விரும்புவது போலும், மீன் தண்ணீரை விரும்புவது போலும், எனது இருதயம் இறைவனுடன் ஐக்கியத்தை நாடுகின்றது. மீரா தனது அன்பனின் பிரிவாற்றாமையால் பயித்தியக் காரியானாள்.

—கே. ஜீ. கிருஷ்ணன், B. Sc. (Hons.)

தேசத் தொண்டு

ஒரு தேசத்திலுள்ள எல்லா ஜாதியாரும், எல்லா மதத்தினரும் எப்பாஷை பேசுகிறவர்களாயினும் யாவரும் தங்கள் தாய் நாடாகிய அத்தேசத்தின் மேலிருக்கவேண்டிய அபிமானத்தால் தங்கள் தேசத்தை முன்னணியில் கொண்டுவர முயன்று ஜனங்களுக்குச் சுயநலங் கருதாது, கௌரவம், அந்தஸ்து, கௌரவதாபட்டம், செல்வம் முதலியவற்றையுங் கோராது, ஆற்றுதல் போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை என்னும் இரத்தினங்கள் ஒன்பதையுங் கொண்டு பொதுநலச் சேவை செய்வதே தேசத் தொண்டெனப்படும். தேசத் தொண்டை மூவகையாகப் பிரிக்கலாம்.

(1) தேசத்திற்கு ஒருவன் தன்னால் தானே முற்பட்டு வலியச் செய்தல் தலைத் தோண்டு.

(2) தேசத்து ஜனங்கள் வேண்டிக் கேட்டபின் செய்தல் இடைத் தொண்டு.

(3) தேசத்தார் வருந்தி வருந்திக் கேட்டதின்பின் அவர்கள் தொந்திரவுக்காற்றாது செய்தல் கடைத் தொண்டு.

இதுபற்றியே,

"என்னனு மோருதவி யாரானும் யார்க்கெனினுந்
தன்னால் முடியுமெனிற் றானே முடித்தற்றலை,
சொன்னால் முடித்த லிடையா குஞ் சொல்லுகினும்
பன்னாட் கழித்துப் புரிதல்கடைப் பான்மையதே"

என்று கந்த புராணங் கூறுகிறது.

தேசத் தொண்டாற்ற தேசாபிமானம் ஒவ்வொரிடத்திலும் கசியவேண்டும், ததும்பவேண்டும், பொங்கவேண்டும். ஏனெனில் ஒருவனுக்குத் தன் புத்திரன்மீது அன்பு இருக்கிறது. அது மனத்தில் மட்டுமாயிருக்கிறது? தன் புத்திரன் க்ஷேமமாய் வாழ்வதற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் சிரத்தையோடு அவன் செய்கிறானன்றோ? இற்றைக்குச் சற்றேறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நமது நாட்டின் நிலைமையும், இப்பொழுது அது வகிக்கும் ஸ்தானத்தையும் ஒப்பிடுமிடத்து நம் நாட்டின் தற்கால ஈனஸ்திதியைக் குறித்து வருந்தாதவர் ஒருவருமிரார்.

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
இருந்ததுமிந் நாடே—அதன்
முந்தைய ராயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடிந்ததுமிந் நாடே—
அவர் சிந்தையி லாயிர மெண்ணம்
வ[ளர்]ந்து சிறந்ததுமிந் நாடே—
இதை வந்தனை கூறிமனதி லிருத்தி
யென் வாயுறவாழ்த் தேனோ—

இதைவந்தேமாதரம்வந்தேமாதரம்
என்று வணங்கேனோ?"

—(பாரதி)

"மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை தானந் தவ முயற்சி தாளாண்மை—தேனின் கசிவந்த சொல்லியர் மேற்காமுறுதல் பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்" என்ற அரிய செய்யுளும் பொய்க்குமோ? ஆம்! நம் நாட்டாரின் தற்கால வறுமை, சிறுமை காரணமாகப் பசி முற்றி நம்மைப் பல்காலும் வருத்த அவையாவும் பறந்தன போலும். நம் பெருமையடைந்த நாட்டின் கீர்த்தியை நிலைநாட்ட வேண்டுமானால் ஜன சமூகத்திற்குச் சேவை செய்தல் அத்யாவசியமாகிறது. தேச நன்மையை அதிகமாய்க் கையாண்டு வந்தாலன்றோ இந்நாளில் நவீன நாகரிகம் நலம்பெற விளங்கும். பலநாடுகள் நாடுவாரின்றிப் பாழாய்க்கிடந்த காலமும் பறந்து விட்டது. இடைவிடாத விடா முயற்சியோடு தேச சேவையே நமக்கு நித்திய குணமானாலொழிய நாம் நமது கடமையைச் செய்தவர்களாக மாட்டோம். ஜப்பான் தேசம் நம்முடைய தேசத்தைவிட அதிகமான பரஸ்பர துவேஷத்திலும், அஞ்ஞானத்திலும், ஏழ்மையிலும் ஆழ்ந்திருந்தது. ஆனால் வெகு வேகமாக தேச பக்தியினால் ஜனங்கள் ஜனசமூகச் சேவையைக் கையாண்டு விடா முயற்சியால் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவைகளை விருத்திக்குக்கொணர்ந்து பலமிகுந்து, தாய் நாட்டின் மேன்மையை ஸ்தாபித்து உலகத்திற்கு அணியாக விளங்கும் சிரேஷ்ட தேசங்களில் ஒரு தேசமாகத் தங்களுடைய நாட்டைச் செய்து கொண்டார்கள். இதைவிட வேறு ஒரு திருஷ்டாந்தம் வேண்டுமோ?

தன்னாட்டார் க்ஷேமத்திற்கு உழைப்பவன் தன்னாலியன்ற வரையில் எதையும் தியாகம் செய்யக் கூடிய உள்ள முடையவனாக விருக்க வேண்டும். அத்தகையோனே உத்தம தேச பக்தன். இச் சேவையில் நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் முதலிய வித்தியாசங்களைச் சற்றும் கவனிக்கலாகாது. நாம் இங்கிலாந்து தேசத்தை 16வது நூற்றாண்டில் கவனித்தால் தேசாபிமானத்தின் தன்மை இன்னதெனப் புலனாகும். எலிஜபெத் இராணியின் காலத்தில், ஆங்கிலேயர், வேல்ஸ் ஜாதியார், ஸ்காட்டிஷ் ஜாதியாரென்ற பிரிவுகளும், கத்தோலிக், புரோடஸ்டண்ட் என்ற மதபேதங்களும் பல்வேறு இராஜாங்கக் கட்சிகளுமேற்பட்டு ஒற்றுமையின்றியிருந்த அக்காலத்தில் ஸ்பெயின் தேசத்தார் பெருங் கூட்டமான யுத்தக் கப்பல்களைச் சேர்த்துக் கொண்டு இங்கிலாந்தின் மேல் படையெடுத்துச் சென்றன. அவ்வமயம் இங்கிலாந்தின் இராஜாங்கப் படை மட்டும் அவர்களை யெதிர்த்துப் போராடியிருந்தால் ஜெயித்திராது. ஆனால் குடியானவர் முதல் குபேரன் வரை சகல ஜனங்களும் தங்கள் ஜாதி, மதம், இராஜாங்கத்துவேஷம் முதலியபேதங்களைப் புறக்கணித்து தேசத் தொண்டு மேலிட்டு 'மாற்றானுக் கிடங்கொடேல்' என்ற ஆர்வங் கொண்டு அதுகாறும் இராஜாங்கத்தோடு ஒத்துழையாதிருந்தவர் யாவரும், கலப்பை, அரிவாள், முதலிய ஆயுதங்களை யெறிந்து விட்டு கத்தி, கேடயம்

முதலியவற்றைத் தாங்கி யுத்தத்திற்கு முன்வந்ததால் தங்கள் தேசத்தைப் பிறர் கைக் கொள்ளாது காப்பாற்றிக் கொண்டனர். ஈதன்றோ தேசாபிமானம்! ஈதன்றோ தேசத்தொண்டு! அப்படியில்லாத நம் நாட்டில் தற்போது அனேகர் துவேஷ புத்தியும், பொறாமையும், கட்சிபேதமும் வளர்த்துக் கொண்டு எங்களுக்கு இரண்டு கண்களும் போவதாயினும் பரவாயில்லை, அயல் வீட்டுக்காரர்களுக்கு ஒரு கண்ணாகிலும் கெட வேண்டுமென்று கோருவது போல நடப்பது தானா தேசாபிமானம்? இதுதானா சுயநலங் கருதாப் பெருந்தன்மை? இதுதானா மனங்கசிந் தெழும் தேசத் தொண்டு?

நம் நாட்டாருக்குத் தீங்கை யுண்டாக்கும் விஷயங்களைப் புகழ்ந்து நாட்டிற்கு நன்மை செய்வோரை யிகழும் அவிவேகிகள் அநேகர் நம் நாட்டிலுண்டு. வேறு சிலர் தன்னாட்டார்க்கு நன்மை செய்யவே பாடுபடுபவர்கள் போல் அபிநயித்து உண்மையில் கௌரவதா பட்டங்களுக்கும், வருமானம் உயர்ந்த அந்தஸ்து முதலியவற்றிற்கும் ஆசை வைத்துத் தன் நாட்டாருக்குத் தீமையே இழைக்கின்றார்கள். தேசீய சேவைபுரிய முன்வருவோரையும் தடுக்க முயலுகின்றனர். அநேகர் ஆங்கிலங் கற்றுக் கொண்டதால் தாங்கள் இந்தியர்கள் அல்லவென்று நினைவு கொண்டு இந்திய நாட்டின் முன்னேற்றத்தைக் கருதாது மௌடீகமா யிருப்பதன்றி சில விடத்தில் முட்டுக் கட்டைகளாயு மிருக்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை கலாசாலையில் ஓர் மலையாளி தமிழ் கற்றுக் கொள்ள ஆசை கொண்டு அவருக்கிருந்த ஆவலினால் ஒரே நாளில் பதம் சேர்த்து வாசிக்கவும், அர்த்தங்களை அவாவுடன் கேட்கவும் ஆரம்பித்த பொழுது அவருடைய வகுப்புத் தமிழ் மாணாக்க ரொருவர் அவரிடம் வந்து (என் பிரிய நண்பரே, நீர் இந்த இழிவான தமிழைப் படியாதீர்; அது உம்மைக் கெடுத்து விடும்) என்று சொன்னதைக் கேட்டு மனம் வருந்தி யொருவர் எழுதினார். இப்படி நம் தமிழ்ப் பாஷையிலேயே அபிமான மில்லாதார் தமிழ் நாட்டாரை எங்ஙனம் நல்ல நிலைமைக்குக் கொண்டு வரப் போகின்றனர்!

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா
—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா
சொல்லில் உயர்வு தமிழ்ச்
சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்
—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.
வேதமுடைய திந்நாடு—நல்ல
வீரர் பிறந்த திந்நாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்
—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

(பாரதி)

ஒரு நாடு முன்னேற்ற மடையக் கல்வியும், செல்வமும் வேண்டும். தேசத்தொண்டு புரிவோர் இவ்விரண்டையும் ஜனங்களுக்கு உண்டாகும்படி பாடுபட வேண்டும். பல பாடசாலைகளைக் கட்டித் தருமத்திற்கு மிகத் தாழ்ந்தோர்களைக் கல்வி கற்கவைத்

தும், பல பத்திரிகை, சஞ்சிகை மூலமாயும் புத்தி புகட்ட வேண்டும். செல்வத்தை விவசாயம், கைத் தொழில், வர்த்தகம் இவற்றால் வளர்க்க வேண்டும். அடிமைத் தொழிலாகிய சேவகா விருத்தியால் இவைகள் ஒரு போதும் ஏற்படா. இப்பொழுது நம் தாய் நாட்டிற்கு நன்மை பளிக்கும் வழியில் ஊழியம் செய்யும் பொருட்டு அநேகர் வெளி வந்து 'ஜோதி' முதலிய அரிய பத்திரிகைகள் மூலமாய்த் தங்கள் தேசத் தொண்டை ஆற்றுகின்றனர். சிலர் 'அட! அவன் ஜீவனஞ் செய்ய வழி தேடிக் கொண்டான்; வேலையற்றுப் போய் அதை ஏன் வாங்கிப் படிக்க வேண்டும்? அக்காலங்களில் நம் வேலையைக் கவனித்தால் நாலு காசுகள் சம்பாதிக்கலாம்' என்று கூறிக் கொண்டு ஊழியம் செய்ய முன்வந்தார்களை ஏளனஞ் செய்கின்றனர். இது 'தானும் கெட்டதல்லாமல் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானும்' என்று சொல்வது போலிருக்கிறது. இன்னுஞ் சிலர், 'கடவுளே என்னையும், என் மனைவியையும், என் மகனையும், அவன் மனைவியையும்—எங்கள் நான்கு பேரையும் மாத்திரம் காப்பாற்றினால் போதும்' என்ற பிரார்த்தனையுடன் இதர சிந்தனையற்றிருக்கின்றனர். அந்தோ! இப்படியானால் நம்மிந்திய நாடு எப்பொழுது கீர்த்தி பெற்று விளங்கும்.

தேசத்திற்கு ஊழியனாகக் கருதுவோன் தன் மெய், பொருள், ஆவி மூன்றையும் தன் தேசத்தாருக்குத் தத்தஞ்செய்யக் கடமைப் பட்டிருக்கிறான். இவ்வரிய செய்கையால் ஒருவன் இம்மையிலும் மறுமையிலும் நன்மை யடைகிறான். அவன் 'தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று' என்ற பொய்யா மொழியைப் பூர்த்தி செய்கிறான். இயேசு நாதர், 'அயலாரை எவன் நேசிக்கிறானோ அவன் என்னை நேசிக்கிறது போலாகும்' என்றும், 'நீ உன்னிடம் அன்பு கூர்ந்து கொள்வதுபோல் பிறரிடத்திலும் அன்பு செலுத்துவாயாக' என்றும் திருவாய் மலர்ந்தருளியிருப்பது போலவே நாம் நம் தேசத்தாரை நேசித்தலவசியம். தேச சேவை செய்வதினால் சுயப்பற்று நீங்கிவிடும். அதுவு மல்லாது சுயநல விருப்பம், காமியக் களங்கம், கர்வக்கட்டி, அகங்காரப் பிரமியம், கோபக்குன்மம், இச்சகப் பட்சவாதம், வஞ்சக க்ஷயம், வாய்மதப் பித்தம் முதலிய கொடிய நோய்கள் நிவர்த்தியாகும். பிறர் நன்மையைக் கருதிச் செய்யும் ஊழியம் தேவ அம்சமாயிருப்பதால் அதையடைந்தவர் கடவுளுடையவராயிருக்கிறார். இதற்குத் தகுந்த திருஷ்டாந்தமாக மகாத்மா காந்திஜீ அவர்களையே கூறலாம். எவ்வளவுக் கெவ்வளவு அது உண்டாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேவாம்சம் வளர்கிறது. தேவாம்சம் வளரவே மனுஷாம்சம் குறைந்து சாயுச்சிய பதவியடையக் கூடும். ஆகவே இம்மைக்கும் மறுமைக்கும் தேசத் தொண்டைக் கடைப்பிடித்து,

'இந்திய மக்கள் எவருந் தழைக்க
சிந்தையரிச் சிநேகித்துச்—
சந்ததமும்
தொண்டுரிமை பாராட்டின்
துன்பமின்றி வாழ்வரென
பண்டு நூலோது மறையாய்ந்து.

—மா. சர்மா, B. A. (Hons.)

சிலப்பதிகாரம்-அந்திச்சிறப்பு

மாதவி :

அகத்தியன் சாபத்தால்

உலகில் உதித்தாள் உருப்பசி. அவள் குலத்துவந்தவள் மாதவி. மாந்தளிர் போன்ற மேனியுடையவள். பெரிய தோள்களும், கடைகுழன்று சுருண்ட கூந்தலுமுடையவள். அக்கூந்தலைத் தாதவிழும் மலர்கள் அலங்கரிக்கின்றன. அழகுடனே ஆடல் பாடல்களிலும் குறைவற்றவள். ஐந்தாம் பிராயமுதல் ஏழாண்டுகள் பயிற்சி பெற்று, கரிகாலன்முன் தன் ஆடலையும் பாடலையும் அரங்கேற்றினாள்.

மேடை :

ஊரின் நடுவில், தேரோடும் வீதிகளுக் கெதிரே, நூன் முறைப்படியியற்றிய மண்டபம். அம்மண்டபத்தில், எண்கோல் நிகளமும், எழுகோல் அகலமும், ஒரு கோல் உயரமுமாக நிறுவப் பட்டிருக்கிறது மேடை. மேடையின் மேற்பரப்பிற்கு நாற்கோல் உயரத்தில் சித்திர விதானம் அமைந்திருக்கிறது. விதானத்தைத் தாங்கும் வலமிடமாகவுள்ள தூண்களின் நிழல், அரங்கிலும் மேடையிலும் படாதபடி விளக்குகள் விளங்குகின்றன. இடத் தூணையொட்டி ஒருமுக வெழினியும், வலத் தூணை யொட்டிப் பொருமுக வெழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்துவர லெழினியும் அமைந்திருக்கின்றன. வெண்மை, பசுமை முதலிய நிறங்களுள்ள மணிகள் மாலைகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அரசன், மந்திரி முதலிய அதிகார வர்க்கத்தினரும், நகரமாந்தரில் தனி சிறந்தோரும், தத்தமக்குரிய ஆசனங்களில் வீற்றிருந்தனர். கோவலனும் அவையருள் ஒருவனாய் அமர்ந்திருந்தான்.

ஆடலும் பாடலும் :

மாதவி வலக்கால் வைத்து மேடையேறி வலத்தூணின் பக்கத்தில் நின்றாள். தோரிய மகளிர், மாதவியைப் பின்பற்றி ஏறி, இடத் தூணின் பக்கத்தில் நின்றனர். ஆடல் பாடலில் வல்ல ஆசிரியர்களும், பக்க வாத்தியக்காரரும் தத்தமிடங்களில் வந்து அமர்ந்தனர். நாட்டில் நன்மை பெருகவும், தீமை நீங்கவும், மாதவி கடவுள் வாழ்த்துப் பாடினாள். அவள் பாட்டின் ஈற்றடியின் இறுதியில், அவளினிய குரலின் வழிக்குழலும், குழலின் வழி யாழும், அவற்றின் வழி யற்ற இன்னிசைக் கருவிகளும் பருந்தும் நிழலும் போலச் சேர்ந்து ஒலித்தன.

"நாரதன் வீணை நயந்தெரி பாடலுந்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்காளாகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் சாபம் பெற்ற

எழினி—திரை. தோரிய மடந்தையர்—ஆடித்தீர்ந்த கணிகைகள்—பின்பாட்டு பாடுபவர்.

மங்கை மாதவி வழிமுதற்
றோன்றிய
வங்கர வல்குல்"

பொன்னாற் செய்து, பூக்கள் கொண்டு, பொலிவுடன் விளங்கும் பூங்கொடி போன்ற மாதவி, மின்னலைப் போல் மெல்லிய தன் இடையை, அதன் ஒளி போல் நடக்கி, பல வகைக் கூத்தும், பார்ப்பவர் கண் குளிர, ஆடிக் காட்டினாள்.

பொன்னியல் பூங்கொடி
புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு
கடைப்பிடித்துக்
காட்டினள்.

அரசன் மகிழ்வுற்று, அவள் ஆடல் பாடல் அழகுக்குத் தக்கபடி, தலைக் கோற் பட்டமும், ஆயிரத் தெண் கழஞ்சு பொன்னும், பச்சை மாலையும் பரிசாகவும் அளித்தான். இசையின் இயல்புகளும், அதில் புலமையும், நாட்டியத்தின் நுணுக்கங்களும், நன் கறிந்த கோவலன் மனத்தில் அவள் அழகும், கண்களில் ஆடலும், செவிகளில் அவள் இன்னிசையும் பொருந்தி, நீங்காவாய் நிலைபெற்றன.

மாலை தந்த மணம் :

மாதவி, மாலையை, மான்போன்ற நோக்கினை யுடையவளும், கூனியும், தன் தோழியுமாய வயந்தமாலையிடம் கொடுத்தாள். அவள் ஆக்கினைப் படியே, கூனி, கூட்டம் நிறைந்த நகர வீதியில் மாலையை விற்க வந்தாள். ''பொன்னைக் கொடுத்து மாலையை வாங்குவோர் மாதவியை மணக்கலாம்' எனச் சொல்லி விலை கூறினாள்.

அழகிய மலரினுள்ள தேனைப் பருகிய வண்டு போல, மாதவியின் அழகையும், ஆடலையுங் கண்டு களிப்புற்றிருந்த கோவலன், மயக்கம் என்னும் மாய வலையில் வீழ்ந்தவனாய் மாலையை வாங்கினான். மாதவியை மணந்தான். மறுவற்ற மனையாளையும் மாளிகையையும் மறந்தான்.

மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன்
மயங்கி
விடுத லறியா விருப்பின னாயினன்
வடு நீங்கு சிறப்பிற்றன்
மனையக மறந்தென.

கதிரவன் மறைவு :

விரிந்த கதிர்களைப் பரப்பி உலகத்தை விளக்கும் சூரியன் மேற்கு திக்கில் மறைகிறான். பச்சை வெயில் எங்கும் பரந்திருக்கிறது. திசைகள் நான்கும் வெள்ளிய பிரகாசத்தை விட்டுச் செந்நிறங் கொள்கின்றன. அந்திக்காலத்தில் பூக்கும் மலர்கள் மலர்கின்றன. அவற்றினின்றும் தேன் ஒழுகுகிறது. பனி பெய்கிறது. இவ்வியற்கை வருணனையில் மக்கள் மன நிலையைப் பூமகள் மேலேற்றிச் சித்திரிக்கிறார் ஆசிரியர்.

அலைகள் வீசும் கடலை ஆடையாக வுடையவள் பூதேவி. திக்குகள் நான்கும் அவள் முகங்கள். மலர்களெல்லாம் அவள் கண்கள். சூரியன் அவள் தலைவன். இதுகாறும் அவளோடு கூடியிருந்து, அவளுக்குப் பிரகாசமாகிய மகிழ்ச்சி யளித்தவன் இப்பொழுது மறைகிறான். அவன் பிரிவிற்கு வருந்துகிறாள் பூமகள்.

அவள் முகம் பசப் பூருகிறது. அவள் கண்கள் நீர் வடிகின்றன,

பிரிவை நினைக்குந் தோறும், அவள் மெய் முழுதும் நடுங்குகின்றது. பொறைக்குப் பூமி என்பது வழக்கு. அவ்வுரையைப் பொய்ப்பிப்பாள் போலிருக்கிறதே!

தலைவனைப் பிரிதல் துயர்தருவது தான். அதைப் பொறுக்கும் சக்தியை பூமகள் பெற்று மிருக்கிறாள். அப்படி யிருக்கையில், இப்பொழுது ஏன் அழுங்கல் வேண்டும்? துன்பத்தைத் தரும் சம்பவங்களையும் செயல்களையுங் காட்டிலும், துன்பந் தருவது அவற்றின் நினைவே. தலைவனைப் பிரிந்த துயரை மறக்க வைப்பது, குழந்தைகளின் மாசற்றமுகம். மக்களில்லாதார்க்கு இவ்வருத்தம் திரமார்க்கமில்லை. குழந்தைகளைப் பெற்றிருந்தும், தலைவன் இல்லாத போது அவர்களும் இல்லை யென்றால், அது இயல்பாய் ஏற்படும் பிரிவுத் துயரைப் பன்மடங்கு பெருக்காதா? தனக்கு மகிழ்ச்சி யளித்த மணாளன் மறைந்ததோ டமையாது, குளிர்ந்த முகத்தால், பிரிவுத்துயரின் வெம்மையைத்தணிக்க வல்லசெல்வன் சந்திரனும் தோன்றினானில்லை. இதுவே பொறைக்குப் பெயர் வாங்கிய பூமகளையும் துன்பப் படவைப்பது. சந்திரன் மறைகிற காலத்தில் எல்லார்க்கும் அன்னையாகிய மண்மகளே வருத்தப் படும்போது, தலைவரைப் பிரிந்த மானிட மங்கையர் எவ்வாறு கஷ்டப்படமாட்டார்கள்?

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
வொருதனித் திகிரி யுரவோற்
காணேன்
அங்கண் வானத் தணிநிலா
விரிக்குந்
திங்களஞ் செல்வன் யாண்டுளன்
கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க்
கண்கண்
முழுநீர் வார முழுமையும்
பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
யரைசுகெடுத் தலம்வரு மல்லற்
காலை.

மாலையின் வருகை:

குழலிலே கோவலர், முல்லைப் பண்ணை ஊதுகின்றனர். மங்கையர் குழலில் வரும் முல்லையிலே வண்டுகள் ஊதுகின்றன. அரும்புகள் தம்முள்ளே வாசனையை அடக்கிக் கொண்டிருக்கின்றன. அதை யனுபவிக்க வேண்டுமென்று, தென்றல் அவ்வரும்புகளைப் புஷ்பிக்கின்றது. மலர்ந்த மலர்களின் தேனையும் தாதையும் உண்ண, வண்டுகள் அவற்றை அடைகின்றன. தான் அனுபவிக்க வேண்டி மலரச் செய்த மலர்களை, வண்டுகள் அடைவதைப் பார்த்துப் பொறாமை கொண்டு, அவைகளைத் தூரத்தத் தென்றல் வேகமாக வீசுகிறது. அதன் வேகம் மாடமாளிகைகளையும், நெருங்கிய வீதிகளையுமுடைய நகரில் தடைப்பட்டு நிற்கிறது. அதனுடன் வந்த மலர்களின் மணம் நகர வீதிகளில் நிறைகிறது. காலத்தை யறிந்து மகளிர் மணிவிளக கெடுக்கின்றனர். இவ்வளவு ஆடம்பரங்களுடன் வந்து, சூரியன் துறந்த தேசத்தைக் கைப்பற்றுகிறது மாலை.

உலகத்தையே ஒடுக்கியாளும் வலிமை பொருந்திய அரசன்தான். எனினும் பூமியில் பிறந்தவன்தானே! 'பிறந்தோர் யாவரும் இறப்பர்'

என்பது பொய்யாகுமா? கூற்றுவனுக்கு வேற்றுமை யுண்டோ? அரசனாயினும், ஆண்டியாயினும், படித்தோனாயினும், மூடனேயாயினும், அறவோனாயினும், மறவோனாயினும், நாதனுள்ளிருப்பதை' அநுபவத்தில் கண்டவரன்றி மற்றெல்லோரும் அவன் பாசத்திற்கு அகப்பட்டுத் தீர வேண்டுமே! இவ்வியற்கை விதிக்கு அரசனும் உட்பட வேண்டிய காலம் வந்தது. மக்களைப் புரந்து வந்த அரசன் மாண்டான். தம் பேருக்கு வரும் இறை யறிந்து, அதைக் கொடுத்து விட்டுக் காலம் கழிக்கும் அறக்குடிகள் அந்நாட்டு மக்கள். வலி பெற்ற வரசன் கீழிருந்ததால் பகையைப் பற்றி நினைத்தவர்களல்ல. போர் புரிதலை அறியார். இனி அந்நாட்டைப் புரப்பவர் யார்?

இதுதான் தக்க சமயமென்று தோன்றிற்று தூர்த்தன் ஒருவனுக்கு. வீடு வாசல், நிலபுலமின்றி, ஒரு கட்டுப் பாட்டுக்கு மடங்காமல் காட்டில் கண்டபடி திரியும் மறவர்களைக் கூட்டினான். மன்னவன் ஆண்ட நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். திறமையுடன் அரசாள அறவலிக்கு என்ன செய்வான்? மன்னவன் கீழ் மகிழ்ச்சியுடன் விளங்கிய நாடு பொலிவழிந் திருக்கிறது. தூர்த்தன் ஆட்சி பழிக்கஞ்சாப் பாபிகளுக்குப் பிடித்திருக்கிறது. அன்பும் அருளும் தயையும் பொறையும் உடைய நன் மக்கள் வருந்துகின்றனர்.

மன்னன் ஆட்சி, சூரியன் உலகத்தை யாண்டதைக் குறிப்பிடுகிறது. தூர்த்தன்தான் மாலைக்காலம். சூரியனிருக்கையில் பிரிந்தவர் பிரியாதவர் இருதிறத்தவரும் துன்பம் கொண்டார்களில்லை. ஆனால் மாலை வந்த பிறகு பிரிந்தவர்க்கு வருத்தமும், கூடியவர்க்குக் களிப்பும் ஏற்படுகிறது.

கறைகெழு குடிகள் கைதலை
  வைப்ப
வறையோடு குடிகளோ
  டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின்
  மன்னரில்
தாழ்துணை துறந்தோர் தனித்துய
  ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்
  வெய்தக்
குழல்வளர் முல்லையிற் கோவலர்
  தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
வறுகாற் குறும்பெறிந் தரும்பு
  பொதி வாசஞ்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
வெள்வளை மகளிர் மணிவிளக்
  கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந்
  திறுத்தெனெ.

[கறைகெழு குடிகள்—தம் கடமையை யறிந்து நடக்கும் குடிகள் —கீழற்றுப் போனவர். வலம்படுதானை—வெற்றி பொருந்திய சேனை. புலம்—நிலம். பட—கெட. விருந்தின் மன்னர்—புதிதாக வந்து விட்ட மன்னர்; தாழ்துணை—தம் மனத்தில் தங்கிய கணவர்; குழல்—கூந்தல்; முல்லை—மலரும், பண்ணும்; அறுகால் குறும்பு—ஆறு கால்களை யுடைய வண்டு; தென்றல் தளிர்ப்பிக்கும் பூக்களைத் தாமனுபவித்தலால் குறும்பு எனப்பட்டது; சிறுகாற் செல்வன்—மெல்ல வீசும் காற்றாகிய செல்வன்.]

சந்திரன் வருகை:

சோழன் சூரிய குலத்தைச் சேர்ந்தவன். பாண்டியன் சந்திரவமிசத்தைச் சேர்ந்தவன். இவர்கள் இரு

வரும் 'போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாராய்' போர் புரிவர். இவர்களுக் குள்ளிருந்த பகை இவர்கள் குல முதல்வர்களையும் பற்றிக் கொண்டது போலும்! வயதில் இளையரா யிருந்தாலும், பகைவரைப் புறமுதுகிட்டோடும் படிச் செய்யும் ஆண்மை யுடையவர் பாண்டியர். அவர்கள் குல முதல்வனும் அவ்வாற்றல் பெற்றவனே. சூரியன் ஆட்சி சுருங்கியவுடனே, அவன் நாட்டை மாலை யெனும் சிற்றரசன் பற்றியாள்வதும் சந்திரனுக்குப் பொறாக்கவில்லை. ஆகவே, மாலையை ஓட்டி விட்டு, தன் பகையரசனாகிய சூரியன் நாட்டைக் கைப்பற்றியாள்கிறோம் என்ற செருக்குடனே, தன் மீன் ராஜ்ஜியத்தை, விளக்கம் பொருந்தியதாக ஸ்தாபித்தான்.

இளைய ராயினும் பகையரசு
கடியுஞ்
செருமாண் தென்னர் குலமுத
லாகலின்
அந்தி வானத்து வெண்பிறை
தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந்
தோட்டிப்
பான்மையிற் றிரியாது பாற்கதிர்
பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்க(ம்)

[கடிதல்—துரத்துதல், ஓட்டல்; மாலையைக் குறும்பு என்றது, சூரியன் மறைவிற்கும் சந்திரன் வருகைக்கும் இடையில் தோன்றி வருத்தஞ் செய்வதால்; மீனரசு-நட்சத்திர ராஜ்ஜியம்; மீன் கொடியுடைய பாண்டிய ராஜ்ஜியம்.]

சந்திரன் ஆட்சி :

அரசன் வெண் கொற்றக் குடை, அரசனைச் சேர்ந்தவர்க்கு நல்ல நிழலைத் தரும். அவர்களை ஆதரிக்கும். அவன் பகைவருக்கு வெப்பம் போன்ற கஷ்டத்தைக் கொடுக்கும். அவ்வெண் கொற்றக் குடை போலவே வெண்மையாய் விளங்குஞ் சந்திரன் புருஷனோடு கூடியிருக்கும் மங்கைகளுக்கு இன்பத்தையும், பிரிந்திருப்பவர்க்குத் துன்பத்தையும் தரும். அரும்புகளை அலரச் செய்யும் அந்திப் பொழுதில் தோன்றிய சந்திரன் மாதவிக்கு இன்பத்தையும், கண்ணகிக்குத் துன்பத்தையும் தருகிறான். மாலைக் காலத்தில் சாதாரண அரும்புகளே யன்றி, காமம் எனும் புஷ்பத்தின் அரும்பும் அலரப் பெறுகிறது என வள்ளுவர் கூறியதும் இங்குச் சந்திரன் தோன்றியதற்கு அமைகிறது.

கூடினார் பாணிழலாய்க் கூடார்பால்
வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற்
காட்டிற்றே—கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர்
மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது.

மாதவியும் கண்ணகியும் :

நிலா முற்றத்திலே, பூக்கள் பொருந்திய கட்டிலினிடத்தே, மாதவி தன் இயற்கை அழகுடனே செயற்கை யழகும் செய்யப் பெற்றவளாய் கோவலனோடு மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்தாள்.

கற்புக்கு அணியாகிய கண்ணகி துன்பத்தால் ஏக்க முற்றிருந்தாள்.

—"நாராயண சிவன்"

பூமிக்கு அடியில் ஓடும் ரயில் பாதை

லண்டன் மா நகரடியில் மற்றுமோர் நகருள்ள தெனலாம். அதுதான் உலகப் பிரசித்தியான பூமியினடியிலோடும் (Under ground) ரயில்வே. பூமி மட்டத்திற்கு இரு நூறடிக்குக் கீழே அமைந்துள்ள உருக்குக் குழாயினூடே செல்லும் இந்த ரயில் பாதை பலவிதத்திலும் உலகசிரேஷ்டமான ஒன்றாகும். இரவு பகல் வித்தியாசமில்லாமல் இப்பாதை லண்டனின் பல பாகத்திலுள்ள ஜனங்களை வீடுகளிலிருந்து காரியாலயங்களுக்கும் களியாட்ட விடங்களுக்கும் எடுத்தேகி வீடுகளிலும் கொண்டு போய்ச் சேர்க்கிறது.

பூமியடியில் ரயிலோட்டம் முதல் முதலாக ஆரம்பித்தது லண்டனில்தான். அதற்குப் பெயர் "ட்யூப்". (Tube) இது இப்பொழுது உலகத்தில் இணையற்று விளங்குகிறது.

1804ல் முதல் முதலாக நீராவி யந்திரம் கண்டுபிடிக்கப் பட்டாலும் பல வருடங்களுக்குப் பின்னால்தான் அது அதிகமான உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. லண்டனில் ரயிலோட ஆரம்பித்து நூறு வருடங்களுக்கு மேலாகியிராது. ரயிலோட ஆரம்பித்து முப்பது வருடங்களுக்குப் பின் "ட்யூப்" ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பத்தில் இது ஓர் உலகப் புதுமையாயிருந்தது. இன்று அது 50 அடி முதல் 200 அடி வரை பலவிதமான ஆழங்களில் மொத்தம் 79 மைல் தூரத்திற்கு ஓடுகிறது.

இந்த ரயில் பாதையைத் தினந்தோறும் இரண்டு லட்சம் பேர் உபயோகப் படுத்துகிறார்கள். ஆனாலும் அதன் இந்நீண்ட கால சரித்திரத்தில் அபாயம் நேரிடவோ உயிர்ச்சேதமுண்டாகவோ செய்தது கிடையாது.

அவள் அழகிய சிறிய அடிகள் அணியும் பாக்கியத்தைச் சிலம்புகள் பெறவில்லை. அவள் முகம் அணியும் பெற்றியை வியர்வை கொள்ளவில்லை. கயல்போல் நீண்ட அவள் கண்களைச் சேர்ந்திருக்கும் பெருமையை மை இழந்தது. ஒளி பொருந்திய அவள் நெற்றியில் படிந்து விளக்கத்தைப் பெறும் பண்பைத் திலகம் இழந்தது. மங்கல நாண் ஒன்றையே கண்ணகி அணிந்தவளாய் மற்றை அணிகளைக் களைந்தெறிந்தனள். அவள் பிரிவுத்துயரத்தால் வருந்துவது, மற்றைய அணிகளுக்கும் துயரமாய் முடிந்திருக்கிறது. சிலம்பும், வியர்வையும், மையும், திலகமும் அவள் அணிவதால் பெருமையடைகின்றன. அவள் துறந்துவிடவே பெருமையையிழந்தன. இவையேயன்றி, கோவலனும் ஒரு பொருளை இழக்கின்றான். அவன் நகை முகம்தான் அது. அன்பு வெளிப்பட்டுத் தோற்றுவிக்கும் அவ்வினிய நகைத் தோற்றத்தை அவன் வேறு எங்குக் காணக் கூடும்?

முதல் முதலாக இந்த ரயில் பாதைகளில் நீராவி யந்திரங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன. உருக்குக் குழாயின் மேல் கரியும் புகையும் படாமலிருப்பதற்காக அவைகளை ஒரு குழலின் மார்க்கமாக வண்டியிலமைக்கப்பட்ட ஒரு பெட்டிக்குள் கொண்டு வரப்பட்டு வந்தது. இதனால் பிரயாணிகளுக்கு அதிக சௌகரிய முண்டாவதற்கில்லை. ஏனென்றால் பெட்டியில் துவாரங்களிருந்து வந்ததுடன் இஞ்சினுடன் குழாய் இணைக்குமிடத்திலிருந்தும் புகை வெளியாகக் கூடிய நிலையிலிருந்து வந்தது.

அன்றெல்லாம் இப்பாதையினூடே பிரயாணம் செய்வது அவ்வளவு சுகமானதாகக் கருதப்படவில்லை. பொறுக்க முடியாத புகைத் தொந்தரவு இருந்து வந்தது. துர்க்கந்தம் வேறு. போதாக் குறைக்கு வண்டிகளுக்கு ஜன்னல்கள் கிடையாது. நான்கு ரோதைகளின் மேலோடும் இருண்ட மரப் பெட்டிகளென்று சொல்லும்படியாக இருந்தது. வெளியில் பார்க்கக் கூடியது ஒன்றுமில்லாத காரணத்தினால் ஜன்னல்கள் அவசியமில்லையென்று டைரக்டர்கள் கருதினார்கள்.

இப்பொழுது அவையெல்லாம் மாறிவிட்டன. வண்டிகளோடுவதற்கு மின்சார சக்தி உபயோகப்பட்டு வருகிறது. பழைய புகைக் கஷ்டமோ துர்நாற்றமோ கிடையாது. வெளிச்சமும், காற்றோட்டமுமுள்ள வண்டிகள் இணைக்கப் பெறுகின்றன. பூமியினுள் பிரயாணம் செய்கின்றோமென்பதே தோன்றாவண்ண மிருந்து வருகிறது.

லண்டனைப் பார்வையிட்டுள்ள எந்த அந்நிய தேசத்தவனும் இந்த அதிசயமான ரயில்வேயில் அவசியம் பிரயாணம் செய்திருப்பான். அமெரிக்காவில் நியூயார்க் நகரிலும் இவ்வித ரயில் பாதைகளுண்டு. அங்கு இது உபபாதை (Subway) என்று அழைக்கப் படுகிறது. லண்டன் "ட்யூப்" தங்களது "ஸப்வே"யைக் காட்டிலும் நல்லதென்று அமெரிக்கரும் ஒத்துக் கொள்ளுவார்கள்.

உண்மையில் அமெரிக்க "ஸப்வே"க்கு, "ட்யூப்"புக்கில்லாத சில அம்சங்களுள்ளன. "ஸப்வே"யில் சில முக்கியமான இடங்களில் நான்கு பாதைகளுள்ளன. இவைகளிலிரண்டு நிற்காமலோடும் எக்ஸ்பிரஸ் வண்டிகளுக்கும் மற்றிரண்டு அங்கங்கே நின்று ஓடும் சாதாரண வண்டிகளோடுவதற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றன. லண்டனில் இரண்டு பாதைகளே உள்ளன.

லண்டன் "ட்யூப்" லயனில் 184 ஸ்டேஷன்களுண்டு. அரை மைல் தூரத்துக்கு ஒரு ஸ்டேஷன். ஒவ்வொரு ஸ்டேஷனிலிருந்தும் இரண்டு நிமிஷத்திற்கு ஒரு வண்டி இரு புறத்திற்கும் ஓடுகிறது.

இந்த ரயில்வேயில் ஒரு தனி ரகமான "ஸிக்னலிங்" (Signalling) அமைக்கப் பெற்றுள்ளது. இவை இயந்திரத்தின் உதவியால் தாமாகவே வேலை செய்கின்றன. ரயில்கள் தாமாகவே தண்டவாளங்களில் ஓடுவதற்கான ஏற்பாடுகளிருந்து வருகின்றன. ஒரு சிறிய குமிழை அழுத்தினால் ரயிலின் கதவு தானாகவே திறந்து கொள்ளவும் ஆள் ஏறி இறங்கியவுடன்

தானாகவே அடைத்துக் கொள்ளவும் செய்கிறது. ரயில் ஓடிக் கொண்டிருக்கும் போது டிரைவருக்கு ஏதாவது ஆபத்துநேர்ந்தால் வண்டி ஓடிப்போய் முன் வண்டியில் சென்று முட்டி ஆபத்து நேரா திருப்பதற்கான ஏற்பாடுகளுள்ளன. ஓட்டும் சக்ரத்திலிருந்து டிரைவரின் கை எடுக்கப் பட்டால் மற்றுமோர் இயந்திரம் தானாகவே வேலை செய்து வண்டியை நிறுத்தி விடுகிறது. பொதுவாக டிரைவரே வேணுமென்று ரயிலைத் தகர்க்கநினைத்தாலும் அதனைச் செய்ய முடியாததற்குள்ள ஏற்பாடெல்லாம் இந்த ரயிலில் அமைக்கப் [illegible]ளன.

பிக்கடில்லி ஸர்க்கஸ் ஸ்டேஷன் (Piccadilly Circus Station) தான் இந்த [illegible] ஸ்டேஷன்களில் மிக முக்கிய[illegible] [illegible] மான[illegible] பார்க்க வேண்டிய தவசியம். வருடத்தில் ஏறக்குறைய 320,00,000 ஜனங்கள் இங்கு வந்து போகின்றனர். இந்த ஸ்டேஷனில் சராசரி மணிக்கு 3000 ஜனங்கள் டிக்கட்டு வாங்குகின்றனர். சுயமாக வேலை செய்யும் அநேகம் குமாஸ்தாக்களிங்கிருந்து வருகின்றனர். அதாவது ஒரு துவாரத்தில் நாணயத்தைப் போட்டால் டிக்கட்டு மட்டுமல்ல, சில்லரைப் பாக்கியையும் எடுத்துத் தரும் இயந்திரங்கள் தான் இவ்வேலையைத் துரிதமாய்ச் செய்து வருகின்றன.

கீழிருந்து மேலும் மற்றொரு பாகத்தூடே மேலிருந்துகீழும் சதாபோய்க் கொண்டிருக்கும் ஒரு வித ஏணி வழியாகத்தான் பிரயாணிகள் பிளாட்பாரத்திலிருந்து பூமி மட்டத்திற்கும் பூமி மட்டத்திலிருந்து பிளாட்பாரத்துக்கும் போய் வருகிறார்கள். அநேகாயிரம் ஜனங்கள் இதனை ஒரே சமயத்தில் உபயோகிக்கலாம்.

ரஷ்யாவிலும் மாஸ்கோவில் இவ்வித ரயில்பாதை அமைக்கப் பட்டுள்ளது. இதனை 'மெட்ரோ' என்றழைக்கிறார்கள். இதனை அமைப்பதற்கு முன் ரஷ்யாக்காரர் 'ட்யூபை' வந்து பார்வையிட்டுப் போய் அது போலவே செய்துள்ளதால் 'மெட்ரோவும்' 'ட்யூபின்' தனி நகலெனச் சொல்லும் படியாக இருக்கிறது.

உலகத்திலேயே பெரிய நகரமாகக் கருதப்பட்டு வரும் லண்டனில் 'ட்யூப்' 24 மணி நேரமும் வேலை செய்கிறது. இங்கிலாந்து தற்பொழுது யுத்தத்திலீடு பட்டிருப்பதால் பெரு வெள்ளங் கிளம்பியாவது ஏற்பட்டு 'ட்யூப்'பில் இறங்கி போக்குவரவைத் தடை செய்யா திருப்பதற்காக அவைகளுக்கு மேலுள்ள துவாரங்கள் தகுந்த முறையில் அமைக்கப் பெற்றுள்ளன. லண்டனில் ஆக்ரமிப்பு ஏற்பட்டால் இப்பாதைகள் மார்க்கமாய் நெருப்பணைக்கும் கருவிகளும், ஆஸ்பத்திரி வண்டிகளும் வேகமாய் எந்த பாகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். லண்டனில் எவ்வளவு சக்தியுள்ள 'பாம்ப்' எறியப் பட்டாலும் 'ட்யூப்' ரயில்வேயின் போக்குவரவு தடைப்படாது. ஏனென்றால் 200 அடிவரை பூமியைத் துளைத்துச் செல்லும் 'பாம்ப்'கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

—கே. சாமிநாதன்.

உலக அரசியல் அமைப்புகள்

கடந்த மகா யுத்தத்திற்குப் பிறகு உலகத்திலுள்ள சில நாடுகளில் மிக முக்கியமான அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. அவைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நமது நினைவிற்குக் கொண்டு வந்து சிந்திப்பது சாலவும் நலமெனக் கருதுகின்றேன். ஏனெனில், இன்றைய உலக நிலையில் எதிர்காலத்தில் உலகின் எந்தப் பாகத்திலும் எந்தவிதமான மாற்றமும் ஏற்படலாமல்லவா?

மூன்று விதமான அரசியல் அமைப்புகள்

இன்று உலகத்தில் மூன்றுவிதமான அரசியல் அமைப்புகள் இருக்கின்றன. அவை,

(1) பிரபுத்வ முறை.

(2) முதலாளித்வ முறை.

(3) சமுதாயப் பெரும்பான்மையின் ஜனநாயக முறை.

இந்த மூன்று அமைப்புக்களிலிருந்து ஒவ்வொரு அமைப்புக்களிலும் பலவகை நிர்வாகங்கள் நடைபெற்று வருகிறது. இந்த மூன்றில் முதல் அமைப்பாகிய "பிரபுத்வ" முறை தற்பொழுது கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்து கொண்டு வருகிறது. அதனுடைய சிதைந்த அணுக்கள் முதலாளித்வ முறையில் ஐக்கியமாகி முதலாளித்வத்தை உலகத்தின் எந்தப் பாகத்திலும் வளர்த்து வருகிறது.

மேலே குறிப்பிட்ட மூன்று அமைப்புகளில் முதல் அமைப்பு அழிந்து கொண்டு வருவதால் பின்னுள்ள இரண்டு அமைப்புக்களின் நிர்வாக முறைகள் எப்படிப்பட்டவை என்று பார்ப்போம்.

முதலாளித்வம்

முதலாளித்வத்தில் மூன்றுவிதமான நிர்வாக முறைகள் உள்ளன.

(1) வரையறுக்கப்பட்ட—அல்லது சட்ட வரம்புக்குட்பட்ட முடியாட்சி.

(2) ஜனநாயகம்.

(3) சர்வாதிகாரம்.

இந்த மூன்றினுள் வரையறுக்கப்பட்ட அல்லது சட்டவரம்புக் குட்பட்ட முடியாட்சி என்பது பிரிட்டனிலும் ஜப்பானிலும் நடைபெறுகிறது. பிரிட்டனில் நடக்கும் அரசாட்சி 'ஜனநாயக முடியாட்சி' எனச் சொல்லப்படுகிறது. மன்னரும் மன்னருக்கு ஆலோசனைகள் கூறுவதற்கு 350 அங்கத்தினர்களைக் கொண்ட பிரிவி கவுன்ஸிலும், இருந்தாலும் 'ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்,' 'ஹவுஸ் ஆப் காமன்ஸ்'களின் தீர்மானப் படிதான் நிர்வாகங்கள் நடைபெறுகின்றன. ஜப்பானில் மன்னருக்குத்தான் எல்லா அதிகாரங்களும். கீழ்ச் சபை, மேல் சபை என்ற இரண்டு சபைகளைக்கொண்ட 'டையட்' என்னும் சட்ட சபையும்

பிரீவி கவுன்ஸிலும் தேசியத் திட்டக் கமிட்டியும் இருந்தும், எந்தச் சட்ட திட்டத்தையும், ஆதரிக்கவோ நிரா கரிக்கவோ, ஒத்திவைக்கவோ மன்ன ருக்குச் சுயேச்சாதிகாரம் உண்டு. காபினெட் முறையில் தேர்ந் தெடுக் கப் பெறும் மந்திரிச் சபை அரசியல் விஷயங்களில் மன்னருக்கு ஆலோ சனைகளை மட்டும் சிபார்சு செய்யலாம்.

ஜன நாயகம்

ஜனநாயகம் என்பது பிரான்ஸிலும் அயர்லாந்திலும் நடை பெற்று வரு கிறது. இதில் பிரான்ஸிலே நடக்கும் அரசாட்சிக்குக் 'குடியரசாட்சி' என்று பெயர். அங்குக் கீழ்ச்சபை, மேல் சபை ஆகிய இரண்டு சபைகளைக் கொண்ட 'நேஷனல் அசெம்ப்ளி'யும், அந்த 'நேஷனல் அசெம்ப்ளி'யிலி ருந்து தேர்ந்தெடுக்கப் பெறும் 'சேம் பர் ஆப் டெபுடீஸ்' என்னும் சபையும் உண்டு. அதில் 'நேஷனல் அசெம்ப்ளி'யில் அடங்கிய கீழ்ச் சபைக்குத்தான் எல்லா அதிகாரங் களும். அதிலிருந்தே மந்திரிகள் பொறுக்கி யெடுக்கப் பெற்று மந்திரி சபை அமைக்கப்படுகிறது. இந்த மந்திரிச் சபையின் தீர்மானங்களின் படிதான் நிர்வாகங்கள் நடை பெறு கின்றன.

இந்தக் கட்டுரை எழுதுவதற்குப் பல தினங்கள் முன்னரே பிரான்ஸ், ஜெர்மானியாவுக்குத் தலை வணங்கி விட்டது. அதன் பின் எந்த விதமான நிர்வாகம் நடை பெறுகிற தென்பதை இப்பொழுது வரை யறுத்துக் கூறு வதற்கில்லை.

அயர்லாந்தில் 12 வருட ஆயுள் காலத்தைக் கொண்ட மேல் சபையும் 4 வருட ஆயுள் காலத்தைக் கொண்ட கீழ்ச் சபையும் உண்டு. இதில் மேல் சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் மாகாணக் கீழ் சபையிலிருந்து நியமிக்கப்படுவார்கள். மற்றப்படி 21 வயதுடைய ஒவ்வொரு நபருக்கும் ஓட்டுரிமை வழங்கி இரு பதினாயிரம் ஜனத் தொகைக்கு ஒரு பிரதிநிதி வீதம் பொது ஜனங்களின் மூலம் தேர்ந் தெடுக்கப்படுவார்கள். இந்த ஆட்சிக்குக் குடியரசாட்சி என்ற பெயரிருந்தாலும் இதன் குடி யரசுத் தலைவருடைய சிபார்சின் மேல் இங்கிலாந்து தேசத்து மன்னர் ஒரு கவர்னர் ஜெனரலை நியமிப்பார். அந்தக் கவர்னர் ஜெனரல் இங்கிலாந்து தேச மன்னரின் இஷ்டத்தைப் பொ றுத்து, எந்த மசோதாக்களையும் ஒத்தி வைக்கக் கூடிய அதிகாரம் பெற்ற வராக இருப்பதுடன் அவரால் நியமிக் கப் பட்ட 'எக்ஸிகியூடிவ்' கமிட்டி ஒன்றும் உண்டு. இந்த நாட்டின் சட்ட சபைக்கு 'டெயில் ஈரான்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவும் இந்த இனங்களைச் சார்ந்ததே. இது பல ஸ்டேட்டுகளைக் கொண்ட (நேஷனல் கன் வென்ஷன்) சமஷ்டியாக இருக் கிறது. இந்த சமஷ்டிக்குத் தலைவ ராக வர விரும்பும் எவரும் 35 வயதிற் குக் குறையாதவராகவும் பதினான்கு வருடங்கள் ஐக்கிய அமெரிக்காவில் வசித்தவராகவும் இருக்க வேண்டும். 430 மெம்பர்களைக் கொண்ட கீழ்ச் சபையும் ஸெனேட் சபையும் தலைவ ரால் நியமிக்கப் பெறும் மந்திரிச் சபையும் இங்கு உண்டு. மந்திரிச் சபையைக் கலைக்கவோ கூட்டவோ தலைவர் அதிகாரம் பெற்ற

வராக இருப்பார். கீழ்ச் சபையில் அங்கத்தவராக விரும்பும் எவரும் 25 வயதிற்குக் குறையாதவராகவும் ஏழு வருடங்கள் ஐக்ய அமெரிக்காவில் வசித்தவராகவும் இருக்க வேண்டும். மேல் சபையில் அங்கத்தவராக விரும்புபவர்கள், 30 வயதிற்குக் குறையாதவர்களாகவும் ஒன்பது வருடங்கள் ஐக்ய அமெரிக்காவில் வசித்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

சர்வாதிகாரம்

ஜெர்மனியிலும் இத்தாலியிலும் நடைபெறுவது சர்வாதிகாரம். இதில் ஜெர்மனியில் குடியரசு சர்வாதிகாரமும் இத்தாலியில் முடியரசு சர்வாதிகாரமும் நடைபெறுகிறது. ஜெர்மனியில் நாஜிக் கட்சி பெரும்பான்மை பெற்று அதன் தலைவராகிய ஹிட்லரே அந்தத் தேசத்தின் தலைவராக அமைந்து சர்வாதிகாரம் நடத்துகிறார். எல்லா விதமான அதிகாரங்களும் தலைவரைச் சார்ந்தது. இந்த நாட்டின் சட்டசபை "ரீச்" எனச் சொல்லப்படுகிறது. மேல் சபை கீழ்ச் சபை இரண்டும் அடங்கியதற்கு "ரீச்ஸ்டாக்" என்று சொல்லப் படுகிறது. இந்தச் சபைகள் பெரும்பாலும் தலைவர் தமக்குத் தோன்றியதைச் செய்து, அதன் விளைவுதான் சரியானது எனக் கூறும் வாசாலக மொழிகளுக்கு ஒரு பிரசங்க மேடை போன்றவைகளே யாகும்.

இத்தாலியில் மன்னர் இருக்கிறார். ஆனால் அவர் பென்ஷன் பெறும் உத்தியோகஸ்தர் போன்றவரே யாகும். அரசியல் நிர்வாகத்தில் கொஞ்சமும் அவருக்கு அதிகாரம் கிடையாது. பிரதம மந்திரிதான் சர்வாதிகாரமும் பெற்றவர். இங்கு இப்பொழுது பாஸிஸ்ட் கட்சியின் தலைவராகிய முஸோலினி பிரதம மந்திரியாக இருந்து சர்வாதிகாரம் நடத்துகிறார். பதினொன்று பெயர்களைக் கொண்ட மந்திரிச் சபையும் 535 அங்கத்தினர்களைக் கொண்ட கீழ்ச் சபையும், பிரபுக்கள், ஆர்ச் பிஷப்புகள், ராச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ராணுவ உத்தியோகஸ்தர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் முதலியவர்கள் அடங்கிய செனட்டும் உண்டு. செனட்டுக்கு மந்திரிச் சபையுடன் எந்த விதமான தொடர்புமில்லை. பிரதம மந்திரிக்கு அவசிய மேற்பட்டால் கீழ்ச் சபையைக் கலைத்து மறு தேர்தலை நடத்த உரிமை பெற்றவராவார்.

சமுதாயப் பெரும்பான்மையின் ஜனநாயகம்

இந்த அமைப்பிலும் ஜனநாயகம், சர்வாதிகாரம் என்ற இரண்டு வித நிர்வாகங்கள் உண்டு. இந்தமுறை சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு தான் முதன் முதலாக ருஷ்யநாட்டிலே அநுஷ்டானத்திற்கு வந்தது. ஜார் அரசனுடைய கொடுங்கோன்மையின் கீழ் அவதிப்பட்ட சமுதாயப் பெரும்பான்மை மக்கள் தங்கள் கஷ்டத்திற்குத் தக்கபடி விழிப்படைந்து வந்தார்கள். அதனால் சமயம் நேர்ந்த பொழுது இந்த முறையை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர இணங்கினர். இந்த முறையை அழிவு படுத்தி விடாமல் பாதுகாப்பதற்காக இங்கு ஆரம்பத்தில் கடுமையான சர்வாதிகாரம் நிலவிற்று என்றாலும், 1936 வருஷத்திய சோவியத் ருஷ்யாவின் புதிய அரசியல் அமைப்பின்

பிரகாரம் கிராம சோவியத் ஸ்தாபனங்கள் உண்மையான அதிகாரம் பெற்றவைகளாக விளங்குகின்றன.

கிராம சோவியத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சுப்ரீம் சோவியத்தில் அங்கம் வகிக்கிறார்கள். சுப்ரீம் சோவியத்திலிருந்து "பீப்பிள்ஸ் கமிஸ்ஸார்ஸ்" என்ற சபை தேர்ந்தெடுக்கப் பெறுகிறது. இதில் கிராம சோவியத்துக்கள் ஸ்தல நிர்வாகங்களையும், சுப்ரீம் சோவியத், ஐக்ய சோவியத்தின் பொது நிர்வாகங்கள், அந்நிய நாட்டு நிர்வாகங்களையும் கவனிக்கின்றன. "பீப்பிள்ஸ் கமிஸ்ஸார்ஸ்" என்ற சபைக்கு அரசாங்கத்தின் சட்டங்கள் அரசியல் திட்டங்கள் இவைகளை வியாக்யானம் செய்வதுதான் வேலை. இங்கேயுள்ள பெரும்பான்மை பெற்ற கக்ஷியாகிய பொதுவுடைமைக் கட்சியின் வளர்ப்பாளர் ஸ்டாலின் இப்பொழுது சர்வாதிகாரம் நடத்துகிறார் என்றாலும் எதிர்காலத்தில் இந்த அமைப்பில் பூரண ஜனநாயகம் நிலவ இடமிருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

மேலே குறிப்பிட்டுள்ள முதலாளித்வ சர்வாதிகாரத்திற்கும் சமுதாயப் பெரும் பான்மை சர்வாதிகாரத்திற்கும் அநேக வித்யாசங்கள் உண்டு. சர்வாதிகாரம் தனி ஒரு மனிதனுடைய செயலே போன்று தோற்ற மளிப்பினும் அவை வர்க்கத்தின் துணை கொண்டுதான் நடைபெறுகிறது. அந்த வகையில் முதலாளித்வ சர்வாதிகாரம் சமுதாயத்திலும் சிறுபான்மையோரின் சுயநல ஆட்சியாக இருக்கிறது.

சமுதாயப் பெரும்பான்மை சர்வாதிகாரம், சமுதாயத்தில் நிறைந்துள்ள பெரும்பான்மையோரைக் கொண்டதாகவும் சிறுபான்மையோர்கள் பால் வஞ்சந் தீர்க்கவோ ஆதிக்கம் கொள்ளவோ கருதாததாகவும் சுயநல மற்ற பொதுவுடைமைத் திட்டத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்தப்படி பல திறப்பட்ட அரசியல் அமைப்புகள் இன்று உலகத்தில் இருக்கின்றன. எதிர்காலத்தில் இவைகளில் எத்தகைய மாற்றங்கள் நிகழுமோ யார் அறிவர்?

சோஷலிஸத்திற்குள்ளேயே இப்பொழுது பல பிரிவினைகள் இருக்கின்றன. கில்ட் சோஷலிஸம், பேபியானிஸம், ரிவிஷனிஸம், சிண்டிகாலிஸம், கிறிஸ்டியன் சோஷலிஸம், ஸ்டேட் சோஷலிஸம், நேஷனல் சோஷலிஸம் முதலியன.

—"ஒரு காங்கிரஸ்வாதி"

மோஹன தாஸ் கரம் சந்த் காந்தி

ஜனனம் 1869.

முப்பத்தோன்பதாவது காங்கிரஸ் தலைவர்

மோஹனதாஸ் கரம் சந்த் காந்தி, கத்தியவாட் பிரதேசத்திலுள்ள போர் பந்தர் ராஜ்யத்தில் 1869ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாந்தேதி ஸ்ரீ கரம் சந்த் காந்தி, ஸ்ரீ மதி புத்ரிபாய் இவர்களுடைய புத்திரராக ஜனித்தார். ஸ்ரீ கரம் சந்த் காந்தி, முதலில் போர் பந்தர் சமஸ்தானத்திலும் பின்னர் ராஜகோட் சமஸ்தானத்திலும் அதற்குப் பின்னர் வங்கானீர் சமஸ்தானத்திலும் திவானுயிருந்தார். மோஹனதாஸ், சிறு பிராயத்திலிருந்தே மாதா, பிதா, குரு இவர்களிடம் அதிக பக்தி சிரத்தை யுடையவராக இருந்தார். தவிர, விரதம், உபவாசம் முதலியவைகளிலும் நம்பிக்கை யுடையவராயிருந்தார். மற்றும் இவர் இளமையில் மிகவும் சங்கோஜ முடையவராயிருந்தார். பள்ளிக்கூடப் படிப்பிலும் இவர் அதிகமான சுறு சுறுப்பைக் காண்பிக்கவில்லை. இவர் படித்துக் கொண்டிருந்த போதே, இவருடைய பதினுன்காவது வயதில் இவருக்கு விவாகம் நடைபெற்றது.

மோஹன் தாஸ், எல்லோரையும் போல் பாலியாவஸ்தைகள் சிலவற்றை அநுபவித்தார். ஒரு சமயம் ஹரிச்சந்திர நாடகமொன்றை இவர் பார்க்கும்படி நேரிட்டது. அஃது இவர் மனத்தில் நன்ருகப் பதிந்தது. சத்தியத்தைக் கடைப்பிடிப்பதே தன்னுடைய வாழ்க்கையின் லட்சியம் என்று உறுதி பூண்டார். ராமாயணத்தில் இவருக்கு அதிக பிரமை இருந்தது. ராம நாமத்தை ஜெபிப்பதில் இவருக்கு ஒரு விசேஷ சிரத்தை ஏற்பட்டது.

1888ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் பாஸ் செய்தார். இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேற வேண்டுமென்று ஆவல் கொண்டார். ஆனுல் உறவினர் பலரும் இதற்குச் சரியானபடி இஷ்டப்படவில்லை. கடைசியில் தாயார் அநுமதி கொடுத்தார். அயல் நாடுகளில் வசிக்கிற காலத்தில், மது, மாமிசம், பரஸ்திரீ ஆகிய மூன்றையும் நான் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை யென்று தாயாரிடத்தில் பிரதிக்ஞை

செய்து கொடுத்து விட்டு 1888ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ந்தேதி பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். இங்கிலாந்தில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில், தாயாரிடத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அப்படியே நிறைவேற்றினார். மிகவும் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தினார். தமது படிப்பில் கண்ணுங்கருத்துமாயிருந்து, 1891ம் வருஷம் ஜூன்மாதம் 10ந் தேதி பரீட்சையில் தேறினார்.

பாரிஸ்டர் பரீட்சையில் தேறிவிட்டு பம்பாய் திரும்பியதும், தாயார் மரணச் செய்தி கிட்டியது. தாயாரிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என்று அவரிடம் தெரிவிக்க, அவர் இல்லையே யென்று பெரிதும் வருத்தப்பட்டார். ஆயினும் என் செய்வது? பம்பாயிலேயே வக்கீல் தொழிலை நடத்த ஆரம்பித்தார். ஐந்தாறு மாதகாலம் நடத்தினார். எவ்விதமான வருவாயும் கிடைக்கவில்லை. எனவே, ராஜ கோட்டைக்குச் சென்று மனுக்கள் எழுதிக் கொடுத்தல் முதலிய வேலைகளைச் செய்து மாதம் சுமார் இருநூறு ரூபாய் விகிதம் சம்பாதித்துக் கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் தென்னாப்பிரிக்காவில் ஒரு வியாபார நிலயத்தின் வழக்குச் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க ஒரு வக்கீல் தேவையாயிருந்தது. போக்கு வரத்துச் செலவுகளையும் இருப்பிட வசதிகளையும் உழைப்புக்காக 105 பவுன் ஊதியமும் பெறுவதாகப் பேசிக் கொண்டு, 1893ம் வருஷம் இவர் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார்.

ஆப்ரிக்காவுக்குச் சென்றதும், இவருடைய தன்மதிப் புணர்ச்சிக்கு ஊறு நிகழக் கூடிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, கோர்ட்டுக்கு இவர் ஒரு நாள் தலைப்பாகை தரித்துக் கொண்டு சென்றார். தலைப்பாகையை எடுத்து விடவேண்டுமென்று கோர்ட்டார் உத்திர விட்டனர். எடுக்க முடியாதென்று மறுத்து விட்டு இவர் வெளியே வந்தார். பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார். இதற்குப் பிறகு ஒரு சமயம், கோர்ட் வேலையாக பிரிட்டோரியா நகரம் செல்ல வேண்டியிருந்தது. முதல் வகுப்பில் ஏறிச் சென்றார். ஆனால் இந்தியர்கள் முதல் வகுப்பில் ஏறிச் செல்லக் கூடாதென்று இவர் மத்தியில் ஒரு ஸ்டேஷனில் இறக்கி விடப்பட்டார். இஃது, இவருடைய உள்ளத்தில் அநேக சிந்தனைகளைக் கிளப்பியது. தென்னாப்பிரிக்காவில் வதியும் ஆயிரக்கணக்கான இந்தியர்களின் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். இந்தக் காலத்தில் தென்னாப்பிரிக்கா சட்ட சபையில் இந்தியர்களுடைய உரிமைகளைப் பாதிக்கும் படியான சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. இவைகளை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன், இந்தியர்களை ஒற்றுமைப் படுத்தி, ஒழுங்கான முறையில் கிளர்ச்சிகள் செய்யத் தொடங்கினார். தம்முடைய கிளர்ச்சிக்கு இந்தியாவிலும் ஆதரவு தேடிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் பம்பாய் வந்து சேர்ந்து, பின்னர் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். பல தலைவர்

களையும் கண்டு பேசினார். பின்னர் தென்னாப்பிரிக்கா சென்று 'இந்தியன் ஒபினியன்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். 1896ம் வருஷம் தென்னாப்பிரிக்காவில் ஜுலு கலகம் ஏற்பட்டது. அப்பொழுது இவர், அரசாங்கத்திற்குப் பல உதவிகளைச் செய்தார். இதே மாதிரி 1901ம் வருஷத்தில் நடைபெற்ற போயர் யுத்தத்திலும் இவர் அரசாங்கத்திற்கு உதவி செய்திருக்கிறார். ஆனால், இந்த உதவிக்கு அரசாங்கத்தார் நன்றி பாராட்டுவதற்குப் பதிலாக, டிரான்ஸ்வால் சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வந்தனர். இந்த மசோதாப்படி, தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் எல்லா இந்தியர்களும், அரசாங்க தஸ்தவேஜுகளில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும், அப்படி ரிஜிஸ்தர் செய்து கொள்கிற போது, கை விரல் அடையாளங்கள் இட வேண்டுமென்றும் கூறப்பட்டன. இப்படிச் செய்வது, இந்தியர்களின் தன் மதிப்பைப் பாதிப்பதாகுமென்பது காந்தியடிகளின் அபிப்பிராயம். இதற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டிய தவசியமாயிற்று. சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினார். யாரும் கைவிரல் அடையாளமிடக்கூடா தென்று எல்லோருக்கும் உபதேசித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் இவருக்குச் சில சங்கடங்களும் உண்டாயின. ஆனால் இவர், அவற்றையெல்லாம் பொருட்படுத்தவே யில்லை. அரசாங்கத்தார் இந்தக் கிளர்ச்சிகளைப் பொருட் படுத்தாமல், மேற்படி மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றினார். கிளர்ச்சியும் வலுத்தது. காந்தியடிகள் முதலிய சத்தியாக்கிரகிகள் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள். காந்தியடிகள், இங்கிலாந்து சென்று, அங்குள்ள அதிகாரிகளிடம் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் குறைகளுக்கு நிவர்த்தி தேடினார். பலன் ஒன்றும் அதிகமாகக் கிடைக்க வில்லை. தென்னாப்பிரிக்காவுக்கு மீண்டும் வந்து, ஜோஹான்னஸ்பர்க்குக்கு அருகாமையில் ஒரு ஜெர்மானிய நண்பருக்குச் சொந்தமாயிருந்த 1100 ஏக்ரா பூமியில், 'டால்ஸ்டாய் பண்ணை' என்ற பெயரால் ஒரு தொழிற் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். இங்கே கைத் தொழில் முயற்சிகள் பல நடைபெற்றன.

ஆனால், காந்தியடிகள் தமது சத்தியாக்கிரக முயற்சிகளை நிறுத்தவில்லை. 1913ம் வருஷம் மீண்டும் சத்தியாக்கிரகம் தொடங்கினார். கைதியானார். கடைசியில், அப்பொழுது தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தின் பிரதம மந்திரியாயிருந்த தளபதி ஸ்மட்ஸுக்கும் இவருக்கும் ஒரு சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி, இந்தியர்களுக்கு விதிக்கப்பட்டு வந்த மூன்று பவுன் தலைவரி ரத்து செய்யப்பட்டன. இந்தியாவில் விவாகம் செய்து கொண்டவர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப் பட்டன. சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகள் விடுதலை செய்யப் பட்டனர். கடைசியில் 1914ம் வருஷம் ஜுன் மாதம் காந்தியடிகள் இந்தியா திரும்பி வந்தார்.

இந்தியாவுக்குவந்த இரண்டு மூன்று மாதங் கழித்து, ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கி விட்டது. இதற்காக, இந்திய அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் உதவிசெய்தார். சேனைக்கு ஆள் திரட்டிக் கொடுத்தார். இதற்காக அரசாங்கத்தார், இவருக்கு 'கெய்ஸர்-ஹிண்ட்' பதக்கமும் அளித்தனர்.

1918ம் வருஷம் ஐக்கிய மாகாணத்திலுள்ள முஜபர் பூர் ஜில்லாவில் விவசாயிகள் கிளர்ச்சி நடைபெற்றது. இதற்கு இவரே தலைமைபூண்டு வெற்றிகரமாக முடித்தார். இப்படியே விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோருடைய நலனுக்காக உழைத்து வந்தார்.

ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இந்தியாவில் ரகசியச் சூழ்ச்சிகள் பல நடைபெறுகின்றன வென்று சொல்லி, அதை அடக்க இந்திய அரசாங்கத்தார், ஒரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். இதற்கு 'ரௌலட் சட்டம்' என்று பெயர். இதனை எதிர்த்து காந்தி யடிகள், சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பித்தார். இந்தச் சத்தியாக்கிரகக் கிளர்ச்சியின் போதுதான் 1919ம் வருஷம் ஏப்ரல் மாதம் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடை பெற்றது. இதை எதிர்க்குமுகத்தான் ஒத்துழையா இயக்கம் தொடங்கினர். பள்ளி பகிஷ்காரம், கோர்ட் பகிஷ்காரம் முதலியன நடைபெற்றன. ஆயிரக் கணக்கான பேர் சிறை சென்றனர். கடைசியில் சௌரி-சௌராவில் நடைபெற்ற துராக்கிருதமான சம்பவங்களைக் காரணமாக வைத்துக் கொண்டு ஒத்துழையா இயக்கத்தை நிறுத்தி விட்டார். 1921ம் வருஷம் இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் இளவரசர் விஜயஞ் செய்தார். அந்த விஜயத்தை பகிஷ்கரித்து விட வேண்டுமென்று சொல்லி அதற்காக, காங்கிரஸ் மூலமாக ஒரு பெருங் கிளர்ச்சி நடத்தி வெற்றி பெற்றார்.

1922ம் வருஷம், 'யங் இந்தியா' பத்திரிகையில் சில கட்டுரைகள் எழுதியதற்காக ராஜத்துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஆறுவருஷச் சிறைவாசத்தண்டனை பெற்றார். சிறையிலிருந்த போழ்து, 1924ம் வருஷம் இவருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது. ஆபரேஷன் செய்யப்பட்டு குணமடைந்தார். இந்தக் காரணத்தைக் கொண்டு அரசாங்கத்தார் இவரை விடுதலை செய்து விட்டனர். அதே 1924ம் வருஷம், இந்திய வெங்கணும் வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றன. இதற்காக இவர் 21 நாள் உபவாசம் இருந்தார். அதே வருஷம் (1924) பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தக் காலத்திலிருந்து, காங்கிரஸானது, பாமர ஜனங்களுடைய தொடர்பு கொள்ள ஆரம்பித்தது. படித்த வகுப்பினருடைய பிரதிநிதித்துவ சபையாக அதுகாறும் இருந்தது போய், இந்தியாவின் பிரதிநிதித்துவ சபையாக மாறியது. இதற்குப் பிறகு காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒரு லட்சியத்தைக் கொண்டனவாக இருந்தன. 1929ம் வருஷம் லாகூரில் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் கூடியகாங்கிரசில், பரிபூர்ணசுதந்திரத்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1930ம் வருஷம் ஆமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸில், காந்தி யடிகள் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் சுதந்திர அபிலாஷையை நிறைவேற்றி வைக்குமாறு, இந்தியா அரசாங்கத்தைப் பலமுறை கேட்டுக் கொண்டார். ஆயினும் அரசாங்கத்தார் செவி சாய்ப்பதாயில்லை. கடைசியில் 1931ம் வருஷம் மார்ச் மாதம் 12ந் தேதி உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கினார். நாடெங்கணும் பலத்த கிளர்ச்சி நடைபெற்றது. இவர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் வைக்கப்பட்டார். இதே பிரகாரம் இன்னும் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். கடைசியில், அரசாங்கத்திற்கும் தலைவர்களுக்கும் ஏற்பட்ட ஒரு சமரஸத்தின் காரணமாக லண்டனில் ஒரு வட்ட மேஜை மகாநாடு கூடியது. அதற்குக் காந்தி யடிகள் முதலியோர் சென்றனர். ஆனால் விளைந்த பலன் ஒன்றுமில்லை.

வட்ட மேஜை மகா நாட்டிலிருந்து திரும்பி வந்ததும், காந்தி யடிகள் ஹரிஜன இயக்கத்தைத் தீவிரமாக ஆரம்பித்தார். தீண்டாதாருக்குப் பல கோயில்கள் திறந்து விடப்பட்டன.

அவர், காங்கிரசிலும் காரியக் கமிட்டியிலும் அங்கத்தினராயில்லாவிட்டாலும், இவருடைய ஆலோசனையின் பேரில்தான், காங்கிரஸ் காரியங்கள் நடைபெறுகின்றன. இவரே, இந்தியாவின் அரசியல் அதிநாயகராகக் கௌரவிக்கப் படுகிறார்.

"ஜோதி" அன்பர்களுக்கு

தற்போதைய ஐரோப்பிய யுத்தம் எப்படி விஷம் போல் பரவி வருகிறதோ அப்படியே காகித விலையும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டே வருகிறது. இந்த நிலைமையில், பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தற்காலிகமாகத்தான் இருக்கும். அது வரையில் வாசகர்கள், பொறுமையுடனிருந்து "ஜோதி"க்கு ஊக்க மூட்டி வருவார்களாக.

மானேஜர்.



கலிலியோ.

மூன்றாவது வருஷம்

"ஜோதி" யின்

பைண்டு வால்யூம்

இரண்டு புஸ்தகங்களாக

தயாராகிவிட்டது.

விலை ரூபா 4—8—0

தபால் செலவு

பர்மாவுக்கு 0 - 6 - 0 இந்தியாவுக்கு 0 - 8 - 0

மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2

தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,

47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932ம் வரு ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளிவருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள் சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய சகல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ.	4-0-0
பர்மா :	ரூ.	4-8-0
வெளிநாடு:	ரூ.	6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர்

மதராஸ்